பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# மஹாரிபத்து மாலை.

இஃது

மலையாளத்தைச்சார்ந்த

தற்கலை மெஞ்ஞான சொரூபராகிய

## பீர் முஹம்மது ஸாஹிபவர்கள்

திருவாய்மலர்ந்தருளியது.

காயற்பட்டணம்

**கண்ணகுமதுமஹ்து முஹம்மதுப் புலவர்**

அவர்களால் நன்குறச் சீர்திருத்தப்பட்டது.

சென்னை - திருவல்லிக்கேணி,

**ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,**

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

இதன் விலை] 1948 [ரூ. 1-0-0.

# பிரசித்திப்பாயிரம்.

## நாலடியகவல்.

சோதியா யெவர்க்குஞ் சுளுவில்மோட் சந்தரு
பாதிரு மஹரிபத்துமா லையினை
நீதியா யச்சிட நிகரிலா துற்ற
ஆதிநாயகனை யனுதினந் தொழுவாம்.

## வசனம்.

எல்லா வுலகங்களையும் உயிர்களையும் படைத்தாளுகின்ற வல்ல நாயகனான அல்லாஹுத்தஆலாவின் கிருபைத் தோழராகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஷபாஅத்துக்குரிய மூஸ்லீமான நமது உடற் பிறந்தான்மார்கள் யாவருக்குமாகிய ஷரீஅத்து, தரீக்கத்து, ஹகீக்கத்து, மஃறிபத்து என்ற இந்நான்கில் எளிதில் மோட்சகதியைத் தருகின்ற மஹரிபாவென்னும் நாலினை மலையாள மண்டலத்தைச்சார்ந்த தற்கலையில் வாழுமெய்ஞ்ஞான சொரூபராகிய பீர்முஹம்மதுஸாஹிபு என்பவர்கள் தங்கள் திருவாய்மலர்ந்து தமிழின் மாலையாகப்பாடிய மஹரிபத்துமாலையை நாங்களெளிதில் அக்கீதாமுறைவழியறிய வேண்டுமாகையால் ஒழுங்குற அச்சிலிட்டுத் தரவேண்டுமென்று சிலர் விருப்பங்கொண்டமையால், சில பாடலைக்கொண்டும் சில சில பழமையாகிய ஏட்டுப் பிரதிகளைக் கொண்டுஞ் சில அக்கீதா, ஞானவான்களைக் கொண்டும், அறபாகிய மொழிகளுக்காகவேண்டிக் கனம்பொருந்திய உலமாக்களைக் கொண்டும் பரிசோதித்துப்பார்வையிட்டுக், காயற்பட்டணம் கண்ணாஹ்மது மஹ்தூம் பிள்ளையவர்கள் குமாரராகிய மஹ்தூ முஹம்மதுப் புலவரவர்கள் முயற்சியால் அச்சிற் பதிப்பிக்கப் பட்டது.

இதில் யாவருக்கும் விளங்கும்பொருட்டு, அறபாகிய மொழி
களின் ஓசைபலுக்காத வெழுத்திற்குச் சரியாக சிலவிடங்களிற்
கிரந்தவெழுத் தமைத்துஞ், சிலவிடங்களில் தமிழ் எழுத்தை யிரட்
டித்துஞ் சிலவெழுத்துக்களை யொற்றுக்கியுஞ், தொடர்பாகிய
வெழுத்துக்களைப் பிரித்து மமைத்ததாகையாலும் அன்றியும்.
மெய்ஞ்ஞானிகளின் வாக்கியங்க ளிலக்கண விலக்கியங்க ளெதுகை
மோனை பிறழ்ந்துவருகினும் ஞானகோட்பாட்டின் முறையே அவ்
வாக்கியங்களை, விலக்கண கோட்பாட்டாற் குற்றமென்று கொள்ள
லாகாதென்று பழமொழி கண்டமையால் இங்ஙன மிந்நூற்சொன்ன
மெய்ஞ்ஞான வாசிய, இலக்கண விலக்கிய வெதுகைக் கோட்பாடே
தொடராகியும் இந்நூலிர் சிலசில விடங்களிற்கூறிய ஞான தந்திரங்
கள், அறபுப்பாஷையாலாகிய வேதமொழியாதலாற், சிலசில விடங்
களிற் குறில் வேண்டியவைகளுக்கு அவ்வொற்றுப்பிறழ்ந்து நெடி
லாகியும் நெடில் வேண்டியவைகளுக்கு அவ்வொற்றுப்பிறழ்ந்து
குறிலாகியும் இன்னும் குறில்கூடியும் நெடில் குறைந்தும் நெடில்
கூடியும் குறில் குறைந்தும் வல்லின வொற்றுப் பிறழ்ந்து மெல்லின
மாகியும் மெல்லின ஒற்றுப் பிறழ்ந்து வல்லினமாகியும் தந்நகரம்
பிறழ்ந்து நன்னகரமாகியும் நன்னகரம் பிறந்து தன்னகரமாகியும்
ரகரம்பிறழ்ந்து டகாமாகியும் ணகரம்பிறழ்ந்து னகரமாயும் னகரம்
பிறழ்ந்து ணகரமாயும் இன்னும் சிலசில வொற்றுகள் பிறழ்ந்து வரு
கின்றமையால் அதனதன் பொருட்குறி கொண்டமைந்ததென்று
கொள்க. அன்றியும் நோட்டந்தப்பி அச்சுமாறுட்டமாக ஓரெழுத்
துக் கூடினும் குறையினும் மேல்விளங்கு கீழாகினுங் கீழ்விலங்கு
மேலாகினும் ஒன்றுகிய வெழுத்திற்கும் நெடிலெழுத்துக் கோட்டிற்
குஞ் சுழியுண்டாயிருக்கினும் படித்துவருகையில் வரிகளிற் காணப்
படுமாகில் அங்ஙனமுறைபோலே அமைத்துக் கோடலும் இன்னு
மிப் புத்தகங்களைக்காணிக்கை வைத்துக்கையாட்சி கொள்பவர்கள்
இங்ஙனம் அச்சிட்டமுறையே பாவினெதுகையிற் படிக்கும்போது
குறில்கூடினுங் குறையினும் நெடில் கூடினும் குறையினும் அதனத
னமதிகண்டு இராக்பரீட்சையை யுயர்த்தியும் தனித்தும் படித்துக்
கோடலுமாம். அவர்களையாம் விரும்புகின்றனம், இவற்றை
நன்குணர்ந்துகொள்க.

## சாத்துகவி.

ஷை முஹம்மதசனென்பவர் பாடிய
இரட்டை ஆசிரிய விருத்தம்.

முன்னமஹ தத்தாகி முத்திவித் தருமமு
முதிர்கதிர்ப் பச்சையொளியாய்
முடியா வணக்கமா யொன்று யிருந்துபின்
முப்பதில் நிறைந்தஜிந்த
தன்னதெவை யவைகளுக் குயிராகி யுடலாகி
யன்பா யுறைந்தநாளு
மாணிெனாடு பெண்ணன்றி யலியென்றுமில்லா
தடங்கா தொளித்தநாதன்
றன்னையறி வித்திடும் மஹரிபத் தென்பதொரு
தக்கபுகழ் கவிபாடினர்
தரணிபுகழ் மலையநகர் தக்கலைப் பதிதனிற்
தங்கியுறை கின்றநாதர்
மன்னுதிரு வேதத்தை வழுவன்றி யுணருபீர்
முஹம்மதுசொல் மஹரிபத்தை
மாநிலத் துறைகின்ற மாக்களே யனுதினம்
வாயா லுரைத்துவாழ்வீர்.

---

ஷை கண்ணஹ்மதுமஹ்மூது முஹம்மதுப்
புலவரவர்கள் பாடிய

## வெண்பா.

இக்நூ றெளிந்தவர்கட் கேகாந்த சோதியரு
ளெக்நா ளினும்வக் தெய்துமே—முன்னோன்
றிருவொளிவே காண்பார்கள் தேசிகராய் நாளுங்
குருவழியே நின்றூர் குறி.

முற்றிற்று.

---

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களியற்றிய
தீனிலிஸ்லாத்தி னிலையாகிய ஷரீஹத்து தரீக்கத்து
ஹகீக்கத்து மஹரிபத்து ஆகிய இந்நான்கையும்
அறிந்து தெளிந்த மலைபாள மண்டலத்
தைச் சார்ந்த தற்கலையப்பதி

மெய்ஞ்ஞான சொரூபராகிய

# பீர் முஹம்மது ஸாஹிபவர்கள்

திருவாய் மலர்ந்தருளிய

# ம ஹ ரி ப த் து மா லை

## முதலாவது பொருட்பால்

### காப்பு.

பொன்னுலகு சூழும் புகழிறசூல் சொன்னபடி
பொருட்பா லருட்பால் காமப்பாலுஞ்
சொன்னமுறை யெழில்பெருகுஞ்ஞானோர்க ளெல்லாமறிய
வியம்பினேன் மஹரிபத்து மாலையிதாம்
எண்ணிலங்கும் பெரும்பொருளை யெழுப்பிநிலை
நிறுத்தியபீர் முஹம்ம தென்போன்
நின்னயத் திலிலங்கு பொருணிறைந் திருக்க
நிலைநிறுத்து நீதிறப்பில் ஆலநீனே.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# மஹரிபத்து மாலை.

ஆதிபெரியோனே தம்பிரானே யவனி யடங்கலும் படைத்த வனே, யோதிப்புகழுயா னுனக்கடிமை யுலகநிறைந்தவா வொளித் தாயெனிற், சோதியிருதயங் குறையாமலே சொல்வேன் முஹம்மது மஹரிபத்தை, நீதி தெரிந்தோருந் தீனிலாக நிகழ்த்த வுலகெல்லா முதவி செய்வாய். (1)

உலகம் படைத்தவ னொருவனுயனுரிய படைப்பெல்லாந் தான் படைத்து, நிலைமை தவிராமற் படைப்பனைத்தும் நீதி யவன்றனை வணங்கவேண்டிக், சலையிலிறக்கினன் கண்டறியக் கருமமறியார் கள் காபிராகும், விலகுவாரிறை யருளைவிட்டும் வேத முஹம்மதின் பெலனுமில்லை. (2)

பெலனிலாகாத குபிர்தானும் பேசிடும் பொல்லாச் செயலோர் களும், நிலைவின் பொருணீக்கிந் பல ஞானத்தை நினைத்தே யுடை யோனை நினைவுகொண்டு, நிலையி லொருகோடி வருடனின்று நினைவு வாக்குடன் வணங்கினனு மலையின் குகையுள்ளே யானந்தகால மண்ணினறையுள்ளே மாளிகையின். (3)

மாளியிருளுக்குண் மண்டபத்தின் மானங்குலையத்தா னுடை யில்லாம, லூழிநெடுங்கால மூலகிழிந்தே யூனுஞ்சுகமற்றிங் கொடி யோடி, மாளும் வருடத்துக் கொருமூச்சுத்தானனையுமழை வெயின் மலையிலேறிப், பாழுங்கிணற்றிலே தலை கீழாகப் பயந்து நடுங்கியே மனங்கலங்கி. (4)

கலங்கியழுதாலுங் கடனீர் மட்டுங் கற்பமருந்தியு காட்சி கண்டே, யிலங்கும் பொருணிலை யறிந்திலார்க்குங் கெல்லாத்தவ மூமேயழிவதாகும், நலங்குந்தீதாரும் ஷபா அத்துட னல்லபதவியு நல்வழியும், விளங்கிச் சுவர்க்கத்தை நரகந்தன்னில் வீழ்வாரே தென்னூல் விளம்பக்கேளீர். (5)

விளம்பக் கேளுங்கா ணுலகத்தோரே வேத மிறக்கிய பெரிய நாயன், தழும்பில்லா நபி தமைப்புகழத் தக்க கலிமாவின்படி நடக்க, களிம்பில்லாததோர் கலிமாவுந்தான் கதவு சுவர்க்கத்துத் திறவு கோலாங் குளம்பிமனதிலே பறியார் குபிர் கூறுங் திறவுகோ லில்லாததால். (6)

ஆனபடியாலே குபிரோரெல்லா மறுக்து பூவியா யழிவதாகு மீனமணுகாத நாயன்றனு மிறசூல் முஹம்மதைப் பார்த்துச் சொல்வான். ஏனுஞ் சுவர்கத்தா னரகிரண்டி லெதுவே னுமக் கென விறசூல் சொன்னர், மான நிறைந்திடுஞ் சுவர்க்கமென்க மன்னனிறையவன் கொடுத்தே னென்றான். (7)

கொடுத்த சுவர்க்கத்தை மறுத்தும் வாங்கக்கொடுத்தே னிரு மொழி கூறவில்லை, யடுத்த நரகந்தான் குபிரோர்க்கென்றே யாதி பெரியவ னருளிச்செய்தான், விடுத்த குபிர்தீனே ரெவரென்றாலும் வேத முஹம்மதின் ஷறகை நீக்கிக், கெடுத்தசெயர் குபிர் வணக்கத் தோர்க்குக் கிடைக்கு நரகல்லால் சுவர்க்கமில்லை. (8)

சுவர்க்கஞ் சேருவார் குபிரோரென்று சொன்னவுடன் காபி ராமவனு, மிவர்க்குமொருதரந் தவுபாச் செய்தே யிழகாதீமானை நிறுத்தவேணு, மவர்க்குந் தவுபாவைச் செய்யாதாலு மாதிறான் மாறிக் குபிரானலு, மிவர்க்கு நரகல்லால் சுவர்க்கமில்லை யென்றார் முஹம்மது நபி யிறசூல். (9)

நபிகள் பெருமானும் நவச்சுடராம் நபிநாயக மானவள்ளல், புவியில் புறுக்கானைப் பார்த்துச்சொன்னர் போதமிமாம்களுமிதின் கித்தாபின், கவியாமஹறிபா ஆரிபீனிற் கண்ட விசளத்தைக் கவி தையாகத், தவியாவமுதான மஹறிபத்துத் தானுமெனச்சொல்லி நவிலலுற்றும். (10)

நவில் வாருலகத்தில் தீனேரெல்லா நல்ல பொருளெல்லா மறிந்தோமென்பார், புவியிலருட்பாலும் பொருளின் பாலும் புகலுங் காமப்பான் முப்பாலையுங், கவியிலறிந்தார்போ லெல்லாஞ் சொல் வார் கடுகு போன் மார்க்கங் கண்டறியார், தவியாப் புறுக்கானிற் சொன்னபடி தமிழாலுலகத்தி லறியச்சொன்னேன். (11)

# கலிமா விளக்கம்.

சொல்லுங் கலிமாத்தான் லாஇலாஹ இல்லல்லாஹு வென் றியம்புவது, நல்ல ஷறகுட னெழுத்தீராறந் நான் மூன்றெழுத்தையு நவிலக் கேளுநர், தொல்லை யணுகாத முஹம்மதுற் றஸூலுல்லாஹி யென்றியம்புவது, மெல்லா மறுநான் கென்றிடு மெழுத்தா மிணைத் கலிமாவி லியம்புவதே. (12)

இயம்புங் கலிமாவின் முஹம்மதுற் றசூலுல்லாஹி யென் றெழுத்தின் பொருணயம் பெறப் பின்னுற் சொல்லுகிறேன வில்லா இலாஹ இல்லல்லாஹ் வென்று, லியம்பு மீராறென் றெழுத்து மாகு மியல்பாமறு நான்கு மிதுகலிமாப், பயமிலாமலே செய்வதற்குப் பறுலு நாலுண்டும் பகரக் கேளீர். (13)

பகருங் கலிமாவை யுரைக்கும் போது பலதும் நினைவினினி னைந்திடாம, னிகரிலாமனத் தொரு நினையாய் நிறுத்தி வாயினு லுரைக்க மூக்கா, லுகருங் கலிமாவி லருத்தம் பொரு யுவந்தோ யறிவது பறுலிரண்டா, மிருகங் கலிமாவி லருத்தப்படி யிதமாய் நடப்பது பறுலுமூன்றே. (14)

மூன்று பறுலையு மறியச் சொன்னேன் மொழிகியேனுலாம் பறுலையுந்தான், றேன்றுங் கலிமாவின் முஹம்மதுற்ற ஸூலுல் லாப் பொருட் பின்றுற் சொல்வே, னுண்ட பெரிவன் லாஇலாஹ இல்லல்லாஹு வென்றியம்புவது, வேண்டும் பன்னிரண்டெழுத்து முண்டும் விளம்பக் கேளுங்கா ணறிவு தன்னை. (15)

# பன்னிரண்டின் விபரம்.

அறியும் பன்னிரண் டெழுத்தையுந் தானறைந்திட்டேன் றிரு நெறிநீதியி, லுறையாந் திருநெறி யறியா மூடர்க் குரைக்கி றேனிதிற் சுருக்கமாகச், செறியும் பன்னிரண்டறிவு தன்னிற் செப்புவேன் முதலறிவைக் கேளுங், குறியா யிறைவனை றனையறி யக்கூறுங் கலிமாவினெழுத் தொன்றாலே. (16)

எழுத்தை யிருத்தினாற் கமலத்துள்ளே யிலங்கும் பொருள் றப்பில் ஆலமீனாஞ், சுருத்து மூச்சாக வெழுந்த சோதிச் சுடரும் யாகூவென்றெழுத்து மாகு, மழுத்தி மேல் விழி நிலையை நோக்கி யருளை யறிவது முதலறிவாம், ஓழித்துப் பதுக்கின்ற வறிவு தன்னை வோது வேன்ரண்டா மறிவைக் கேளும். (17)

அறியு முடலதை முஹம்மதுற்ற ஸூலுல்லாஹி யென் றட் சரத்தாற், றறுகாச் சுருபமா யுடலமைத்தான் சாற்றுங்கோட்டைக் கங்கரசு நாயன், குறியா முகந்தனில் விழி நடுவிற் கோர்க்கு முயிர் றப்பில் ஆலமீமு யுறுவோன் மலக்குக ணாலுபேரு முடையோனே வலை யுரைக்குகிறேன். (18)

உரைத்த வுடலதி லைந்துவீடு முவந்த பேச்சுடன் மூச்சு கேள்வி நிரைத்த பார்வையு முயிர் நிலையு நீதியெழுத் தைந்தும் நாசிறைந்தும் விரைத்த பொருட் பாவினுரைக் கொணாது வெளியா யருட்பாலினினி மேற் சொல்வேன், றிருத்து மிருவகை யறிவது தான் செப்பினேன் ரண்டா மறிவிதாமே. (19)

அறிவா மூன்றதை யருளக் கேளு மாதி பெரியவன் வேதனாலு மறையுஞ் சுருபுகள் பல ஞானமு மாதி பெரியவன் வசனமென்றுங் குறியும் வகையுள்ள பொருள்களெல்லாங் கூறுவானீத மொன்றிருப் பதாலே, மறையின் வழியெல்லாஞ் சரியே யென்று மனதினினைப் பது மறிவு மூன்றே. (20)

மூன்று வேதந்தா னிறக்கினது முன்னுள்ள நபி யனை வோர்க் குந்தா, னாண்ட பெரியவ னொளியில் நபி யன்ன ரூபமா யிருந்த போது கூண்ட பெரியவ னபியைக் கண்டு கூறு முஹம்மது தீனி லானார், தோன்று நபி கண்முன் னொளி யொன்றாலே தொகுத்தார் சரியென்னு மறிவு நாவாலே. (21)

நாலாம் வேதத்தி லிறையோன் சொன்ன ஞானோக்கியாமத்து னமை யெழுப்பி, யாலம் படைத்தவன் றிருமுன்னக வைம்பதா யிரம் வருட மோர்நாள், கால்கை யுறுப்பெல்லாஞ் சாட்சிசொல்லக் கூடிய மருஷறிற் கனத்த நன்மைப் பாலங்கடந்துதான் சுவர்க்கஞ் சேர்வார் பகரு மறிவஞ்சா மின்னனங்கேளீர். (22)

அஞ்சி டாப்பாவஞ் செய்வதெல்லாம் அஜாசி றனேச்சேரும வனு வந்தே, யெஞ்செய லிந்தவடியோனென வெளிய நரகுக்கங் கழைத்துச் செல்வான், மிஞ்சிடநன்மை யிறையுவந்து மீசான் றிராசினிக் கனத்தால் நன்மை, யஞ்சிடா தேட்டை வலதுகையி லருள் வனிஷ்தறி வாரூகுமே. (23)

அறியு முலுமுழுக் கவுலற்காகு வந்தக்கவுலல் நீர் சுடாதப் போது திரிந்தங்கலேயாமல் சுவர்க்கஞ்சேர்வார் நீங்கு பெருமைபொய் ஹறும் பகீலும், பொருந்தி ராமணம் பளிங்கியாகும் பொன்னூர் சுவர்க்கத்தி னமுதருந்த, நிறைந்த கசடர்க்குஞ் செரிக்காதென்ற நீதியறிவிலே தேழாகுமே. (24)

என்றுந் தொழுகையி லறியுநோ மிணையமவுத்துக் கங்கதா மில்லாதார், சென்று மலக்கலின் மவுத்தைக் சேருஞ் செய்யுமிலு நாகரவுதேட்கா, மொண்டாவுலகீரு மீக்காயீற்காம் ஜிபுரீல்க்கின்ன அன்ஸல்னுவுமாம், நன்றும் வாங்கி சுறுபிற்காகு நவிலுங்காமத்துக் கொடி நிழற்கே. (25)

கஃபா தனேச்சேருங் கிபுலாநிலே கத்தன் மஹ்மூது தக்பீர் துஆ ஈகில் முந்தஹா மூன்றுந் தோன்று மேகநிலே சேருங்கிழு அத்தோ தல், தவுபா லெவ்குக்கா மூங்கர் நமக்கீர் தம்மைச் சேருமாம் றுக் கூகு செய்தல், சகவாச வானசஜதாச் செய்தல் தக்கபிதா ஆதந் தம்மைச் சேரும். (26)

சேருஞ் சமதாள மின்னிருப்புச் சிறந்வ குறுசத்த இய்யாத்து வுஞ், கூறுங் காத்தபீன் இருமனுக்குங் குணமா யிணைந்திடும் சலா மிரண்டு, மாறுந் தவ்பாவும் கலத்துக்காகும் ஆமீன் கணக்கில்லா விண்ணோர்க்கென்று, மேறும் வலக்கையிற் றசபீதொட்டா விபுலீ சனுகாத குறடாகுமே. (27)

ஆகும் சலவாத்து மஹ்ஷர் தனி லங்கர் தளம்பாத பெலத்துக் காகு, நாவா லுரைத்திட்ட பாத்திஹாவு நமது குலத்தார்களிறந் தவர்க்காம், பூவின் மாலைபோ னபியிறஸூல் புயத்திற்றரித்திடுஞ் சுன்னத்தெல்லா, மேவும் செம்பிலி குறுவான்செய்ய வினையு மிக மாயீல் நபிக்குத்தானே. (28)

தானம் பகர்குரு ஞேதிவிக்கத் தனிமைக்கபுறினில் வெளிச்ச மாகு, மேனி தனிலேறிக் கொடுப்பதெல்லா மிணையும் வழிக்காவற் காரர்க்கும், பூணும் வியாறத்து நசறுதோஷப் பென்னூர்வழி காணப்பொருளுமாகு, மீனமணுகாத ருலகத்தோர்க்கு விளம்பினே னெட்டா மறிவிதாமே. (29)

ஆன முதல்கணுற் பதிலேயொன்றை யளிக்க வெளியோர்கட் கிதலக்காத்து, வானந் திராசுக்காம் நன்மையேட்டை வாங்கிவலக் காத் தீயப்போதும், பூனம் மினத்தோருக் கிவதெல்லாம் பொறி யின் மாலிக்கு கோபமாறத், தானேயுலகத்தை யிழந்தோர்க்கியத் தருத்தி னிறைமுன்னே சேருமதே. (30)

சேர்ந்த வினமெல்லா மெழியோர்கியச் செம்பொற் பதி செலும் வேளைதனிற், காந்திக்கிதுமீலைங் கடியகாய்க்கிது கத்தாவழி தனைக் காட்டிவைக்கும் வாழ்ந்த சுர்வக்கத்தி லிருப்பாரென்று வள்ளல் முஹம்மது நபிதாஞ்சொன்னர், மாந்த ரறியவே தமிழி னாலே மகிழ்ந்திங் குறைத்திட்டே னறிவொன்பதே. (31)

ஓன்பதா மிலேதொருபலேது முடையோன் பறுலுக்காய் சோன்புவைக்க, வின்பமுடன் கோபம் ஹறும்பகிது மெவர்க்கு முதாசன முறைத்திடாம, லன்பின் கயல்விழி கூறுல்கிளையனையுஞ் சுகமொன்று மறியமாட்டா, ரின்ப சோன்பில்லா வுலகத்தோர்கட் கேழையான் கூற வின்னங்கேளீர். (32)

இன்னம் யமலானி லோரிரவி லிறையோன் லைலத்துல் கதிரியா குர், தன்னில் வணக்கந்தான் மஹ்ஷர்தனிற் ரூபங்களை யோட்டும் வருத்த மாற்றுஞ் சொன்னவகையறி பத்துமிதே சுகமாம் அறபா வில் ஹஜ்ஜு செய்யப், பொன்னூர் பகையான ஈரகந்தனைப் பொங்கா தடக்கிடும் அரவுந்தேரும். (33)

தேனுமரவுமே தீண்டாதின்னர் தீனோர்க் குபகாரஞ் செய்வ தெல்லாம், வானிற் சூர்மையாம் பாலவழி வானினிடங்காணும் வெளிதொலையு, மூழிலுளபதி னென்றுஞ்சொன்னே னுரைக்கும் பனிரண்டா மறிவைக்கேளு, மாளுந் தகப்பன்றாய் தனைவணங்க வாதிபெரியோனைச் சேருமன்றே. (34)

சேரு மிறையோனைத் தகப்பன்றாயைச் சினக்கிடாமனஞ் செய்யுஞ்செய, லாரு மிசுலாத்தி னடையாளம்பத் தறிவு பனி ரண்டா யருளினது, கூறுந் திருநெறிப் படலநாலிற் கோர்க்கும் பனிரண்டாந் தொகுதிதனி, லாறு பனிரண்டு பதினாலிது மறை யும் பதினைந்தில் வழியாய்ச் சொன்னேன். (35)

சொன்னேன் றிருநெறி நீதந்தனிற் சோகமணுகாத படலம் ரண்டி, லின்னம் பதின்மூன்றாந் திட்டந்தனி லியம்புனேன் காணி யாகும்வாறு. மன்ன வறிவார்களைம்பத்தொன் றி லறைந்த பதினா லாந் திட்டந்தனி. லுன்னிடுமிமாம் கத்தீபுதம் முண்மைதான் பத் தொன்பது முரைத்தேன். (36)

உரைக்கும் பதினாலாந் திட்டந்தனி லோதினேன்றீன ருயர்த் தியெல்லாந், திறத்தி னாற்பத்தெட்டறிவுமாகுந் தீனோரிருநூற்றைம் பது மறியத், திறத்தின் வகையான திருநெறியைத் தெளிவாய்ப் படலநால் முழுதறிய வுரைத்தபடியேதான் றீனோரெல்லா முலகி னடப்பது பொருட்பாலிதே. (37)

பொருட்பால் முற்றிற்று.

ஆக திருப்பாடல்—37.

# இரண்டாவது அருட்பால்.

இதுதான் பொருட்பாலென் றறிவதாகு மின்னர்தவமுறை யெளிதாய்ச்சொல்வே, னிதமுந் தொழுகவே வலுமையில்லா னிலை வில்வணக்கர்தா னிலைநித்த, மதினுமுஹம்மதை நாயன்றனை மகிழ்ந்து புகழவும் வம்பகற்றி, நிதமுந் தகப்பன்றாய் தனைவணங்க நிகரிலாப்பலன திகந்தானே. (38)

தானே கஃபாவில் ஹஜ்ஜுசெய்யார் தலத்தில் வெள்ளிகாட்ப கற்றெழுக, வான பீசபீல் வெட்டமாட்டா ரறிவுபடித்துத்தான் கொடுக்கப்போதும், வானோ னறஷோடு கஃபாத்தனை வையமனு வோர்கள்செய்யவேன்றால் வானோன் வணக்கத்தையுலகத்தோர்க்கு வருத்தி யிணைக்கியே திருத்திவைக்க. (39)

வையம் பலநோன்பு பிடிக்கமாட்டார் வாய்வம்பளக்காம லிருக் கப்போது மெய்யாகிய ஆலிமாகமாட்டா ரெவர்க்கு முஹப்பத்தா யிருக்கப்போதுங், கையால் கைறொடு ஸக்காத்தீய்யார் ஹறுமா முடைமையை விலக்கப்போது, மையம் பலதருமங்கள்செய்யா ராதாய மின்றிக் கொடுத்து வாழே. (40)

வாழ வுபகாரஞ் செய்யமாட்டார் வாழ்வோர்க் கிடர்செய்யா திருக்கப்போது, நாளெல் லாங்குறுனேதமாட்டார் நாலுதிர்நிதம் குல்கூவோ, வாழுமிரவெல்லாந் தொழுகமாட்டார் வடிவு ஹறுங் கண்டால் விழியைமூடே, வாழுமிறை தீதார்காணமாட்டா ராகச் செயல்வாரா திருக்கப்போதும் (41)

மார்க்கமறிவுகள் படித்தறியார் மனதிற் கசடில்லா திருக்கப் போது, மூக்கமுடைமானங் கொடுக்கமாட்டா ருதாசினஞ் சொல் லாதிருக்கப்போது, மார்க்க மதிலொன்று மறியமாட்டார் மையித் தொரு நேரங் குளுப்பாட்டவு, மாக்குங்கிடையாதே யின்னமொன் றிங் கல்லா பொருளைத்தான் கொள்ளை யிட (42)

கொள்ளேக் குமியலா மல்லா பொருள் கொடியபாவிக்குர் தவத் தோர்க்குந்தா, ஹுள்ள வயதெலாம் ஹஜ்ஜுப்பல ஞெருநாட் கொரு கொடி ஹஜ்ஜுப்பல, னெள்ளுமலேபோலே யெண்ணிரிதே யெக்கால முமுள்ள மூழக்குந்திரும், பள்ளிதனில் ஸஞசாக்கிடத்திப் பந்தி யாய் நின்று தொழுதபேர்க்கே. (43)

தொழுதோ ரெடுத்தவர் துயில்கொடுத்தோர் தோலுந்தலேமே ஹஞ் சுமர்ந்தோர்க்குந்தான், முழுது நீர்விட்டு முழுகாட்டினேர் முன்னுலேயிமா மாகநின்றே ரவிதோரை வேண்டா மெனவே சொன்னேராழக் குழிகல்வி யடக்கிவைத்தோ, ரெழுதமுடியாதே யிவர்கள் பலனீமா மூக்குப் பலன் பத்தாகுமே. (44)

---

# இமாமுடைய நிலே.

பத்துக்காரிய மில்லாதவர் பகரிமாம் செய்யப் பாவியாவார், நித்தம் ஷஹறிலே முழிக்கவேண்டு நோந்தவறுமற் றெழுகவேண்டு மர்த்தம் பொருளெல்லா மறியவேண்டு மடுத்த சுன்னத்தை விட வொண்ணுதா, முத்துவுடுமான மூன்ஹலாலா யொழுகும் பனி ரண்டு நிலே பொருந்திக், கத்தனறிடன் ஹலாலேப்பார்த்துக் கடுத் தமுழுக் காளிசாக வேண்டும். (45)

ஆக வீரைந்தா மமல்பொருந்தி யஞ்சியிமாமஞ்சி கிபுலா வுடன் வாகின் மிகுருபு மைந்தறிய வளமாம் பதினேந்து மிமாமு நிலே பாகுஞ் சரீரமு முயிரும் புத்தி பகுமு நினே வைத்தும் பாபிர மாம்; வாகின் கிபுலாவின் கருபாவினேர் பைத்துல் மகுமூறு குறுஷறுசாம். (46)

ஆரு நினேவந்து கிபுலா நினேயைந்து மிகுருபு மமனேந்தாகுமே யேக இஸ்லாமு மூமினுமா மில்மு பொருந்திய விலேதந்தாகும் மாகு மூமின்க ளறிவுமைந்து பாஸக்கானவர் செயலுமைந்தா மாகிச் செயல் தன்னி மூமின் செயலேந்து மறிந்தவா மூமினுகும்.(47)

---

# பாவலக்காணவர் செயல்.

ஆகு முலகெல்லா மலைந்தலைந்தே யந்தி தனில்மனை யுகந்தபாவி
தாக முலகொல்லா மறுந்திட்டாலுந் தனிமை கபுர்நிலை மூமினுக்கே
யாகுந் துனியாவை யுவந்தபாவி யாகிர் நிலைநின்றோர் தரங்கள்மூமி
னாகும் ஹயாத்தையே யுவந்தமூமி னவனையுவந்தவர் மூமினாமே. (48)

மூமின் றனமெல்லா மழித்து வைக்கு முடுமைப் பாவத்தையு வந்தபாவி, சீமான் றனஞ்செயு நன்மைதனைச் சிந்தைதணில் வைக்கு மூமினென, ஈமா னிலையுள்ள மூமினென்று மிவரே யிமாமத்துக் குகையமென்று, மாமீனூர்மக ளூலநபி யண்ணல் முஹம்மது நபி யுரைத்தார். (49)

வேறு.

நபியா முஹம்மது மார்க்க மெல்லா நமக்கு நடக்கின்ற விதங்க ளெல்லா, நபியா முஹம்மதுக் கிடையோன் சொன்ன ளுஹுஇமாமு நக்நபி சொற்படி, கவியின் பலஞானங் தவரியுங் கருத்தின் ஷரீ அத்தின் வகையுளதும், புவியின் மனுவெல்லால் நடக்கும் வகை புகன்றாருதப் பொருதப் பொருட் பாலிற் சொன்னேன். (50)

பொருளின் பாலிலே யறையச் சொன்னேன் புல்லு மருட் பாலின் பொருளுரைப்ப, னிருலை விலக்கிய கலிமாத்தனி வியம்பு மிருபத்து நாலெழுத்து, மருளச் சறகுநாண் கறிவதுவு மாதிபெரி யோனை யறிவதுவும், பொருளின் புகழ்ச்சியின் புதுமையெல்லாம் பிரித்து விபரமாய் விளம்பலுற்றேன். (51)

விளம்பக் கேளுங் காலுலகத்தோரே வேத பெரியவன் றனி யோனுமாங், தழும்பில் லாநபி தாபரமாங் தக்ககலிமாவு முயிர்நிலை யாங், கழிம் பில்லாததோர் மலிமாவுந்தான் கதவு கமலத்துத் திறவு கோலா, மெழும்புஞ் சுழற்சுற்றை றறியார்குபி ரிலங்குந் திறவு கோலெழுத்தானதால். (52)

ஆனபடியாலே யறியா ரெல்லா மறுந்த பாவியா யழிவார் திண்ண, மீன மணுகாத நாயன்றூனு மெல்லாம் படைப்புக்கு முன் ஞகினன்; ஞனே தானவ ணுடனுயிராய் தாத்தில் அனைத்துமே நிறைந்த நாயன், வானத் துயர்ந்தவ ஞெருவனுக வைய மணைத் துமே சமதாயினன். (53)

சமதாய் நிறைந்த னென்றெவருஞ் சொல்வார் சமது நிலைய தின் விதமறியா, ரிதமாமிருவிழி யொளி யாதொரு மின்ன மிருள் காற்று நிரம்பி நின்ற நிதமுங் குதறத்தைப் பொருந்தி பார்த்தா னிற்கு முலகெல்லா நிறைந்த சோதி, பதியினிலை யெல்லாங் கலிமா வினுற் பாங்காய்ப் பலமொழி யொரு மொழியாம். (54)

மொழியா மொருவொளி யகன்றசோதி முழியி ஞெளிவாகும் விருக்ஷமாகுந் தெளிவாய் விருட்சமா யகந்தங் கோடி திரண்ட கனியால் மிருண்டு லோக, மொளி வால்க்கதிர் மதியுருவ மொன்றிங் குலகினிறைந்திடு முவமை போலக், குழியினெரு கோடி நிறம் பளிங்கின் கோலஞ் சரிகாணுங் கொள்கையாமே. (55)

---

# பீர்நிலை அறியும் வகை.

கொழுகி யுலகெல்லாங் கோர்த்தானிறை குருவின் பீர்நிலை குறித்து நின்ற, வழியின் விழிதனைத் தழுவி பார்க்கின் வானம் புவியேது வரையு மேதிங் கொளிவு தெளிவெல்லா மொன்றுமிந்த வுலகினு யிரியாவு மொருவனென்று, வெளியாய்த் தரித்த பின் சமதுடைய வேச நிலையாகும் வாசத்தாலே. (56)

ஆலமமைத்தவ னஹதொருவனுலப் சமதாகும் மவனெளி வாங்கோலரூப முன்னரூபமாகுங் குருவாம் பீரதித் குடியானதால், ஆலம் ஹசுகறில் ரூபரூப மாலம் அக்குபறுமறிவு நிலை, கோலத்து யிரெல்லா மரூபத்துள்ளே கோர்க்கு நினைவிலோ கொழுந்து புகை. (57)

வேலை யமைந்திடுந் திருவுளந்தான் வேலை நிறைந்ததும் விலகு வதும், பாலன் ரூபமாய்ப் பிறந்திப்போ பாத்தை மறைத்தது பஞ்ச பூதம், ஆலஞ் சமதான அலிபு நிலை யாதி யனுதியா மண்ட பிண்டங், கோலத் துருவதி லொளித்திருக்கும் குருவாம் பீர்நிலை தெரியச் சொல்வேன். (58)

தெளியத் திருவுளத் துருவந்தனைத் தெரியும் பளிங்கி நீர் கண்ணாடியா, லுருவந் தெரியுங் கண்ணாடி தன்னை யுள்ளத் திருத்தியே யுருவறிய, வறியுங் கரையும்மண் பாத்திரத்திலைந்து தலத்திலே தெரியும் ரூப, முருகிப் பாத்திர முடைத்தபோது ரூபந்தெரியாது வொளி குறைவாம். (59)

ஒளிவு ரூபத்தை ரூபத்துள்ளே யுருக்கி முஷாஹதா அஞ்சனத்தாற், கருவை நினைவினா லறிய வேண்டுங் கருவுண்ணினைவுக் குட்கலந்த தென்ன, கொழுகிக் குறுஆனில் ஆலத் தோன்றில் குலிற்றாஹூ மின்னங்ரி றப்பி யென்று, ஒளிவு றாஹூல்லா எவலென்றே வுலமா முஹம்மது நபியுஞ் சொன்னார். (60)

---

## மஸலாக்கேட்கும் விபரம்.

உலமா முஹம்மது நபிவுஞ் சொன்னாருள்ள வுலமாக்கடாமுஞ் சொன்னார், தெளிவாய்ச் சமதான றாஹூதனையிற் தீனோர் குருமாரே யெனக்குச் சொல்லுங் குலமாங் கலிமா வாய் மூளைத்தமாங் கூறும் பணாரும் பூ விலைகாய் பழஞ், சலமாங் கடலிலே மூளைத் தவித்துச் சாத்தும் ஸமதான தாத்தை யெல்லாம். (61)

தாத்து சிபத்துசி பாத்து மூன்று தரிக்கும் விலாயத்து ஷபா அத்தோடு, மெத்த குதறத்து அஹதியத்தோ டிலங்கும் நுபுவத்து இனாய்த்தாகு, ரேத்தி யாயத்து ஹிதாயத்துட னிற்கு மிமாமத்து மிகுஸிதாத்து, எத்தம் லாகூத்துப் பதினாலுந்தானெந்தன் குருமாரே யெனக்குச் சொல்லும். (62)

யெனக்குத் தெரியவே பதினாலுந் தானின்ன தின்ன தென்றே யெடுத்துக் கணக்கில்லாமலே வகையொன்றுக்குக் கொண்ட விபரந் தானின்ன தென்று, மெனக்கு முனக்கவன் றனக்குமாக விந்தப் பதினாலு இல்முஞ் சொன்னால், நமக்கு முலகுக்குங் குருவுமாகு காட்டிற் பதினாலு இல்மிதுவே. (63)

இதுதான் பதினாலு இல்முமாகு மெந்தன் குருமாரே யெனக்குச் சொல்லும், விதமாய்ப் பதினாலு இல்மைப் பார்க்க விரிவுமிரு நூற்றுத் தொண்ணூற்று மூன்று, மிதமா யறிந்தவருலகிலுள்ள

வெந்தன் குருமார்க்குங் குருவுமாகு, மிதனையறியாரைக் குருமா ரென்ரூ லிவரு மவருமே யிபுலீசாகும் (64)

குன் கூடிற்சொன்ன தாத்தாவதுகூறும் தப்கியாத் தாகுமது, இன்னம் றாகியாத் தென்பதுதா னிஸ்தி னவதார மென்னுன்கிது, மூன்று லெழுஞ்சுடர் முஹம்மதிய்யா மூறையு மூப்பது சிபத்து மாகும், இன்னமாறெட்டுச்சி,த்தாகு மிருபத்தைந்துந்தான் ஹினு யத்தாகும். (65)

இறுபத்தாறுதான் குதறத்தாகு மின்னமொருபத்திங் அஹதி யத்தா, மொருபத்தொன்றுதான் ஹிதாயத்தாகு மொருபத்து நாலுநுபுவத்தாகும், ஷருத்து மிமாமத்து முப்பதாகும் ஷபாஅத் தொறுபத்து மூன்றதாகும், அறுத்த மாறெட்டு மானவகை யதியே யெழுந்திரு பத்து நான்கே. (66)

பத்து மொன்றுமே விலாயத்தாகும் பத்துவைந்துமே ஹினு யத்தாகு, மொத்தம் லாகூத்த கெட்டுமாகு மின்ன மிருமூன்று மிகுத்திதாத்து, பத்துமொருநாலு இல்மிதாயபங்கு மிருநூற்றுத் தொண்ணூற்று மூன்று, *மெத்தன் தவுபீக்கு மிதுவேமிச மெந் தன் குருமாரே எனக்குச் சொல்லும். (67)

சொல்லுப் பிறக்கமுன் சொன்னதென்ன சொன்ன வுடனே தித்தொழுதென்ன, வல்லான்கிருபைமுன் கண்டதென்னவருந்தி மூதற்றூனே படித்ததென்ன, எல்லாஞ் சரியென்றஎழுத்துமென்ன விடையின் மவுத்தென்று வந்ததென்ன, பொல்லா இபுலீசு பிறந்த தெங்கே புவியிற் றெரியத்தா னெனக்குச் சொல்லும். (68)

எமக்கு மும்மக்கிடை யிபுலீசொன்ன இபுலீசு ரூப மெதுதான் சொல்லும், நமக்காய் யிபுலீசை நரகு சேர்க்க நாயன்கிருபையா லெறிந்ததாரு, துவர்க்கங் குபிரிபு லீசிடத்திற் றய்யோ னிருந் தானே யில்லையோதா, னமக்கு முயிர்முன்னே யிருந்ததெங்கே நாளை யிறந்தபின் னிருப்பதெங்கே. (69)

இருந்த கடல்நீரை யெடுத்ததாரு வெந்தவிதத்தினு லுருவாகி னேம், பெருகும் ஹயாத்துல்கை பாறுமெது பெரியகடலென்ற பேரெதுதா. னிருக்கும் கல்புக்குப் பத்துநாவுண் டெல்லா நாவுக்

* எத்தன்-எந்தன்.

கும் பேரைச் சொல்லும், இருக்கு மூயிர்க்குத்தாய் மங்குலங்கலெத்தனை மாதஞ் சூல்நிறையும், வருக்கம் பலமேக மொன்பதுண்டே வகையா மொன்பது பிரிவுஞ் சொல்லும் (70)

பிரித்த ஹிஞயத்துப் பதினேர்துதான் பொசித்த வுடலுக்குப் பிரிவுமென்ன, கருத்து நாதன்ருன் விளைவதெங்கே கருணையாசைதான் விளைவதெங்கே, பொருத்தும் ஆசக்குமறிந்ததாலே பொல்லாவெழுத்தையும் பிரித்துச் சொல்லும், வருத்தியென்பது நாதத்தாலே வைத்தையுபிரான வகையுஞ் சொல்லும். (71)

வகையா மாசையு மாசையாலே வல்லோனொளிவுட னபியொளிவு தொகையா யாதம்ஹவ்வா வொளிவுஞ் சொல்லுமெழுத்தெல்லாந் தொகுத்துச் சொல்லுந் தகையா முலகத்து வாழ்வு போலேதானே தானேதா னிருந்ததாரு, பகையில்லாமலே மதலைதன்னைப் பாரிலனுகோபஞ் செய்ததாரு. (72)

செய்யு முலகத்தின் மவுத்தைநாடிச் சேர்ந்து பிறந்தாரைச் சேர்ந்ததாரு, ஐயம்பொருந்திய விந்துநாத மட்டகோணமாய் நின்றதெங்கே, மெய்யா மூயிரோடு பேரிரண மேனியழகுடன் பலஞானமும், வையம், பிழைதுன்பம் விரங்கோட்டி வாதைப்படுவதும் பெருந்துன்பமும். (73)

துன்பம் மவுத்துட னெட்டுவகை தொகையாய்த் தரித்திடுந் தலமுமெது, இன்ப மொருமுத்துப் பவளம்பச்சை யெதினு லமைத்து மூச்சுடரு, மன்பாங் குதரத்து விருபத்தா றுமணியு முடலுக் குஸாவதெப்போ, தன்பால் குதரத்து நடக்கும்வகை தடையில்லாமலே யெனக்குச் சொல்லும். (74)

சொல்லுந் தாய்பங்க தைந்துமாகும் சுரூபம் பிதாபங்க தா றுமாகும், வல்லா னுயிரெங்கே வாய்வுமெங்கே வருந்தஜலமான புவியுமெங்கே, யெல்லாமொன்றுக்கொன் றெத்தனைநாளுருவங் கிழேதானிலையாய்நிற்கு, மெல்லா மெதினுலே பிறந்ததுமுன் னெதுக்கிங் கெவரெவர் காவலாச்சு (75)

காவ லணைவர்க்குந்தலைவனான காபக்கபுசைனித் தலமுமெங்கே கோபுக்காமலை யுடலிலெங்கே கொடிய விருளான தளமுமெங்கே யாவியழியாமணிலைநிறுத்தி மமானிதமான வாணியெங்கே, மேவுஞ் சிரசுதான் பத்தெழுத்தான் மேவியுருவான வெழுத்துமென்ன. (76)

எழுத்துடனைந்து தலமு மெங்கே யிலங்கும் றாஹூக்கும் வாய்வுக்குமே, யெழுத்து மிடையிலே பதினாலுண்டே யென்ன வெழுத்தது விடுத்துச் சொல்லும், சுழுத்த அணாசி றெவ்வொன்றுக்குச் சுழியிற் பதினாலு கருவுமுண்டே, யெழுத்தும் பிசகாமற் சரியாய்ச் சொல்லு மிலங்கும் றாஹூதான் வாய்வுமேலே. (77)

வாய்விற் பறக்கின்ற பறவை வட்டம் வடிவுநிற மூன்று வகையுஞ் சொல்லும், றாஹிலே நின்று பிரிந்ததைந்தும் ரூப மொன்றாக் கொன்றெத்தனைநாள், மேவி யறுநான்கு கலிமாநிலை மேவி யெங்கெங்கே யெதுதா நிற்கும், ஆகும் பதினெண்ணாயிர மாலமுமன்றே யெதினாலே யமைத்தான் முன்னோன். (78)

முன்னோ னிருப்பிட முதன் மையெங்கே முழக்கமாகிய நவசுமென்ன, வன்னைமுஹம்மதுமயில் புறாவாயப் போவணங்கிய வணக்கமென்ன, வின்னமெது சொல்லி யெழுதுக்கலமே கனிலைந்து தலமுமெங்கே, முன்ன யுடலுக்குப் பகலிரவோ மோசம் வராமலே நினைவாய்ச் செல்லும் (79)

இரவும் பகலுந்தான் பிறப்பதெங்கே யிரவும் பகலுந்தா னிருப்பதெங்கே, யிரவும் பகலென்று யிருப்பதெங்கே யிரவும் பகலற தலமுமெங்கே, பெரிய விளக்கிலே றாஹூதானும் பிடித்த குணையென்ன மாடமென்ன, வரியதிரியென்ன வெண்ணையென்ன வதற்கு நெருப்பென்ன வரியச் சொல்லும். (80)

அறியவிதை முன்னே விருட்ச முன்னே வாதிமுதன் மனுவிருப்ப தெங்கே, பெரிய தகப்பனா ராதர் தானும் பெரிய புவியிலே தரிப்பதெங்கே, பெரிய பிழையெல்லா மிறைபொறுக்கப் பெசு தொழுத்தோடு மெழுத்து மென்ன, வுருவா யறுநான்கு கலிமாநிலை யொன்றாயுடலுக்கு ளிருப்பதெங்கே, யரிவை புருஷர்க்குந் தனி யெழுத்து வந்த வெழுத்தல்லோ வறியவேண்டும். (81)

அறிய வேண்டுமே யின்ன மொன்றிங் காலத் துயிரெல்லாம் பிறக்கு முன்னே, மறியு மாண்பெண்ணாய் வயிற்றினுள்ளே வடிவு பிரிவது மெத்தனைநாள், பெரியவனாலோடு முழுக்குத்திரப் பலத்த வெழுத் தெங்கே யுடலினிற்கும், பரியகுருமாரே நல்லோர்களே பனையன், மசலாவைப் பகுர்ந்து சொல்லும். (82)

பருந்த வெழுத்தெல்லா மமைந்தபோது பாரக்கலிமாவில் ரண்டெழுத்து, முகந்த புவியிலே பிறக்குமட்டு மூகிலை யொதுக்கியே யிருப்பதெங்கே, வருந்து பிறர்தபி னாலுடக்குள்ளே வருந்தி யிதிரண்டுந் தரிப்பதெங்கே, யுகந்த வுடலுக்குள் வாரமூச்சு தென்றான் ரண்டு விதமுமென்ன. (83)

இருந்து வருமூச்ச தெதிலே நின்று மெத்தனை கோணமெழும் பிச்சுற்றிச் சரிந்து மூச்செல்லா மிறப்பதெங்கே சாவு மெதினாலே வருவதுகாண், பொருந்தி யுடலுக்குள் கன்னாசுதான் புனையாதெத் தனை தலதிலானான், வருந்து மவன்செய லெத்தனைதான் வாசலெதின் காவல் வடிவிமானான். (84)

வடிவு றாறுதானேந்தல்லவோ வருத்தும் விதமென்ன நாமமென்ன, மூடியாச் சடத்தோட பிருந்து பின்னா முளைத்த கேள்விதான் சொல்வதென்ன, நெடியோன் பரத்திலே சமதைச் சேர்த்து நீதி செலுத்திய றாஹூமென்ன, வடியே றுரைத்திடு மசலாவெல்லா மாண்டவமாரே வறியச்சொல்லும். (85)

அறிவு மவுத்துத்தான் வருமப்போதங் காகாயந்தனைப் பார்ப்பதென்ன, தெரிய வுருவேது தேசமேது திரண்டழுகு வொன்றாய்ச் சேர்வதாரு பிரியா திருப்பதார் போனதாரு போன வுயிரெல்லா மிருப்பதெங்கே, பிரியா றாகெல்லா மொரு தலத்திற் பெரிய காண் மட்டு மடிவதெங்கே. (86)

எங்கே பிரிந்தது வைந்து றாஹூ மெந்த வெழுத்துவின் வலுப்பத்தாலே, யெங்கே கருவிலே யுருவமாச்சதெங்கே யிருந்துதான் வரு நித்திரை, பங்கப் பெரும்பால நன்மைதீமை பாரின் வரிதானோ முதல் வரியோ, வெங்கள் குலத்துக்குக் குருவுமாகுமென்ன விதத்தினாற்குரு வென்னலாம். (87)

குருவிர் யிருப்பதிர் குபிருமாகுங் குருவுக்குபதேசங்கொடுத்ததாரு, பெரிய கலிமாவைப் பிரித்ததாரு பின்னும் பதினாலாய் வகுத்ததாரு, வுரியபதினாலு முஷாஹதாவு மொன்றா யிருந்துதான் புகழ்ந்ததற்கு பெரிய வுபதேசம் பதினாலுக்கும் பிரிவு மிருபத்து வெட்டல்லவோ. (88)

இருபத்தெட்டுமே யாதுநிலை யிலங்கு முஷாஹதாப் பதினாலுக்கு ளொருபத்து மூன்று குபிரல்லவோ வொன்று நிலையிலே

யதனைச் சொல்லுங், கருவா நினைவினுலெழுத்துக் கருத்தி நிலைப் படுர் தலத்தைச் சொல்லும், பெரிய குகைவைத்துத் துருத்தி யூதப்பீங்கானிற் பாலைக் கொடுப்பதாரு. (89)

கொடுத்த பீங்கானும் பாலுமாகும் கொள்பானக்கம் பஞ்சவ மூதமாகக், கொடுத்த குருவது பீர் நிலையைக் குறித்துப் பிசகாமற் சரியாய்ச்சொல்லு, மடுத்த கைதொட்டுப் பிடித்த தெவரானும் பெண்ணும்பொற் கண்டதேவர், படித்த தலமென்ன மலருமென்ன பத்தா மெழுத்தாக யிருப்பதெது. (90)

இருக்குர் தவிசுதான் பத்தெழுத்தா விலங்கு மறைநாலு சுருயு நூரு, வருத்தும் புகழெலா மதுக்குள்ளாக வரைந்த வித மென்ன தெழுத்து மென்ன, பிறந்தவிடமெங்கே யிறந்ததெங்கே பிறப்பு மிறப்புர்தான் றறிப்பதெங்கே, மறக்குமிடமெங்கே மதியு மெங்கே மகிழ்ந்த சிரிப்பெங்கே யழுகை யெங்கே. (91)

எங்கள் குலம் வேறுய்ப் பிரிவதெங்கே யெழுதுங் கலிமாவி னடியுமெங்கே, தங்கி வருமூச்சைப் பெற்றெடுத்த தாயுர் தகப் பனு மிருப்பதெங்கே, பங்காய் நமக்குள்ளே பாவநன்மை பாரவுட லுக் குட்டரிப்பதெங்கே, யெங்கள் குலத்துக் குருமார்களே யெழி யேன் மஸலாவை யெல்லாஞ் சொல்லும். (92)

சொல்லும் மஸலாத்தா னெவருஞ் சொல்வார் சொல்லி லடங்காம லினித் கேட்பனுன், சொல்லுஞ் சுவாசந்தானைந்தெழுத் துச் சுருபமுருவான நிலையினுள்ளே, சொல்லும் ஜெம் கூத்து நிலையுமென்ன சுரூப மூன்றுமே சேர்ந்தாலென்ன, வெல்லு மலரென்ன குதறத்தேது விரிந்த ஆலமுன் னிருந்ததெங்கே. (93)

இலங்கு மொளியென்ன துக்கத்து மென்ன வெதுகானும் சுலுத்தாணுசிறு, துலங்கு மில்லேது தில்லுமேது சூழ்ந்த வல்லென் அலிபுமென்ன, வல்ல மீமென்ன முகுதிதாத்து வளைந்து தலை கீழாய் நிற்பதெது, வெல்லுங் கமலமென்றதைச் சொல்லலாம் விரிந்த மீம்தலை வெளிச்ச மென்ன. (94)

வெளிச்ச மிருளுக்கு ணிலவுமென்ன வெட்ட வெளியென்ன வானமென்ன, கனிச்சு மங்குல மோட்டமென்ன காணு மாகாய மென்ன சொல்லுங், தொளிச்சு மீனென்ன பெறுமீனென்ன துலங்

கும் நூகெது நாலுமேது, வெளிச்ச சூரியனொளிவுமென்ன விளங்கும் றாஹானி றாகுமெது. (95)

எதுதா னிருகோண மதிவிருத்த மிருக்கு முச்சுடரைந்து மெது இதுதான் றலைகுடி யிருப்பதென்ன வின்னம் காபுகூ கீயு மென்ன, அதுக்குட் கண்ணாடி ஒளிவுமென்ன அல்லாதிருநாமக் கலிமாவெது அதுக்குட் பெறுகிற ரூபமாரு வங்கேபொருந்திய நாமமாரு. (96)

நாமம் பொருந்திய பாற்கடலி னுலாவிதமென்ன நுபுவத்தெது, நாமநிலையெது குறுஆனெது நாற்பத்தி மூன்று கோணமென்னகாம நிலையென்ன கடலுமென்ன கறுப்பு நிறமென்ன கல்புமெது, ஈமா னிலையெது கோட்டையெதிங் கிருந்த ஓங்கார வட்டமென்ன. (97)

வட்ட வைரம்பொன் பவளம் பச்சை வடிவு நிலையென்ன வன்னமென்ன, மட்டி லடங்காத வொளிவு மென்ன மகாமன் மஹ் மூதர் நிலையுமென்ன, விட்டசுறுமாவு நீலமென்ன வெங்கண் முஹம்மது மெதுகாண் செல்லும், வீட்டம் நடுவிலே தெளிவு மென்ன வெள்ளை நிலமென்ன வொளிவுமென்ன. (98)

ஒளிவு தெளிவென்ன ரூபமென்ன வுருபமிடையில்லா திருப்ப தென்ன, அழிவில்லாதவ னாதிநாப னல்லவொளியெது ஆவியெது பழிய நிபுலீசு ரூபமென்ன பார விருளென்ன குகையுமென்ன, வெளியென் மசலாவைப் பிரித்துச்சொல்லு மெண்ணிலடங்காத குருமார்களே. (99)

என்னி லடங்காத குருமார்களே எந்தன் மஸலாவை யெடுத் துச்சொல்லு, மன்னர் முஹம்மதுமானோ பெண்ணோ மகிழ்ந்து வணக்கந்தா னின்னதென்று, என்ன, எழுத்தாக வேதநோக்கி யெங்கே வணங்கிற் தென்னசொல்லி, யின்னமெதுகாணு முயிர் ரெழுத்திம், கென்ன விதங்காணு மெமக்கேதென்ன. (100)

எனக்குத் தெரிசனை யேதாகவேயிருக்கு மிதின்குண மெழுப்ப மென்ன, நமக்கு மதினாலே நடக்குமாறு நாடுந் தவமெல்லாஞ் சேர்வதெங்கே, சமக்கும் பறுலெது சுன்னத்தெது சூழ்ந்தவறி வெல்லாம் பிரித்து நன்றா, யெமக்குத் தெரியவே விடுத்துச் சொன்னாலெல்லாக் குருமார்க்கு மிமாமானதே. (101)

ஆவென்ற பார்வை அலிபாகவும் ஐனுமிருவிழி யதுதா னென்று, கூவென்ற மூச்சத் தாதையுமாங் கொழுகிறாஹூதா னிணைவாகையாலேவி, யாண்பாலா முஹம்மதுமே லிணங்கி ஆவென்ற அலிபாகத்தான், ரூவும் வணக்கமு முந்திக்கிழே தாங்கு முதல் சுன்னத் தினிமேற் சொல்வேன். (102)

சொல்லு முஹம்மது தாயாமுடல் சூலுல்லாகி பெண்மகு ஷமக்குமாமம், அல்லாபேரிலே பேச்சுமீரேழ் அக்கில் மகிழ்ச்சியு முணர்வுமாக, நல்ல ஜெம்கூவில் கூவுமீமும் நாடு முதற்பறு லிதுவே நிசம், அல்லா திருவாணை நிசமே சொன்னேன் அறிவை யறியா தார் பாவியாமே. (103)

தன்னை யறிவது பறுலுமாகுர் தலைவனறிவது சுன்னத்தாகு, மின்னும் பறுலொன்று சுன்னத்தொன்று மிருக்கும் வகைதன்னை யறிவாருண்டோ, மன்ன வணக்கத்தால் முஹம்மதிய்யா மக்காநபி அல்லா கூவெனவே, அண்ணல் முஹம்மதை யிருத்திஅல்லா ஆலி முஹம்மது மவனையோதி. (104)

ஓதுமுஹம்மது முருவமாக வோங்கும் வணக்கமும் முதற் பறுலாம், நீதி முஹம்மதை நினைத்தசோதி நினைவையறிவது முதல் சுன்னத்தாம், ஆதியனுநியாம் ஆவியாகி அஹதும் அஹமது மொன்றே யாகும், நீதி முஹம்மதை நிலை நிறுத்தி நினைவல் லாவை நீ நிலையிற் சேரும். (105)

சேரு மிறைபாத நபிபாதமுஞ் செப்பும் வணக்கர்தான் முஹம்மதென்றும், வேறுந் திருநிலை யறிவதுதா னிதனிலுட் கோல மென்று கூருங், கூரும் பலகலை யுருவறியக் கொழுகி யிவைரண்டுமொரு பறுலாம், மாதா வணக்கமு முஹம்மதென்று மன்னு னறிவிது முதல் சுன்னத்தாம். (106)

சுன்னத் திதிரண்டு மொருசுன்னத்தாம், சொன்ன பறுல் ரண்டு மொறுபறுலாம், எண்ணி லடங்காத பறுலு சுன்னத் தெல் லாத் தவத்துக்கு மிமாமிதுவாந், தன்னை யறியாதார் பொருளறி யார் தவமுமிபுலீசைச் சேருமென்று, மண்ணல் முஹம்மதை யாதி னுய னர்க்கு மறிவிக்கப் பறுலாக்கினன். (107)

பறுலு வகையெல்லா மிறையைச்சேரும் பாங்காய் நபிக்கா குஞ் சுன்னத்தெல்லாம், பறுவில் வகையான பறுல் சுன்னத்தின்

பாங்கை யறியாரே தீங்காங்காபிர், இருளு மனதினி னிறைந்திருக் கவென்ன தவஞ் செய்வோ மொன்றுநாடி, யருளு மீரா று பொருள றிந்தே அல்லும் பகலுந்தான் றொழுதானென்ன. (108)

தொழுகை நோன்புடன் ஸக்காத்தும் ஹச்சும் துய்ய நடபடி தவறிடாம, லெழுத முடியாத கலிமா திக்கி றில்லென் றெழுப்பிய வோசையெங்கும், அழுது நூறுண்டு கோடிகாலம் அல்லும் பகலுந் தானொரு நினைவாய்ப், பொழுது மதிகாணு விருட்குழியிற் போத வணக்கமென் றிருந் திட்டாலும். (109)

இருந்து மலைதனில் சருகுதின்றே யேதுமருந்தாமற் குகை யினுள்ளே, வருந்திவருந்தியே வணங்கினாலும் வானம் புவியெல்லாங் கைர் செய்தாலுந் திருந்தப் புவிக் குபிரெல்லாம் வெட்டித் தீர்க்க முறத்தினை விளைத்தா லென்ன, சிறந்த வுலகுள்ள பள்ளி மற்றத் தெய்வத்தல மெல்லாம் சிறப்பித்தாலும். (110)

சிறப்பாங் கருபாப்போ லொருகோடியைச் சேம்பொன்னாலே தானெடுத்திட்டாலு முறைப்பா மறுவஷாபோ லொரு கோடியை யுயர்ந்த வைரத்தா லெழுப்பினாலு, நிறப்பும் பலனில்லை நாளொன் றுக்கு நீண்ட பாவந்தா னெவ்வளவென், றிறப்பும் பிறப்பில்லா னபிக்குச் சொன்னா னென்றன் பயஹாம்பர் நபிமார்களே. (111)

நபிக ளிருபத்தி ரண்டுகோடி நாட்டின் மிசையன் று கொலையே செய்த, புவியிற் பெரும் பாவம் நாளொன்றுக்குப் போதைக்கிடைக் குங்கா ணடியார்க்கெல்லா, நபிகள் பெருமானு முஹம்மதுக்கு நாயன் மிகுறுஜில் ரகசியமாய்க், கவியாம் ரகசிய முடிவிதுகாண் கண்ணே மணியே யென்னபியே யென்றான். (112)

நபிக்கி ரகசிய மிறைசொற் பொய்யோ நாட்டிற் சொர்க்க மென்றொருவன் செய்து புவியிற் சிரசிடிந் திழந்துமாண்டு பொல்லா நரகினி லழிந்தானப்போ, கவியா லுரைத்திடு முதற் பறுலின் காணுமுதலான சுன்னத்தையு மேவிபெழுப்பியே யேற்றிப்பார்க்க விலங்குந்தவ மெல்லா மிஃதேயாகு, நபிகளின்றெவெ ரைக்கொண் ரூறு நாயன் முடிவல்லாலிவனுமில்லை. (113)

இவன்று னுலகெல்லா மருத்திட்டாலு மிமையோர் குழுவெல் லாமிறக்கச் செய்து, செவிதா மறுவேஷாடு குறுசுதன்னைத் தீங்குபல

செய்து விருந்தாரென்றும், புவியிற்பாவ மொன்றிருக்கு முண்டோ பொன்னா ரவர்க்கல்லா லெவர்க்குமுண்டோ தவியும் பிழைபோக்கி நாளொன்றுக்குத் தருவா னன்மையெவ்வளவே யென்றாள். (114)

என்ற பெரியவன் பயஹாம்பர்தா மிருநூற் றிருபத்தி ரண்டு கோடி, மாண்டு போகாம லுயிரை மீட்ட மதிக்கும் பலன்கச்சுக் கோடி யென்று மாண்ட பெரியவன் தோஸ்தாமென்று மண்ணல் முஹம்மது நபியுஞ் சொன்னா, ரேன்ற அம்பியா வொலிக்குத்தூபு மெல்லா வுலமாவுமிதுவே சொன்னார். (115)

எல்லா வுலமாவு நபியுஞ் சொன்னா ரெவரு முஜுச்செய்து தொழவும் வேண்டும் பொல்லாங்கு பொய்யும் பெருமை கோபம் பொங்கு நித்திரை ஹறும்பகீலுஞ், சொல்லும்வகையேழும் விலக்கி வைத்துச் சுருதிநிலை பெற்றோ ருருவில்லாத, அல்லா வணக்கத்தை வணங்கினோர்களாவா ரவர்க்கச்ச மொருநாளில்லை. (116)

ஒருவர் மனதுக்கு ளிருக்கும்வகை யொருவருக் கொருவர் தாமீயாவகை, பெரியோர் நாளையிற் றேடுநிதி பின்னுமவர் தேடு நிதியுமாகு, மரியவிசுவாச நன்மைதீமை யார்க்கும் பெரிதான மான வெட்கம் பெரியவயதோடு வைர்துவகை பின்னா லொருவர்க்கு நீயாப் பொருள். (117)

பொருளா மைர்தையு மீயர்தபோதும் புவியி லிருக்குதொன் றுரைக்காவகை, யறியுந் திறமான விசாரமாண்மை யானகல்வியும் பாவ நன்மை, புரியகருவித்தை யட்டகோண மூலகவாழ்க்கையு மாதரின்ப, மறையும் பலஞான மூடற்கூறையும் வாய்விட்டு வெளி பேசொணாதே. (118)

பேசும் வகையெல்லாம் பேசினாலும் பேசா வகையின்ன மொன்றுண்டுகேள், ஏசி யெறிந்துதான் கோபமாகி வெங்கிட்ட னுகாதே யெனத்தூஷித்து, நேசமனங்கோபந் திரும்பும்வகை தித முந் தொழுதல்லோ கால்பிடித்துப், பேசுங் குருவின் றுபதேசத் தைப் பின்னா லொருவர்க்குப் பேசொணாதே. (119)

பேசா வகையெல்லாங் கொடுக்காவகை பெரியோனுலகெல்லா மறியச்சொன்னே, னீசமாய்த் தனக்குத் தானென்று நினைவிலுஞ் சற்று நினைக்காப்பொரு, ளாசை யோசையு மருணிறைந்த அல்லா வொளிவான அரும்பொருளை, நீசமாய்த் தனக்குத்தானென்று நினைக்கப் பொருணிலத் துலைக்கலாமோ. (120)

உரைத்தானுலகத்தில் வருங்கொடுமை யுள்ளதுன்பமூர் துய் ரங்கோடி, பெருத்த குடியென்றான் களவுசெய்தான் பின்னும் ஊறுங்கொலை செய்தானென்றும், ஷறுத்தினேவலை விலகினைவத் துச் சறகைக்கெடுத்த சண்டாளனென்று, பெருத்த முனிபடு தூற வர்க்கும் பேசாவகை யல்லோ தாத்துவகை. (121)

---

# தாத்துவகை.

தாத்து றஹ்மத்துக் கடனிறைந்த ரகசியந்தனைச் சொல்லக் கேளும், வார்த்தைக் கடங்காத கடல் வனுப்பம் வருடமாயிர மனந்தங்கோடி, சேர்த்துக் கடலோடே யிருந்தகாலஞ் செப்பத் தொலையாதே யெவரா லுந்தான், கோர்த்துக் கடலெல்லாஞ் சூண்டு டாக்கிக் கொழுந்து புகையினாற் கொதியுண்டாச்சே. (122)

கொதித்த கடலதி லெழுந்தநுரை கோலம் வெள்ளையாம் விருத்தமாக, விதத்தி லாயிரங்கோடி காலம் வெள்ளை நிறமெல்லாங் குருதிபோலெ, யிதுவு மாயிரங்கோடி காலமிருந்து செந்நுரை சதையுமாகி, மதிப்பிவடங்காத கண்மணிபோல் மன்னன் சதைநடுத் தெளிவானதே. (123)

தெளியுமாயிர மனந்தங்கோடி திரண்ட சதையெல்லா மிருண்டகுகை, யொளிவு திரண்டுவெண் டாளமாக வொருநூறு கோடிகாலஞ் சென்று, சுளியாம் வலம்புரி முனைதிரண்டு சூடுஞ் சுடரொளி சுழன்றெழுந்தே, யொளிவு திரளெல்லா மகலமாற்றி யோசையு வந்தது தன்னைத்தானே. (124)

தன்னை வணங்கிய ரூச்சு றாகாய்த்தானே கூவென்றுந் தாத்தே யென்றும், இன்னம் பிசமிலும் கொடூறுற்றகீம் என்ற முழக்கமு முத்தொளிவும், விண்ணி லெழுந்துவின் சாத்தைக் காண வெள்ளை மாகதம் விந்து நாதந், தன்னாலெழுந்திடு நுக்கத்து மாக தரித்த விருளிலே யிருந்ததாமே. (125)

இருந்த நுக்கத்து நீண்டலிபா யெழும்பி யிருதலை நுக்கத்து றாறுஞ், சிறந்த பதினாறு விதமொன்றுக்குச் செப்புமாயிர மனந்த

மாண்டு, பொருந்தித் தேட்டமாய் நடுநுக்கலதைப் போற்றி யிருந் துதே நபி நடுவில், வருந்தி யறிநூற்றைம்பது கோடி தான் வருட மிருந்த பின் வகையைக் கேளே. (126)

வகையாய்த் தேட்ட வெண்டாளமாக வல்ல பெரியவன் வளை வுக்குள்ளே, ஙகைபா நபியொளி நற்பவள நடுவாயிறை வைத்துக் காக்கும் போது, தொகையா யிரண்டரை நூறு கோடி தோற்று மொளி நூறுந்தானுமாகி, வமையா யிருதலை வேறொன்றாக வளர்ந்தே அலிபாக விருந்ததாமே. (127)

அலிபி அலிமது தவளம் போலும் ஆதியொளிவு வெண்டாள மாக வொலிய முஹம்மது லாஇலாஹ இல்லல்லாஹு வென்றோதுங் காலை, வலிய இறைவன் முஹம்மதுற்ற சூலென்றிரைத்தல்லோ தீனிலானுன், சலியா முஹம்மது பிறவிதீனும் சகலம் படைத்தவன் மவுலாவாமே. (128)

மவுலா தனை நபி வணங்கு நாளின் மன்னுமுஹம்மதை வணங்கி நின்று, நவுலாக் கொன்பது லக்ஷமாண்டு நாயன் முஹம்மதை நாடி நாடி, அவுலாக்கின்றண்டு மொன்றாய்க் கூடியந்த முன் சொன்ன காலமட்டு, நவுலாக் கொன்பது லக்ஷந்தர நாயன் கூடிப்பின் பிரிந்த தாமே. (129)

பிரிந்தா ரொன்பது லக்ஷந்தரம் பூண்டங்கிருந்து பின் பிரியுங் காலை, யிருந்த முத்தொன்று பவள மொன்று மின்னம் பவளத்தி னொளிவு பொங்கிச், சிறந்த பச்சையாம் அலிபொன்று தான் சேர்ந்து வேறொன்று தலை மூன்றுமாங், குறைந்திடா முத்துப் பவளம் பச்சை கூடி யிருந்த நாடென்னைக் கேளே. (130)

இருக்கு மொரு கோடி வருடமட்டு மினையுமொரு கோடிவருட மட்டு, செருக்கி யொருகோடி தாமிருந்து நீண்ட சுடர் மூன்றும் பிரிந்து வேறே, யிருக்குஞ்சுடர் மூன்றும் வணக்க மொன்றாயிருந்த விதமல்லோ தாத்தென்பதிங், குருக்கமான சிபாதத்துத் தன்னை யோகக் கேளுங்கா ளுலகத்தாரே. (131)

---

# சியாத்து வகை.

உலக மமைக்குமு ஞெருவனுய ஞெளிவிற் பிறந்தவர் முஹம் மதியா, நிலையுன் முஹம்மதி ஞெளி வளர்ந்து நின்ற அலிபொன்று அலிபயிறைவ னுறிக்கி பார்க்க வைந்தாய்ப் பிரிந்த பின் வகையே தென்றால், அலிபுலாமுடன் ஹேயுமீமும் அணிந்த தாலைந்து மெழுத்து மாச்சே. (132)

எழுத்து மைந்ததா யானதற்பி னென்கோசை யாம லிருந்திப் பார்க்க, வொழுத்து மொன்ஞென்று மைந்தெழுத்தா டிறை முனிருப்பதைத் தரையிலாக, வழுத்தி யிறை முன்னே அல்ஹம் தென்று மமைந்தே யிருபத்தைத் தறையினிற்கு, முழுத்தமாகவே ஹஹ்மத்தென்னு முன்னுவுரைத்திடுங் கடலின் மேலே. (133)

மேலே அலிபென்ற பவளந்தன்னை மிகவு நிறுத்திபே மகிழ்ந்து பார்த்தான், ஆலம் அஹமதென்று கிருபைப் பார்வை யந்தயலிபு தான் பிளந்திரண்டாய்ப், பாலிணிறத்திலே கண்டாறுதான் பாரக் கடலினி லோடும்போதும், வாலுந்தலை நடு வளைவு மூன்றாய் வல் லோன்றிறு முன்னே ஐனுமாச்சே. (134)

ஐனு மிருவிழி யவஞெனிவா மந்த ஐனிலே மீமானது கவியாமீ மந்தக் கடலின் மேலே காட்சிக் கிருபையா ஞேக்கும் போது, புவி யை சமைத்தவன் றிருப்பாலினிற் புகழ்ச்சி முஹியித்தீஞெரு மீமு மாங்கவியா லொரு மீமை அஹ்மதென்று கத்தன் கிருபை கொண்டுரைத்ததாமே. (135)

உரைத்த மீமொன்று முஹம்மதிய்யா வுயர்ந்த நுபுவத்து வுமக்கா மென்றும், பொருத்தமாகிய விலாயத் தெல்லாம் புகழ்ச்சி முகியித்தீனு மக்கே யென்றுங் கருத்தின் முஹியித்தீனீண்ட மீமைக் கத்தனெடுத்தவன் மடிலேற்றி, வருத்திக் கடன் மேலே செய்ததென்ன வடிவுக் கிருபையா விணங்கிப் பார்த்தான். (136)

பார்க்க மீமுட தேகமெல்லாம் பத்தி ஜலமாக வேர்க்கும்போது கோர்க்கும் வேர்வைதா ஞெருமுத்தாகக் கொழுகு மீமுள்ளே யொளிவுமாகிப், பார்க்க ஹஹ்மத்துக் கடல் விரிந்து பத்து காவு மாய் பகுந்த தப்போ, ஆக்கமாகவே காவொன்றுக்கு மாதி திருநாம மோதினுனே. (137)

நாதன் கடனுமம் நினைவறிவு நாமம் பக்கிறுகசூறுவென்று மோதும் இல்லைமந்து சசூறுமாகு மொரேழறுஷுக்கு நிகமெட் டாகு, நீதி றஹ்மத்தி னொளிவுபத்தா நிகரில்லாக்கடலொவ்வொன் றுக்குச், சோதியாரு மீமாய்த் திரண்டமுத்தைச் சொன்ன னெனைத்தானே புகழுமென்றே. (138)

புகழுமெனச்சொல்லக் கடலொன்றுக்குப் புகழ்ந்தாரொரு நூறு கோடியாண்டு, மகிழு மாயிரங் கோடிகால மன்னுன் கடல் பத்தின் மகிழ்ந்துமுத்து, முகனும் பொருந்திய கடலின்முத்து முறுதிக் குறுதியோர் சுரூபமாகப், பகரும் அஹ்மது முஹம்ம தென்றும் பாங்கா மருமூது ஹாமிதென்றே. (139)

என்றுயாசீனுந் தாசீனுமா மின்னர் தாஹாவும் ஹாமீமுமா யென்றே காபோடுஸாதுமாக விந்தவகையாக வணங்கும்போதி, லன் றேகபிபொளி விறைமையைநோக்கி யருளுங் காபக்சபு சைனியென்று கண்டே மகிழ்ந்திறை கிருபைபொங்கிக் கண்ணே மணியேநீர் வாறு மென்றான். (140)

வாருமெனச்சொல்லி வருந்தினனே வருடமாயிரம்கோடிநீளம் பாரவகலமு முயரநீளம் பதினறுகோணஞ் சரிநிதான, நூறுமுஹம் மாதென்றிரையுரைத்தா னொடியிற் பறந்திறை திருமுன்வந்து, ஆறு நூறுண்டு கோடிகாலம் அஹதும் அஹ்மதும் ஆசையாகும். (141)

ஆசக்கானது அல்லாவுமாம் அண்ணல் முஹம்மது முகஷுக்கு மாம், ஓசையாகவே பெரியநாய னுரைப்பான் யாகசூ றென்று சொல்லி, நேசமாகவே முத்தொளிவு நெகிழும் யாறகீ மென்று சொல்லி, யாசை யோசையா யானும்பெண்ணு யணைந்தங்கிருந் தாநா ளனந்தங் கோடி. (142)

அனந்த மாண்டுதா னகண்டிருக்கு மனந்தமாண்டதா னுவந்தி ருக்கு, மனந்தமனந்தமா மனந்தங்கோடி அஹதும் அஹ்மது மணைந்திருந்தே, இணைந்துபிரிந்து பின்னிறை முன்னாக விளங்கு முகத்தைப்பார்த் தேதுசொல்வா, னனந்த துணைவனே யுயிர்த் தோழனே யோதுகிறேன் சற்றே கேளுமென்றான். (143)

என்றான் துணையாக வுமைவகுத்தேனென்னோடிணங்கிநீரென் னவினில், விண்டுபெருவீர்காண் மதலையாக வேணபடைப்புக்கு

மாதாவுநீ, ருண்டு படைப்பெரும் படைப்புக்கெல்லா மொழிவனு னல்லோ பிதாவுமானே, னன்று யென்னேடு முமையுங்கூட நாடார் நரகத்துக் கிரையாக்குவேன். (144)

ஆக்கை யெடுத்தபின் னறிவினுலே யாருமொருதர முமையு மென்னை, நோக்கிப்பார்த்தார் நமதுகுல போக்கன் பிழையெல் லாம் பொறுத்துக்கொள்வேன், வாக்கிலுமைத்தள்ளியெனைப்புகழ்ந் தால் வருத்தும் விதமென்ன தொகைதான் சொல்வேன், தாக்கு மெனதுட முனிவுகோபம் தாத்திலடங்காதென் றிறைவன் சொன்னுன். (145)

சொன்ன விறைமுன்னே சுடர்மொழியுஞ் சோதிபெரியோனே யுருவிலானே, யென்னை யுருவமாயழைத்தகால மிலங்கு மதையெல் லாம் வருத்தகாலந் தன்னை யறிந்ததா னெனையுமுன்னே தவத்தி னிலையெல்லாம், வரத்தினல்கு மின்ன மெதுகேட்கிற் றடையில்லா மலிறையே யெனக்குநீ கொடுப்பாயென்றூர். (146)

கொடுப்பா யெனச்சொல்லக் கொடுத்தேனென்று குதறத் திறை முகத்தைக் கொழுகிப்பார்த்தான் கடுகி யிரைபார்வை யறுகோணமாய்க்கரணம் விருத்தமாய் நடுவிற்பச்சை, படவுற் றிருகோணங் கருநிறமாய் பத்திநெருப்பிலே முத்துவெர்து, நடுவில் ஹாமீமா யொளிவு நின்ற நபியுமிறைமுன்னே குதித்துநின்றூர். ()

நின்ரு ரிறைமுன்னே யொளியாய்நபி நீதி பெரியோனே அஹ தாயென்று, வன்றே யிறைநூறு முஹம்மதென்றும் அஹமதே ஹாமீ மெனவுரைத்தா, னன்றுய் முஹம்மது லெப்பைக்கென்று நாயன்பாத்திலே சுஜூதிலானுர், பண்டே யுரைத்திடு மொளிவு முத்துப் பத்தியெரிந்துதே பாரத்தியுல். (148)

தீபட்டெரிந்தது திருக்கோணமாய்த்திரண்ட புகையெல்லாம் வானமாக, வேர்பட் டொன்றுமே லொன்றுமாக வெழுதட்டுமா யிலங்கிநிற்கு, நேர்ப்பட்டமுத்து வெர்துருகி நீருமிருகோண முதிர வன்ன, மேர்ப்பட்ட நீரிலெழுந்தநுரை யேகிநிறம்வெள்ளை திசை நாலே. (149)

நாலு திசையாகும் பூமியேழு நாயன்கிருபையா லமைந்தபின்பு ஆலநிறைந்திடுமாதிநாயனண்ணல் முஹம்மதே யெழுந்திருக்காண், பால னிருபத்தைத் தரையினின்று பஞ்சாரத்தைநீர் படியு

மென்று, ஞலம் நிறைந்திடும் அஹூமதிய்யா அல்ஹம் தெனச் சொல்லிப் படித்ததாமே. (150)

படித்த வுடனேதான் பஞ்சாக்ஷரம் பகுந்தின் கிருபத்தைத் தெழுத்தாய் விண்டு, விடுத்த அலிபைந்து லாமுமைந்து விளங்கும் ஹேயைந்து மீமுமைந்தா, மடுத்ததாலேந்து மிருபத்தைந்தா மாதி திருமுன்னே நிற்கும்போது, தொடுத்த வனேத்தையும் விடுத்துவல் லோன் சொன்ன னிவேத்தேஞன் முடியுமென்றே. (151)

முடியுமெனச் சொன்ஞன் மூதல் வனுகி மூன்னுல் அலிபைந்த தானவாறு, மடிய முடிவல்லான் வேதமொன்று மாதி ஜிபுரீலு மீக் காயீலும், வடிவா மிசுறுபீ லிசுறுயீலும் வில்லோன் மலக்கிவர் வலுப்பமோதான் படியின்மனு ரூபநிறமேபச்சை பதினெண்ணேயிர மாலமெல்லாம். (152)

ஆலம் பலதெல்லா மிடதுகையி லணுப் போற் றெரிசிக்கு மாதி ராஜன், காலனிசுறுயீ லுலுமுகங் கார்திகரு நிறம் அருபமாகும். வேலே யுலகெல்லா மிடதுகையில் விளக்குப் பிடித்தார் போல் விரிந்த ரூபம் ஆலம் படைத்தவன் மீக்காயீலு மன்ன ரூபமாய் பறவையாமே. (153)

பறவை யொருமுத்துப் பாதம் ரண்டு பாரமுகமொன்று சிர சொன்றுதான், சிறகி ரண்டொரு சிறகுதனிற் சின்னச் சிறகுமெண் பதிஞயிரம், குறையாய்ச் சிரருக்கோ ரிறகுகொடி. கூறுமிறகுக் கோர் கோடிரோம, முறையா மொவ்வொரு ரோமமதின் முகமுநாற்பதி ஞயிரமே. (154)

முகமும் வாயுநாற் பதிஞயிர மொழியு நாவுநாற் பதிஞயிர, மகலநா வொன்று வைஞ்நூறுண்டா மந்தவிரிவான நாவொன்றுக் குப் பகுமா நாற்பதிஞயிரமாம் பாஷை பகுந்திறை தனேப் புகழு, முகமையடங்காத ஜிபுரீயிலு மொன்றே புறுவடி வாகுந்தானே. ()

வடிவு பறவைதான் புறுகுன்ரூபம் வைர மாகத முத்துசிற மடியி லிருபாத மொருமாணிக்க மழகு நவரத்ன மிருசிறகு படிகீழ் வாய்பச்சை மாகதமாம் பரிமளங்கற்ப் பூரமஞ்ச, ளிருபு ரஞ்சிறை நாலுமெட்டு விதமெட்டுச் சிறைகிலங்கி நிற்கும். (156)

இலங்கும் வைரம்வெண்டரள முதலிணையும் பச்சையுஞ் குங்குமமூங், துலங்கும் மாணிக்கம் வைடூரியந் துதிபுட் பராகங் கோமேதக மலங்காரமான சிறகொன்றுக்கு மைம்பதுகோடி யணியிறகு, மிலங்கு மணியாகச் சிறகொன்றுக்கு நாற்பதாயிர மிறகுமாமே. ()

இறகிற் சிறிதான விறகொன்றுக்கு மெண்பத்துநாலு லக்ஷமுண்டுங் குறையுஞ் சிறிதான விறகினிடங் கொண்டு பதினெண்ணாயிர மாலமு, மறையு மறுஷோடு குறுசுசொர்க்கம் வல்ல நரகேழ் பாதாளலோக, நிறையமூடிய இறகுதானும் நீளவகலமும் பெரிதுதானே. (158)

பெரியோன் றிருமுன்னே வைந்துலாமும் பிரித்தேயீசுரனுமையாளுடன், அரிய விஷ்ணுவும் பிரமாருத்ர னைந்து பேருமேயமைத்தவாறு, மூறுவ நிலையிலே நினைத்த வன்ன முடையோன் றிருமுன்னே வைந்துஹேறயும், பரிவாதம் ஹவ்வா ஹசனுசைனும் பாத்திமாவுடன் பஞ்சரத்நம். (159)

ரத்நமணியான தஸ்பீதன்னை ரம்மியமாக விறையெடுத்து, மெத்தப் புகழ்ந்தானே நபிநாமத்தை மேதினி யுயிர்க்கிரண மீயக் கத்தன் றிருமுன்னே வைந்து நீமும் கண்ணின்மணி முத்தாய்த் திரண்டதுதான், உத்த அபீபக்க ருமறுதுமா னலியு *மூவைசேடே ஐந்துமாகும். (160)

ஆகும் விதமைந்து தின்றமுத்து மந்த விறைமுன்னே வைந்துநாலு, மேகனமைத்தன னெங்குமுள்ளோ னின்ன மிறைவ னிருப்பென்பது, வாகினறு ஷொடு குறுசுமேலே வல்லோன் புறுக்காவிலிறைதகுத்துப், பாகுந் தகுத்திலே விறைபிருந்து பார்வை யனைத்துமே னிறைந்திருப்பான். (161)

நிறைந்தநாயக னிருக்கவேன்று நிகரில் லாதொரு தகுந்தமைத்தா, னிருந்தங் கதிகார நெரி நீதிக்கு மெடுத்த தகுந்தலை தெதினொன்று, லிருந்த தாலைந்து மிறை முன்னுக விரித்த தவிசதின் பாதநாலும், பொருந்தும் பஜிருடுலு கறசறு புகழ்ந்த மஹரிபுநாலு பாதம். (162)

நாலு பாதமு நாலுநேர நாலுநேரமு நாலெழுத்தா, மேலுமெமூக்தொரு இசாவுமாகு மிதத்தி லடங்காத விரிப்புமைந்து, வாலுந் தவிசொடு பாதநாலுமைந்து வொழுலகையு மைந்துநேர, மேலோன் றவிசிலே றுக்கத்தையூன்றி யொத்த அலிபாக வளர்ந்து நின்றான். ()

* மூவை சோடென்பது, உவைசல் கறுனியோடென்பதாம்.

நின்ற நிலைஅல்லா அலிபுமாகு நிலையினடியிலோர் நுக்கத்து மாச்சே, யென்றநுக்கத்திலே யிறையின்ரூப மிலங்குங் கருத்திலே விருத்தாங்காணு, மன்றே யிருபத்தைந்தாயுதித்தா னடியுமுடி வில்லா னெடியநாய, னன்றாய்த் தவிசினி லிறையிருந்து நபியா முஹம்மதை நாடினனேன். (164)

நாடிமுஹம்மதை நாயன்சொன்ன னாலுவகைகாற்று நெருப்பு நீருஞ், சூடிப்புவிநாலு மும்மதுதீனிற் சுருகிவருகதியே வாருமென் றான், தேடிமுஹம்மது காற்றைக்கண்டு நீனில் வருத்தியே இசுரா யீல்தா, னீடுஞ் சலத்திலே யடைத்துவைத்து நெருப்பைத்தேடியே போனதாமே. (165)

நெருப்பைச் சுருதியி னிலைநிறுத்தி நிகரில் லாப்பேழை யதி லடைத்துக், கறுப்ப நிறமுள்ள இசுறாயீல்தன் கன்னக் குவட்டிலே யடைக்கிவைத்துச், சிறப்பா முஹம்மது ஜலத்தைக்கண்டு செப்புங் கலிமாவி லொப்பாச்செய்து, மறப்பா மீக்காயீ லிடத்தில்வைக்க மண்ணும் வலியவர் தேதுரைக்கும். (166)

உரைக்கும் யாறசூல் யாஹபீபே யுங்கள் பதங்காணப்பெற்றே னென, நிறப்பமாய்நூறு முஹம்மதுதா னெஞ்சிதழிவிமே மகிழ்ந்து சொல்லு, மிறப்பும் பிறப்பில்லா னுனக்கல்லாதே யெல்லாம் பழு தாகு மிலங்குவாய்நீ, சிறப்புஞ் ஜிபுரியீல் பரப்புவியைச் சேர்த்தே யிறைதிரு முன்னிற்சென்றார். (167)

சென்ற முஹம்மதை மகிழ்ந்துவல்லோன் சிறப்பாய் முஸ்தபா நபியேயென்று, னன்றாய் முஹம்மது சஜதாச்செய்தார் நாயன் கிருபையா லிணங்கிப்பார்த்தான், கண்டே யொளிவுதா னடுங்கி வேர்த்துக் கருணைச்சுடர்மூன்று மூக்கில்விழ விண்டசுடர்மூன்றும் விருட்ச மூன்றாய் வேதபெரியவ னமைத்ததாமே. (168)

அமைத்த விருட்சந்தான் தூபாவொன்றுமறிய விகறத்தல் முந்தஹாவுஞ் சமைத்த விருட்சந்தா, னெக்கீனதொன்று சங்கை யொளிவைப்பின் னோக்கிப்பார்த்தா னிமைப்பு னெடிக்குமு னொளி ரூபமாய் நீண்ட இறகுள்ள மயிலாகவு; மமைத்த வுருவாம்பெண் மயிலைப்பார்த்தே யந்த வெக்கினிலே பேறுயென்றான். (169)

ஏறியிருந்ததே யெக்கீனின்மயில் யாகூவெனக்கூவுங் குரலே னசையும், ஆராயிரமாண்டா மதிலிருந்து நோக்கி யிறையைப்

பார்த்தேனுரைக்குந் தாராபுகழ்ச்சியு நிறைந்தவனே தனியேயிருக்க நான்பயந்தேனெனப் பேரார் பெரியவ னாதிநாயன் பிருசத்துடனே தான் பார்த்தானப்போ. (170)

பார்த்துப் பலபல புகழ்ச்சியுள்ள பஞ்சரத்நமென் றைந்து முத்தை வார்த்தைக் கடங்காத ஹயாத்துல் கைபாவாரிக் கடல் விளை யாடவென்று, பார்த்து மயில்முத்தைப் பருகும்போது பதுங் கிக்கடலிலே யடங்குமென்று, மேத்தமானதோர் மயிலைக்கூவி யிந்த முத்தைந்துப் பருகுமென்றான். (171)

பருகு மெனச்சொன்னான் மயிலைப்பார்த்துப் பதுங்குகெனச் சொன்னான் முத்தைப்பார்த்தே, யுருவமொளிவைந்து முத்தானது மோடிக்கடலிலே யுலாவுங்கோலம், பருகுங்கிருபையால் பயிலுமுத் தைப் பார்த்தே யிருந்தங் கனந்தகால முருவமொளிவென்று மயிலு முத்தை யோடியெடுத்ததை யுண்டுதப்போ. (172)

அப்போ சுடர்விந்தாய் மயிலுஞ்சூலா யறுமூன்றுதிர மண்ட மீண்டே யொப்பா யடுக்கண்ட மாயிரமுமுவந்து பதினெண்ணாயிர மாலமு, மெய்ப்பாய்ச் சமைந்தபின் வேறுருபம் வேணுமென வல் லோன் வேறேவைத்தே, யொப்பாய் மொளியைந்தாய்த் தரித் திருந்த முத்தைத் திருக்கண்ணா லுவந்துசொல்வான், (173)

உண்ட மயிற்பார்வை கடலின்மேலே யுலாவுமுத்தொளி வெளி யிலாகக் கண்டுமயிலோட முற்றுள்ளோடுங் காலமனந்தமாயிர மாண்டுபின் னொன்றொன் றாகவே நாலுமுத்தை யோடிப்பருகியேயு யரவேறிப் பண்டே யொருமுத்துத் தெருசியாமற் பாதாளந்தனிற் போனதாமே. (174)

பாதாள முத்து மூலகில்வரும் பருகு மயிலுந்தான் முத்து நாலை வாதாள முத்து வித்துமாக வந்தபெண்மயில் சூலுமாகி நீதம் விளங்கு நால் முட்டையிட்டு நிகரில்லாக்குஞ்சு நாலதுதா, னாதியபூ பக்க ருமறுதுமா னல்ல திருப்பால ரலியுமாமே. (175)

ஆகு மபூபக்கர் காகமாக வாதி யுமறுந்தான் கூகையாக, வாகா மிருவரு மயுலுடைய வலது பிரத்திலே யிருந்ததப்போ, வேதனுது மானு ராந்தைரூப மெங்கோ னலிப்புலி ராஜாளியா, யேகன் மயிலிதி னிடப்புறத்தி லிருந்த தைந்துமே யனந்தங்காலம். (176)

கால் நெடுநாள மெக்கின் மரத்திற் கத்தன் பறவைவந் திருக்கும் போதில், ஆலம் படைத்தோனை நினைத்து மயில் ஆகிகூ வென்றோசை கூவி, வேலைப் பலகலை யெம்பிரானே யெனக்கே பசித்தாப மெனக்கென்ற தால்நாலு விதமான கனிபழுக்கு நாடியருந்து மென்றிறை யுரைத்தான். (177)

இறையோன் றிருமுன்னே வேதமாக விருக்கு மொளியான அலியைப் பார்த்து, மறையாம் பூம்பிஞ்சுகாய் பழமாய் மன்னுனெக் கினிலே சொல்லுமென்றான் பொறையா மலரும்பூம் பிஞ்சுகாயாய்ப் புகழு மெக்கினிலே குறுஆன் பழம். நிறம் பொன் பவளக்கால் பச்சை முத்து நிறமைஞ்சுமயி லிஃதே யுண்ணும்.(178)

அஞ்சு விதமுண்டாய் ரசனையைந்து மைந்து வகை தீனையைந்து முண்டே, யஞ்சுவிதமாகி யுலகமெல்லா மருந்து மைமூன்று மொன்று மூன்றாய்ப், பிஞ்சு பழமுங் காயிலையும் பூவும் பிரிசத்துடனைவித மல்லாவோ, மிஞ்சும் பதினைந்து இஞயத்தென்று மிதத்திலறிய முன்னிதைத்தான் சொன்னேன் (179)

இதைத் தானருந்தின மகிழ்ச்சியாலே யாதல்ஜலாலிவல் இக்ருமென்றே, யோது மயிலைத்தா னிறையு நோக்கி யொளிவு மயிலஞ்சி யுடலம், வேர்த்தே, யாதியொளி மயிற் சிரசில் நிறே யைந்து மொளிசுட ரிறங்கும்போதி, லேதுங்குறைவில்லான் வேதமொன்றை யெடுத்து மகிழ்ந்து தன் திருமுன் வைத்தான். (180)

வைத்தா னிறைதிரு மூன் வேதத்தை வகையாய் நாலொளியாகும்வாறு, மெய்த்த பெருவெளி நாசூத்தொன்று மேலா மலக்கூத்துமாட மொன்று, சுத்தப் பளிங்கி கண்ணாடியாலே சொன்னென் ஜெபறாத்து மிதுக்கு மேலே, கத்தன் லாகூத்து மொளிவாம் பள்ளி காட்சியிதினாலே சூழ்ச்சி தானே. (181)

சூழ்ச்சி விதனாது மமைத்த வல்லோன் சொன்னானிறையவன் மயிலைப் பார்த்துத், தாழ்ச்சி யணுகாத நாசூத்திலே தாவி வாருமென்றிறை யுரைக்கக் காட்சி மயில் வந்து நாசூத்திலே கால் கொண்டிருக்கவே புருவுமாச்சு, வீச்சமமுதகு மயில் ரக்கைதாம் விம்மி யுதறு மென்றிறை யுரைத்தான். (182)

உதறுமெனச் சொன்னா னுதறும் போது வுரை யிலடங்காத பெரு வெளிதா, னிறையக் கடுகாகச் சொரிந்தப்போ நீருண்

டெணைத்தானே புகழு மென்றான், மறையின் வழி யென்னக் கேட்கும் புரு மன்னன் ஹெயோடு யீமைச் சேர்த்தே, யறியுங்கா போடு மீழு மொன்றுயர்தப் புருமுன்னே யாடி நிற்கும். (183)

குருமெனச் சொலுங் கோடி காலமிம்மத் திருகோடி காலஞ் சென்று விருந் தகடுகதை யருந்தும் புரு, நிம்மத்துடன் சொன்னார் நாசூத்தினி னிரம்புங்கடுகெல்லா மருந்தும் புரு, வம்மை மலக்கூத்தில் வாரு மென்றான் வந்தார் மாடத்தின் குயிலானதே. ()

குயிலரல் மாடத்திற் கூவி நின்றார் கூவுங் குரலோசை ஹக்கல் லாஹு மயிலான புருக்குயிலுமாக மகிழ்ந்திரண்டிலர் கனந்த மாண்டாயாகிலம் புகழான ஜெபறாத்திலே யன்ன ரூபமா யாடு மென்றான் மயிலுமரகத அன்னமாக மன்னன் திருமுன்னே யாடி நிற்கும்.

ஆகு ஜெபறாத்தி லனந்த கால மந்தக்கண்ணாடி யொளிவு தனில், நீடு மதுதன்னில் சுரூபந்தனை நின்று பார்த்துதான் மகிழ்ந்து சொல்லும், பாடிப் பாடிஹு வல்லா வென்று பதினெண்ணாயிரம் வருடம் சொல்லுந், தேடித் தவிக்கின்ற வன்னந்தனைச் சற்றே திருக்கண்ணி லிரங்கிப் பார்த்தான். (186)

பார்த்தா னிறைபவ னாசையாலே பார்வை பளங்கி போற் பூண்டாராதம், நேத்திச் சுடரான விறையினுத நேரே யிறங்கிப் பொன்னன்ன மீதி, லார்த்து வாரன்ன மீதிலங்கி யாக முழுதுமே நிறைந்ததப்போ, மெத்த மகிழ்ந்து தானுடல் பூரித்தே மேனி நிறையத் தான் வேர்த்த தாச்சே. (187)

வேர்த்த வுலகந்தான் ஜலமானதால் விம்மியிற கெல்லா முதறும் போது, வேர்த்த நிரத்துளி விந்து நாதம் வெள்ளை நிறக் காமம் வெகு சுடராம் பார்த்து றஹுமத்துப் பாற்கடலித் பார மழை போலே யுலகினிடர் தூற்றல் சொரிமழை மின்னொளிபோற் றொலை பாதாயிரம் வருட மட்டும். (188)

வருடமாயிரந் தொலைபா மழை வானொருயிர் மற்றப் பல்லுயிரும், பிரிசமுடன் சொன்ன றஹுமத் தென்னும் பெரியோன் கடலிலே யிலங்கு நாதம், வரிசை றஹுமத்துப் பாடற் கடலாம் வகையாயு யிர்க்காமம் வந்து கூடிக் கரிசமுற வல்லோன் ஹயாத்துல் கைபார் கனதிக்கட லென்றே பேரும் வைத்தான். (189)

வைத்த கடனும்மம் ஹயாத்துல்கைபார் மண்ணும் முயிரெல்லா நிறைந்ததப்போ, கத்தன் லாஹூத்தி லன்னத்தன்னைக் கடுகவேறு மென்றுரைக்கும்போது, வெற்றி லாஹூத்தில் வந்ததன்னம் வேத வுலமாக்கள் வடிவுபோலே, சுத்த முலுவுடன் மறையுமோதித் தொழுகும் லாஹூத்துப் பள்ளியிலே. (190)

தொழுது லாஹூத்துப் பள்ளியிலே சுஜூதிலிருந்து தேய னம்தகால, மெழுதமுடியாமல் கலிமாவுயி ரிருக்கு மூன்றொரு வெருத்துமாக, முழுதும் கூவென்ற வெழுத்துமீமா முஷாஹிதா நிலை முனையிருத்திப் பழிதிலா நபி யொளிவிலங்கிப் பள்ளிலாகூத்தி லிருக்கும்போது. (191)

இருந்தார் லாஹூத்தி லொளியாம் நபி யெங்கு நிறைந்தவ னுதிறுய, னிறைந்த வகையெல்லா மொருநினைவால் நினைந்த நினை வல்லோ வறியவேணும், பறந்த மயில்பதி னெண்ணாயிரம் பண்டு பெருமந்த வண்டமெல்லாஞ், சிறந்த மாயிலென்ற ஆலமொன்றுஞ் சிறப்பா யுலகேழும் வானமேழும். (192)

ஏழுவானமு மேழுபூமி யேழுகடலோடு மேழுதீவு, நாளுங் கதிர்மதி நாகுசொர்க்க நாலாவகையையு நளினம்வேறு, மேலும் புற்பூடு பலவுயிரு மேனிபலவகை யொருவகையிற், கோலம் பலரூ பம் குலமும் வேறாய்க் கூறத்தொலையாத கோடிகோடி. (193)

கோடி யடங்காமல் ஆலமென்று கொடுத்தேன் பதினெண்ணா யிர ஆலமு, நாடும் படைப்பெல்லாம் வேறுவேறாய் நபியும் வேத மூந்தான் மொன்றாய்ப், பாடுஞ்ஜிப்புரியில் பரபுவியைத் பதினெண் ணாயிரம் பங்குசெய்து ஆடிப்பரந்து முன்னெழுந்த புகையாலம் பலதுக்கும் வானமாக. (194)

வானம் புவியேழு மண்டமென்று வருடமைஞ்ஞூறு வழியின் தூரந், தானே புவியேழும் தானமேழுந்தடிப்பு துடையுமே சரி வகையா, மான வகையாலந் தன்னைப்பார்த்தே யதின்மேலே தானுமறுஷூ நிற்கத், தானே அறுசின்மேல் குறுசுமாகத் தறுகா வதற்குமேற் றஹூத்தைதவைத்தே. (195)

தகுத்தி லிருந்திரை ஸமதுமாகத்தானே யாசாளவேண்டு மென்று, தகத்தலிபெங்கு நிறைந்திருக்க நோக்கம் பலதெல்லாந் தானுகவு, முகக்கு நெருப்போடு காற்றுநீரு முலகம் பலதெல்லாம்

புகுதுவதும், ஹக்குத் தானென்றே தனைப்புகழக் கருணைப்படைப் லபல்லாம் ஹயாத்துமாக. (196)

ஹயாத்துல் கைபாறுக் கடலினீறிற் காகூியுயி ரெல்லாந்தான் படைத்து, தயாத்தி லெண்ணூன்கு படைப்புக்கெல்லாந் தானே யுயிராக விருக்குவென்று, சிபாத்து முப்பதுவிதம் பொருந்திச் சிறந்தவுலகுயிர் பெருக்கவென்று, மவுத்தினலேதா னழிவதுவும் வருமைதனில் நன்மை கேட்பதுவும். (197)

நன்மை தீமைதா னுலகந்தனி னடப்பா யினித்தொகை செய் ததுந் தின்மை யிபுலீசு நாகுசோத் தீனுளிறை நபி தெளில்சொர்க் கம், வண்மை யமைக்கின்ற விதங்களெல்லாம் வல்லோ னெடிக்கு முனெறி நினைவா, யுண்மை நினைத்தேனுன் முடியுமென்றே யுரைத் தான் குன்னென்று முடையவனே. (198)

குன்னென் றெழுந்ததி ரண்டுமாகுங் கூறுமெழு மூன்று மைந்தினலே, குன்னென் றுரைக்கவே பயக்கூனென்றுங் கோல மிறைபவ னினைப்பதெல்லாந், தன்னுலமைத்தோமென் றனைத்து மொன்ருய்த்தானே கபூலுக்கு ளமையும்போது, மன்னுன் குதறத் தாற் கடலு ளுரிமை மகிழ்ந்து திருமுன்னே யமைத்தவாறே. (199)

அமைத்த விதமேதால் முஹற்றமாத மாதிரு முன்னே யுருவா மூந்த, வகுத்த நாலேந்து ஞாயிரன்று வல்லோனுலகான ரூபமொன்றைப் பகுத்துப் பதினெண்ணூயிர விதமாய்ப் பாரப்புவி யேழுங்கதிர் வெவ்வேறுந், தொகுத்த வாகுநாட்டிங்க ளென்று தொலையாய்ப் புவிக்கெல்லாம் வானமேழாம். (200)

வானமுதல் வெள்ளி பசும் பொன்னிரண்டு வைரமூன்று வெண்டாள நாலா, மானமாணிக்க மைந்தாம்வான மதின்மே லாறு தான் புட்பாகந் தோணுமரகதம் பச்சையாகுந் துலங்கும் வானேழும் விதமேழுமாந், தாமே நிலேப்படத் தூணில்லாமற் றரித்தமீனேடு மதியும்ரண்டே. (201)

மதியும் பலபல லெவகுக்கலம் அந்தவானேழி லுள்ளதெல்லாம் பதியா யறுஷூமேற் குறுசுவைத்துப் பாங்காய்க் குறுசுமேற் றறு காவுமா, யிதமா யமைத்துமேற் றவுசையேற்றி யெங்கும் ஸமதாக விரை நிறைந்து, விதனைச் சுமந்தில் அறுசதனை யிரையோன் மலக் மலக்கல்லோ வெர்நிற் கொண்டார். (202)

ஏந்த மனுஷதின் வனுப்பமேதா லெழுபத்திராயிரம் வீதியாக *எந்த வீதிக்குங் குறையில்லாம லெழுபத்திராயிர முத்திச்சர மீந்த பெரிதான சரமொன்றுக்கு மைம்பதினாயிர மணிமுத்து, மெந்த முத்துமே சரிநிதான மெழுவான் புவிக்குமே லதிகமாகும். ()

அதிகம் பெரிதாக விளங்குமுத்து மடுத்தமுத்திடை யைஞ்ஞூறண்டும், விடுத்த சாத்துக்கோர் சாத்தினிடை விரிவு பதினெண்ணாயிர மாண்டுதாண், ரெடுத்த சாம்பிச்சை மரகதமான் துலங்கு நவரத்தினச் சுடருமாகும், பதியா யமைத்திரை தவிசிறுந்த பாரம் பெருநாளார் திங்களாறே. (204)

ஆறுதிங்களி லடுத்தசெவ்வா யாழம் நரகேழு மொயிலோடையு நாறுஞ் சுணையோடு நடக்கும்பால நஞ்சுவிடப் பாம்பு தேளுங்காளி; நீறு படுமேழு நரகலோக நிசானி நரகுக்கோர் கோடிதலர், தாறு தலத்துக் கோர் கோடிமாளி யதற்கு மரவுதே ளனந்தமாகும். (205)

அனந்தன் தேளதின் வனுப்பமேதாலைஞ் ஞூறுண்டும் வாலினீளஞ், சமந்த கடைவாலி லொன்பதாகுஞ் சுமந்தவிடமதி லனுவெடுத்தே, யமைந்த வானேழு முறரவைத்தா லந்தவானேழுந் தெறுத்துப்போகு, மனந்தங் கோடிதா னரகந்தன்னை யாதியமைந்த நாட் செவ்வாயேழே. (206)

ஏழுநிலை செவ்வா யெட்டாம் புதனெட்டுச் சுவர்க்கமு மிலங்கு மொன்று, யேழுமலர்கனி பானெய்தேனு மேவியுடைமது மிகு மணமும், வாழும் ஜென்னத்து வஸ்துகளும் வையமணற்சோலை கூறுல்கினு, நாளும் புதனெட்டின் முடிந்தநாளாம் நல்ல வியாழந்தானென்பதாமே. (207)

ஓன்பதாய் வந்த நாள்வியாழ மூடையோ னமைத்திடு முயிரணைத்து, மின்ப துன்பமும் பாவநன்மை யிலையும் புற்பூடு மிமையோர்களும், வன்பு வைஷத்தானும் பரியுந்தேவும் வாரியுயிர் ஜின்னும் நவ மேகமு, மன்பா யமைத்த நாள் வியாழமகு மடுத்த பத்தாநாள் வெள்ளியென்றே. (208)

வெள்ளிக்கிவமையிற் பகற்மாதியில் வேத னுலோடும் சுருபு நூறும், விள்ளத் தொலையாத தவநிலையும் விதமும் பகற்பாதி

* ஏந்தவீதி-எந்தவீதி.

யிறை முன்பாக, வுள்ளபடியே தானமையும்போது மொருமித் திறையவன மைத்ததெல்லாப், விள்ளு மிறையவன் பரத்தைநோக்கி விரும்பிச் சுஜூதிலே விழுந்தநாளாம். (209)

விள்ளும் சுஜூதிலே படைப்புக்கெல்லாம் வேதபெரியவன் பரிமானமாம் உள்ளவுயிரான படைப்புக்கெல்லாம் மொளிவு நானென்றே யுவந்து நிதம், வெள்ளிவணக்கம்போ னிதம்வணங்க வேதமுறை சொல்லிப் படைப்புக்கெல்லாம் வள்ள லிறையவன் தனி நிறுத்தி வல்லோ னுதத்தை முன்னேவைத்து. (210)

ஆதம் சிரசதின் முஹம்மதவ ரழகாமொளியினி லணுப்போல் வைத்து, வேதம்பெரியவ னுரைத்தபடி விழுந்து சுஜூதிலே விழுந்ததெல்லாம், பாதிவிழுந்ததும் விழுகாததும் படைப்பிற் பலவிதமாகும்போது, சோதி முஹம்மதைச் சுவர்க்கமீதிற் சூழ்ந்த கொலுவிலே யரசிறுத்தி. (211)

இருந்த சுவர்க்கசிங் காசனத்தி லெல்லாப் படைப்புக்கு மிறை யுறைத்தான், பொருந்தி முஹம்மதை நடுவில்வைத்துப் போற்றிசிங் காசனத் தெழுதரமாய், நிரம்பும் பிரகாரஞ் சுற்றிவந்து நீண்ட பதத்திலே யணியவென்றே யிறப்பும் பிறப்பில்லான் றுன்விபா மெல்லாப் படைப்புக்கும் பரிமானமாம். (212)

எல்லாம் படைத்தவ னுரைத்தபடி யெழுந்த வுயிரெல்லா மொருதிறளாய். மெல்லக் கடலேழுந் திரண்டுபொங்கி விம்மி யெழுந்தாற்போ லொருகூட்டமாய், வல்லோன் சுவர்க்க சிங்கா சனத்னின் வள்ளல் முஹம்மதை நடுவேவைத்துத், துள்ளிவிழுந் தோடி யேழுதரஞ் சுற்றி பதத்திலே சுஜூது செய்தார். (213)

செய்தார் பதநோகத் திருச்சரணஞ் செய்தகுழுவெல்லா மெழுந்து நின்று, வையமுலகெல்லாம் புகழுமெங்கள் வள்ளல் முஹம்மது வடிவைப்பார்த்தார், மெய்யின் முழுதுமே கண்டோ ரில்லை மேனியுருவான வுருப்பிலொன்றை, வையம் பலபேர்கள் பலவிதமாய் வள்ளல் முஹம்மது வடிவுகண்டார். (214)

வடிவு முஹம்மது மிருந்தகோலம் வைய மணுவோர்க ளறியச் சொன்னேன், முடியாப் பதினுலு நுபுவ்வத்தோடே முன்னே னபி கொலுவிருந்தவாறு, நெடிய சுடரோடு விளம்பலானு னிறமுங்கண்

ஞூடி மதிவிருத்தம், வடிவுக் கடலோசை முஹம்மதிய்யா வடிவு குமரி போல் வரை துலங்கும். (215)

துலங்கு மட்சரங் குருனெழுத்துத் துய்யகருநிறம் சறும்பாவாக விளங்கு மாணிக்கம் பச்சை முத்து வின்னம் பலபல புட்பாரக மலங்கார மீரேழ் துபுவ்வற்தொன்று யந்தத் தவிசிலே கொலு விருந்தா, ரிலங்கு முஹம்மதா யிருக்கும் பெண்ணை யெல்லாக்குழு வுமே யெழுந்து பார்த்தார். (216)

பார்த்தார் பலபேர்கள் பலவிதமாய் பாவ நன்மையும் பலனும் வேறாய் வேற்றுமையாக வதனங் கண்டோர் வேறே வேறேதான் பலனே யென்றும், பாத்துக் கலத்தைதான் லெவ்குதனிற் பாங்கா யெழுது மென்றிறையுரைக்க, வார்த்தை நானென்ன வென்று சொல்வேன் வரையும் லெவ்குட வரிசை சொல்வேன். (217)

வரியின் முதலவன் றிருநாமத்தை வகையாய்ப் பிசுமிலை முத லெழுதி, யுரிய படைப்பெல்லா மடியாரென்று முபிரு மவனல்லா தில்லையென்று, மரிய வுயிர்க்கெல்லா முலகுதனி லன்னங் குறையா மற் கொடுப்பே னென்றும், பெரிய தவத்தோறை மறுமை மீதிற் பிரிசப் படுத்தியே வைப்பேனென்றும். (218)

வையம் பாவிக ளரருக்கென்றும் வாழுந்தவமெல்லா முஹம்ம தென்று, மெய்துங் கலிமாத்தான் லா இலாஹ இல்லல்லா வென்று மேயெழுதித், துய்ய கலிமாவை முஹம்மதுற் றஸூலுல்லா ஹியைப் பின்னெழுதிச், செய்ய நபிபேரு மியார்கள் பேருஞ் சேர வெழு தியே படைப்பை யெல்லாம். (219)

எல்லாப் படைப்பிறை தனைவணங்க விணங்குந் தவமோடு மறிவுஞ் சொல்லி, நல்லார் தவமோடு பாவ நன்மை நடப்பா ரினத் தொகையாக வென்று, சொல்லுஞ் செயல் நன்மை சுவர்க்கஞ் சேர்வார் துன்ப நரகாள்வார் கொடியோ ரென்று, மெல்லாம் லெவ்கிலே கலமெழுதி யெழுந்த குழுவெல்லாம் வகுத்தெழுதும் ()

எழுதும் விதமான பலனேதென்று லெங்கண் முஹம்மதை யேவருங்காணப், பழுதில் லானபி சிரசு கண்டார் படைத்தோன் மலக்கவர் குழுவுமாகு மெழுதுந் திருநாமம் வேறு வேறே யிலங்கும் நபியவர் றுதலைக் கண்டோர், முழுது நபியாகு நாமம் வேறாய் முஹம்மது நபி விழியைக் கண்டோர். (221)

கண்டா ரிறையவன் தீதாறையுங் கருணை முஹம்மது தீதாரையு, நன்றாய்த் தெரிசித்தோர் நாமம் வேறாம் நபியினிருசெவி கண்டோ ரெல்லா, மென்று மறைநெறி யறிவு கேட்டு மிதமாய் நடப்பவர் நாமம் வேறாமன்றே நபி குமிழ் கண்டோரெல்லா மவரே மூமி னென்னறறியலாமே. (222)

அறிவு பொருந்திய மறைநெறியை யறிந்தோர் நபிமொழி திருவாய் கண்டோர், நிறையுஞ் குரலோசை கழுத்து நீள நேரே தெரிந்தவர் காபிலாகு, மறைய நிறைகாபில் குழு வெல்லோரு மார்பு முஹம்மதை மகிழ்ந்து கண்டோர் பிறகு தீனுகுமவுலா குலம் பிரிய முஹம்மது பிறமுங் கண்டோர். (223)

கண்டா ரிளவையபி ரல்லாவுக்காங் கடிந்த பசியாற்றுங் காமி லாகுங் கண்டாரிருப்பிட மிறை பதத்திற் காசூதி நிலைபெற்ற அவுலி யார்கள் நன்றாம் வலக்கையை கண்டோரெல்லா நாயன் பாதத்திலே கைர் செய்வோரு மென்று மிடக்கையைக் கண்டோரெல்லா மேற்கும் ஷஹீதுகள் வெற்றி பெற்றோர். (224)

வெற்றி முஹம்மதினுருதுடையும் விரும்பித் தெரிசித்த பேர் களெல்லா, மெத்த நடந்துதான் கஃபாவிலே மேனி யிலங்கவே ஹஜ்ஜு செய்தோர் முற்று முழுந்தாளின் கீழே கண்டோர் முஹம் மது நபியும் மத்தோறிற், பத்துநாட்டொழப் பலநாள் விட்டுப் பாதமலை யேனும் பஞ்சேயாகும். (225)

பஞ்சத்தனமான தீனோரென்றும் பாங்கு நடைபிடி பல தறி யார் மஞ்ச குடை நீழன் முஹம்மதரின் மலரின் பாதத்தை கண் டோர்களு, மிஞ்சு புகழான முஹம்மதரின் மேனி முழுதுமே கண் டாரில்லை யஞ்சற் பிரகாரஞ் சுற்றி வந்தே யணுவுங் கண்டிலார் குபி ரானதே. (226)

குபிருக்கதிகமா மனந்தக் கூட்டங் கூட்டம் பிதற்கணந் தனை யகன்று, நபியைப் பிதற்கணஞ் சுற்றாமலும் நாடுந் தெரிசனை காணாமலும், ஹபிலைப் பிதற்கணஞ் வந்த பேரைக் காணமுகநரனி நின்றோரெல்லா, முகியாப் பலவுயிர் மிருகமியாவு முனாபிக்கெலும் ஜாஹில் ஷைத்தான் குலம். (227)

ஜாஹில் குலமான ஷைத்தான் குலஞ் சகல குலமற்றச் சாதிக் கெல்லாம், தாக்கல் வாக்குல நாமம் வேறாய்த் தங்கியவர் நின்ற தூரத்தாலே, பாக்கியர் துன்பம் பாவநன்மை பலனுமிவளவென் றெழு துங்கலம், நோக்கிப் படைப் பெலாங் திருமூன்னுகநொடியில் வரச் சொன்னா னுக்கத்தானவன். (228)

அவனே படைப்பெல்லா முன்னிறுத்தி யண்ணல் முஹம்மதை யறுஷதனிற், புவனம் பதினாலு முகவிளக்காய் புதியோன் றிரு முன்னே கொழுகிவைத்துத் தவனமாயென்னைப் புகழு மென்றான் தாயுங் காயுமாய்ப் புகழும்போதி, லவனியுலகுயிர் மலக்குமற்ற வாவி யமைக்கின்ற வுயிரையெல்லாம். (229)

எல்லா வுயிரையு முன்னிருத்தி வேகபெரியவன் பரிமானமா, மெல்லா மமைத்தேனு னெனதாசையா லென்றனுசையை யெவர்கு மீந்தேன், வல்லோ னருளாசை நிறைந்தபேரும் வம்பாங் கொடும் பாவிக் கில்லையென்றே. அல்லா வுரைப்பதுக் கெவ்வுயிரு மந்தப் பரிமாணுக் குகையுந்தானே. (230)

உகையமாகவே யிறைவகுத்த வுயிரென்றுரைப்பது மொரு திரளாம். வகையா லிறையவன் முன்னிறுத்தி வடிவதிலங்கிய தன தாசையிற், றுகையி லடங்காத விறையாசையிற் றெட்டித் தெறித் தானே துள்ளிச்சுடர், பகையில்லாவுயிர் வலதுக்கெல்லாம் பட்டு திரையாசை யொளிவானது. (231)

ஒளிவு மிறையவனுசை யாகு மொளிவு முயிர்க்கெல்ல மொரு வனீர்தான், றெளிவொன் றெளிவா—விறையாசைதான் றிறமுங் குறைவுமாய்ப் பலவிதமாய்க் கொழுகி யிறையாசை தரித்த மட்டுங் குதாயி னருளல்லோ யுதித்ததப்போ, வழுவில்லாதவன் கமாலியத்தி லணைத்து முயிர் பொங்கி யாசையாச்சே. (232)

ஆசையிறைவ னருளினலே யந்தறாக்கெல்லா மதிமோகமாய் வாசமொருறாஹை யொறுறாஹுதான் வந்துதழுவியே முகந் ததுவு, மாசை யொருறாஹை யினேகம்றாஹை யாசையாகத்தா னொருறாஹுமாய்ப், பாசமாய்க் கட்டித் தழுவினதும் பாரிலுயிர் சேரும் பரிபாரமே. (233)

பாரப்பெரியவ னெளிவாசலிற் பலன்பெற் றிருந்தோரைப் பகரக்கேளீர், நேரிற் பெரியோரு மிமையோர்களு நிலத்தி லறியா மலிருப் பேர்களு, மாரு மிறையாசை தரித்தில்லார்தா னல்லல் ஷெயித்தாலுங் கொசுவுமா, மேறு பறுலாசை தரியார் குல மிம்மை மறுமைக்கும் பாவிதானே. (234)

எல்லாந் திருமுன்னே நிறுத்திக்கொண்டங் கெங்கோன் பரி மான மேதுசொல்வா, னெல்லாப் படைப்புக்கும் பொதுவா யொரு

வென்ற அமானித மிருக்கு தென்றும், அல்லா வமானித மென்ற பொருளறிய பெரும்பொரு ளார்சுமப்பா, ரெல்லா மலக்கு ஜின் பரியுந்தேவு மென்றன் மனுவான தெவ்வுயிரே. (235)

எல்லா வுயிர்களே சொல்லக்கேளு மென்றன் மானிதஞ் சிந்தா மலே, நல்லாப்பேணாரை நாருசேர்போ னாயினாயிரான வமானி தத்தை வல்லாண்மையுடன் பேணிவைக்க வலுமைக் குலமாரு சொல்லு மென்றான், அல்லா திருமுன்னே யுயிர்கள் சொல்லு மாதி பெரியோனே தம்பிரானே. (236)

ஆதிபெரியோனே தம்பிரானே யறியும்வகை யெல்லாம் வகுத் தவனே. சோதிபெரியவா வமானிதத்தைச் சுமக்கத் தகுமில்லாக் குளங்களென்னும், நீதிமலக்குஜின் பலவுயிரு நோராயிறை முன்னே யேலாதென்று, ஆதநபியொலி யிறையைநோக்கி யந்வ மானிதஞ் சுமம்பேனென்ற. (237)

சுமப்பே னெனச்சொல்ல வாதநபி சொன்னா னிறையவன் கொடுத்தேனென்று, மமைப்பேன் முஹம்மதை மனுக்குலத்தி லாலத்துயி ரெல்லா மூமக்கடுமை, சமைப்பேன் மறுநாலு மனுடர் காகுஞ் சகலபடைப்பெல்லா மனிதர்க்காகு, மமைப்போன் சுவர்க் கமு முலக வாழ்ந்தை வையமனிதர்க்கே படைத்தே னென்றான். ()

படைத்த படைப்பெல்லா மனுடர்க்காகும் பாரவமானிதமே தொவெனி, லெடுத்த முஹம்மது மார்க்கந்தனி லென்னை யவ னென்றே யிணையில்லாமற் சடத்தி லொளித்தது பரமே யென்று தானேதா னென்றுந் தானிறையக், கொடுத்தேன் மனுடர்க்கு மனுக் குலத்திற் குருவுமுஹம்மது னானேயானேன். (239)

நானேமனுடர்க்குச் சொந்தமென்று நாயன் பரிமான முறைக் கும்போது வேணவகைகளா லுயிர்களெல்லாம் வேண்டவேண்டியே நபியைக்கேட்கு மென்ன விதத்தாலு மனுரூபமா யென்தன் முஹம் மதை யமைப்பேனென்று சொன்னமாராய மனுடர்க்கிறை சொல் லத் தொலையாநாள் வெள்ளிபத்தே. (240)

பத்துத் தேய்தியி லாறுநாளிற் படைத்த படைப் பெல்லா மிறை முன்னாக, மற்றநாளொன்று சனிக்கிழமை மன்னான் படைப் பெல்லா முன்னே நிற்கக் குற்றப்பா விகணரகுதனிற் கொடுமைத் தழன் மூட்ட வேணுமென்று முத்தபரிமான மிசுறாயீலே யுமது கதுப்பிட்ட பேழைவாங்கி. (241)

பேழைதிறந்தழ னரகேற்றவும் பெரியோனுரைப்படி மெழப் பேழையை, மீளத் திறக்கவு நெருப்பின்மீதின் வேங்கைப் புலி யொன்று வெள்ளையாகத், தாழப்பதுங்கியே வாலடித்துத் தலையை யுயர்த்தியே யிருந்துகொண்டே, யூளையிடுங்கோடை வானிடிபோ லொலித்துக் குரலோசை யேதுசொல்லும். (242)

சொல்லத் தொலையாத விதங்களெல்லாஞ் சோதிபெரியவ னமைத்ததெல்லாம், அல்லா வொருவனே யழிவில்லாதா னரிய படைப்பெல்லா மழியவென்று நல்லான் படைப்பெல்லா மழிக்கும் வேங்கை நானே மவுத்தென்ற நாமமாகுஞ், சொல்லாற் செயலா லும் வலுமையாலும் சுரூபவுருவான சோதியெல்லாம். (243)

எல்லா மழிப்பது நானேயாகு மிறையோ னொருவனே யிருப் பதாகு, நில்லா தெனக்குமுன் னொருபடைப்பு நீறு பொடிசெய் வெனிதுடத்துள்ளே, வல்லோ னறுவேஷாடு வான்புவியும் வகையு மலக்குகள் பலவுயிருங், கல்லு மலைப்புல்லும் விருட்சம்பூடுங் கத்த பெரிபவனமைத்ததெல்லாம். (244)

எல்லா மழிக்கவே யெனைப்படைத்தா னெங்குநிலைந்து நானி ருப்பேனென்றஞ் சொல்லுங் குரலோசை சிலமுளக்கத் தோன்ற நடுங்கியே யுயிரனைத்து, மெல்லாந்தடுமாறி நினைவழிந்தே யிருந்த திருந்தாப்போ லுருகிநீரு, யெல்லா முன்போலே றஹூமத் தென்னுமிறையோன் கடலிலே விழுந்து போச்சே. (245)

விழுந்த வுயிரெல்லாங் கடனீர் தன்னில் விருப்புற்றெழுந்துமே லிறையை நோக்கி விழுந்து ஜூதிலே விழுகும்போதுமோலோனிசு ரூயீ றன்னைக்கூவிக் கழிந்தநெருப்பைத்தா னரகுதனிற் கையால ணான் மூட்டிச் சலவையாகச் சினந்த வேங்கையைப் பேழைமீதிற் சீக்கிரமாக வடையுமென்றான். (246)

அடைத்தார் வேங்கையைப் பேழைமீதி லந்தவனலைத்தா னர கின்மூட்ட வெடுத்த வாங்கார கோபமாக வெழுந்தநரகமு மொரு சுழலாய்த் தொடுத்த நாவுதான் பத்தொன்பது துய்யோன்பதி யெல்லா மழிப்பேனென்று, கடுத்த சினங்கொண்டு வானைநோக்கிக் கடிகி நரகேழும் வருகும்போது. (247)

எழுபூமியு மதிரவேங்கை யிடியின்முழக்கந்தான் மிகநடுங்கி நாளும் பாதாள லோகநோக்கி நழுகும்பூமியைச் சுமக்க வென்று

காளைச்சிரசொன்று வளைந்தகொம்பு கவையுமொன்பது லட்சமாக வேழுபுவிபதி னெண்ணுயிர மெல்லாஆலமுஞ் சுமக்கவைத்தான். ()

சுமக்கு மிடபத்தைத் தருத்தருவுஞ் சுமக்கு மூசிதான் தருத் தருவை, யமைக்கு மூசியைக் கிண்ணமேந்த வந்தக் கிண்ணத்தை யாவுமீதிற், சமைக்க மரவுக்கோர் நவரமானி சகல மகரத்தின் செகுளிநிற்கும், நிமைக்கு ஞெடிக்குமுன் னுனிமலைபிரானிருண்ட சலமேலேமகரநிற்கும். (249)

நிற்குங்கடருங்கி நுநிமலையி னேராயனைத்துமே ஙழுவும்போது வைச்கு நிலையாக நரகினுட வடக்குவாசலி னிறுத்திவைத்தா, ஞெக்குநரகுவான் குறுஷுறசு மோங்கும் விருக்ஷமும் லெவ்குகல, மற்குஞ் சுவர்க்கபா தாளளோக மைம்மதிஞயிரம் புரிசைதாங்கும். ()

தாக்கஞ் சரியவுஞ் ஜிபுரியிலைத் தலங்க ளனைத்திலுங் கலிமாத் தன்னைத் ; தாக்கு மிறைசொல்ல முன்னிலையிற் றக்க பதியெல்லா நிதானமாக மிக்க பதியெல்லா நிலையாய்நிற்கு மேலே வாராம னாகுசுடத்தக்கபதியன் ஹயாத்துல்கைபார் தண்ணீர் தனைக் கொண்டே படைத்தானெல்லாம். (251)

படைத்த பெரியவ னிருளறையிற் பண்டுறுக்கத்தாக விருந் ததுதான், ஞெடுத்த அலிபாக வொளிவளர்ந்து அய்யோன் முஹம் மது மதிற்பிறந்து, விடத்திற் பவளமாய் ஙபியிறகு விறைபின்வல தில் வெண்டாளமாகத், தொடுத்த நடுநிலை யதம்பச்சைதுலங்கு முச்சுடரிலங்கும்போது. (252)

மூச்சுட ரென்று மிலங்கும்போது மூந்தநிறைந்திடு மருட்க ளெல்லா, மச்சங்கலங்கியே திரைவிட்டோடி அஜாசீ லெனுமொரு வுருவெடுத்துத், துட்சணத் தோஷன் கொடியன்காலன் றான்மச ரகில்வந்திருந்து கொண்டான், வைச்சநரகமே துலங்குமற்ற வகையு மிறையவன் ஞன்படைத்து. (253)

படைத்தது நிறுத்தவே யுலகுநிலை பாரநரகேழுந் தடுக்கும் போதி, லடுத்த காவியா நரகப்பந்தி லசாவ லெனுமொரு மலக் குண்டானுன், வெடித்த கழுதைபோற் குரலோசையும் வேகமிரு கம்போற் கரடிரோமங், துடித்த குரங்குகை நாக்குவடுத் துதிக்கை மதகரிகாலும்வாலும். (254)

வாலும் பணைத்துட லரவுதந்தம் வாயில் விசிராற்றஞ் சிரசிற் கொம்பு, கோலும் வலக்கையி லிடக்கை கொள்ளி கொடுமைத்தன மெல்லாங் குடியிருந்த, கோலமிபுலீசு பிறந்தநாளாங் கொள்ளிநர குக்கு வைத்தநாளா, மாலத்துயிரெல்லா மவுத்துண்டான வவதி பிறந்தநாட் சனிக்கிழமை. (255)

சனியோடேழுநாட் சரியானபின் சாற்றுமிறையவன் பரிமான மார், தொனியா மவுத்தான வேங்கையுட தடுக்கா லுயிரெல்லா முருகி நீராய்ப், பனியாய்ப் கடனீரிற் சேர்ந்திருந்த பாரமலக்கான வுயிரை யெல்லார், தனியோன் மலக்கெல்லாம் வாரு மென்றுன் றுனேமலக்கெல்லா மெழுந்தாரப்போ. (256)

எழுந்தே யிறையவன் மலக்கின்கூட்ட மெண்ணிலடங்காத வேககூட்டம் விழுந்தபோதுதான் றாஹு முன்னே வேறே வேறே தானுரு வெடுத்துக் குளிர்ந்த நீர்சுடு நவரெத்தினக் கோலம் பல ரூபம் பெரும் படைப்பு, மெழுந்து பெருங்கூட்ட மிறை முன்னாக நிற்கு மிறையவனேது சொல்வான். (257)

சொல்லு மிறையவன் பரிமானந்தான் சொல்லத் தொலையாத விமையோர்களே, யெல்லா மெனைத்தானே புகழ்ந்திடுங்க ளென் றனே வலைச் செய்திடுங்கள் வல்லாண்மை பொய்யுபெருமை கோபம் வைய்யா முஹும்மதை வரமேசெய்யு, மெல்லாமலக்குட குலமல் லாதே யிறையோன் மலக்குக ளுறுபேரும். (258)

நாலுமலக்குட னிருபத்தேழும் நாயன் பரத்திலே யிருக்க வென்று மேலுமிமையவர் குலத்துக்கெல்லா மேலாந் தலைவனு மாஜா சீல்தன்னைக் கோலுங் கரத்தானைப் பார்த்துக்காவல் கொண் டேயிறையவ னிறையேவலை, ஆலமமைத்தவன் அஜாசில் தன்னை யரசங்காவலென் றப்போவைத்தான். (259)

அரசுக்காவல னஜாஸீலென்று மவன்கையடக்கமா மிமை யோரெல்லாம், வரிசைப்பணிவிடை யிறையேவலை வளமையாகவே கோடிகாலம் அருவைப் படைத்தவன் லவ்குதனி லாதிமுதற்றனே யெழுதிவைத்தான், பிரிச மாகவென் மலக்கெல்லோர்க்கும் பெரிய மலக்கொன்று காயிருகும். (260)

காயிர் குலத்துக்குத் தலைவனாகக்காலம் வெகுகோடி நரகானு வான், பாவம் பலவுயிர் செய்வதெல்லாம் பாவி யவன்றனே சுமப்

பானென் றுங்காவியாவிலே குடியிருப்பு ஹபீபுமுஹம்மதுக்கிவனே பகை, மேவுஞ் சுஜூதுதா னெனக்வந்து மேலாந்தலத்திலே செய் யாதாலே. (261)

செய்யா னிறைக்கேற்ற சுஜூதெனவே தீமைக் கொடும்பாவி யிவனேயென்று, மெய்யா லெழுதிய லவ்குதனை மெத்தக்கருத்தாக வஜாசீல் பார்த்தே, செய்யும் பிழை யெல்லால் பொறுப்பவனே யென்னை வருத்தாதே கொடுமையென்று வையம் புவிவான மலை புற்பூடுவாரித்தல மெல்லாங் குறையில்லாமல். (262)

குறையில்லா மலே யிறைவகுத்த கொற்றபதி னெண்ணாயிரமா லமு, நிறையக் கடுகிடை யில்லாமலே நெற்றி தலைவைத்துச் சுஜூது செய்து மறையி னிறைந்திடு மறப்பொருளே மன்னுவெனச் சொல்லி யழுதழுது, குறைபா யெழுபதாயிரம் வருடம் கூவி யழு தல்லோ சுஜூது செய்தான்! (263)

செய்யு மிறையவன் மலக்கெல்லோருஞ் சேரப்பணி விடை யிருந்தகாலம், வையம் பதினெண்ணாயிரமாலமும் வான மறுஷோடு குறுசுக்கெல்லா, மெய்யாத் துலங்கிய முஹம்மதிய்யா மேலோனறு ஷிலேகிந்தீலாகத், தய்யோன் கொழுகியவிளக்கை நோக்கிச் சொன் னன் முஹம்மதே சுடரொளிவே. (264)

ஒளிவி லுயர்ந்திடு மரகதமே யுண்மை முஹம்மதே முஸ்த பாவே கொழுகிச் சுடர்தீப மிளகிக்கிழே குத்தூபுயமாய்க் கொழுந் தொளிவாய்ப், பழுதி லாநாலாம் வானந்தனிற் பாரவிருதெல்லா மணிந்து கொண்டே, பெழுபதாயிர மாண்டுள்ளாக விரியு மெழுப தாயிரமாண்டுபின். (265)

ஆண்டு வெழுபதி னாயிரந்தா னந்தவானத்தி லிறைமுன்னாகத் தோன்று மெழுபதா யிரமாண்டுதான் றெருகுத்துக்கிழ் பாலிற்றுலங் கநோக்கித், தோன்றுமிப்படிக் குத்தூபுதயந் தொகையா யெழுப தாயிரஞ் சிலநாள், பூண்டவிருதுதான் பணியேதென்றூர் புகழும் சுரூபமா யிருந்ததாமே. (266)

இருந்த வொளிவிலே குத்தூபுதய மிலங்கும் பெண்ணல்லோ முஹம்மதியா நிறைந்த சிறசிலே கிரீடந்தானு நிகரில்லாப் பச்சை வைரத்தாலே, யிருந்த சருவந்து மலிபுலியா மிருதோ டணிகாதில் அசனுசைனுஞ், சிறந்தமார்பதிற் பதைக்கமே தாற் செப்பத்தொலை யாத குறுஆனமே. (267)

ஆன கணையாளி யுதுமானுமா யூபக்க ருமர் கடையமாகக், காணு மிடைபூட்டு மூலகமாதா காலிருகண்டை யாதம் ஹவ்வா, மாணிக்கச் சொண்டு பசுங்கிளி தான் மகிழ்ந்து காத்திலே யேந்தி யது, வானேன் குதறத்தா லுதித்த பாலர் வள்ளன் மூஹறியித்தின் வடிவுதானே. (268)

வடிவு பதினொன்று மரூப மொன்றும் வல்லோன் குதறத்தால் குத்தூபுமாக, வடியு முடிவில்லா னமைத்த வித மறிந்தாற் பதி னொரு அகமியமும், படியிற் பதினொரு விலாயத்தொன்று பாரி லுரைத்தது மிதுதான் முன்னே, வடிவு பொருந்திய குத்தூபுதா னும் வல்லோன் குதறத்தா லிருக்கும் போது. (269)

இருக்கும்போது தானிறை யுரைப்பா னென்றன் மலக்கெல் லாம் வாருமென்று, நிறப்பு மலக்கான பெருங் கூட்டமே நீங்கள் கடத்தேறும் வழிதானென்று, சிறப்பா முஹம்மதை மனுரூப மாய்ச் செய்யிதெனுங் கோலஞ் செய்யப் போறேன், பிறக்கு முயிர்க் கெல்லா ஆதந்தன்னைப் பிதாவென்று ளரக்கவே தாகமா னேன். (270)

இறப்பும் பிறப்பில்லா ஞானேயாகு மெனக்கிங்கு வந்தவர் ஆதமாகு, நிறப்பமா யென்றன் மலக்கோர்களே நீண்ட வலுமையு முறைப்பு முள்ளோர், பெருத்த மலக்காரு வலுமையாரு பேதை யுலக மண்ணெடுத்து வர, வொருத்த ரோருத்தராய்ச் சொல்லு மென்றுனுடையோன் றிருமுன்னே யுரைக்கு மெல்லாம். (271)

எல்லா முறைத்திடு மொரு மொழியா யாறஹிம் றப்பில் ஆல மீனே வல்லாண்மை யுண்டோ வுனையல்லாது வல்லமை யிலலைப் புவியெடுக்கச் சொல்லால் ஹாறாத்து மாறாத்துஞ் சுழன்று வலங் கரித்தேது சொல்வா, ரெல்லா மலக்குக்கும் வலுமை யாங்க ளெங் களிருவரா லாகு மென்றூர். (272)

ஆகா துங்களாற் பஞ்சை யென்றே யாதி பெரியவனுரைக்கும் போது, வேத பெரியோனே தம்பிரானே யெங்களாலேதா னேனு மென்று, வாகு பிரத்தின விரை யுரைத்த வசனமதைத் தட்டி வரும்போது தான், ரூகா யிருவரும் வரும்போதுதான் றங்கள் பெலமெலாக் தடுமாறியே. (273)

தங்கள் பலமெல்லாந் தடுமாறியே தளம்பித் தளும்பியே வரும் போதினின், மங்கை யுருவமா யிளம் பெண்ணாக மதுகுடமொன்று

சிரசிலேற்றிக் கொங்கை பணியாடை கொவ்வை யிதழ் ஹூறுல்ஹீன் போலே வடிவு கொண்டே, யிங்கிதமாகப் பூமாதேவி யிருவர் வரக் கண்டங் கேது சொல்வாள். (274)

ஏது நெடுந்தூர மெங்கேபோறீ ரிளைப்புக் களைப்பாற வென்ன வேண்டு, மீது பானகந் தாகந்தீரு மிந்தா குடியுமென்ற வள் கொடுக்கப் பாதகமான வெறிச் சலத்தைப் பருகு யிருவரு மதி மயங்கிக் கோதை யொரு பூமா தேவியுடன் கூடிச் சனுவிலே கொழுகினாரே.

கொழுகிச் சனுவிலே பூமாதேவி குழந்தை யுருவொன்று பெற்றாளப்போ, வழுகத்துடங்கியே மயக்கந் தீர்ந்து வந்தக் குழந்தையைக் கொலையுஞ் செய்து, வழுவில்லாதவன் றிரு முன்னாக வந்தே யிருவரு நின்றாரப்போ முழுதுமிறை சொன்னானவர்களுக்கு மோச மின்னது செய்தீ ரென்றான். (276)

செய்யும் ஸனுவுக்கு மதுவெறிக்குஞ் சிரசு பாலனை யறுத்த தற்கும், வைய முலகெல்லா மழியுமட்டும் வாதை படுவதற் கடுமை யென்று, துய்யன் பரிமானஞ் சொன்னபடி தொலையாவ மளியே துடங்கிச் செய்தார் ஐயோ வெனும்சத்த மொழிவதில்லை அதாபை பிரிவித்துத்தான் யாவார் சொல்வார். (277)

சொல்லாமற் பெரியவன் சொற்றட்டினார் சூரையாகுமே யுலகத்தோர்க்குத் மெல்லா மிறையவன் மலக்கின் கூட்ட மிந்த வருத்தங் கண்டே நடுங்கி, அல்லா திருநாம மறந்திடாம லனைத்து மிறையைப் பார்த்தே துரைக்கும், வல்லாண்மை யில்லைப் புவி யெடுக்க வல்ல பெரியவா தம்பிரானே. (278)

ஆன பெரியவன் மலக்கின் கூட்ட மனைத்துஞ் சுஜூதிலே விழுந்ததப்போ, தீனமணுகாத வாதினாய னென்றன் மலக்கு நால் பேரும் வாரும், பேணுவுலக மண்ணெடுத்து வரப்பிரிசப்படுத்தியே யனுப்பி வைத்தான், வானோர் ஜிபுரீலு மீக்காயீலு மன்றுரைத் திடு முறைபோற் சென்றார். (279)

சென்று திருக்கையா லள்ளு முன்னே செப்பு வாளப்போ பூமாதேவி, யென்று மழியாத வாதிநாய னிறையோன் மேலாணை யெனைத் தொடாதே, சென்ற பேரெல்லா மேலாதென்று சிரசு பணிந்திறை திருமுன் சொன்னார், வண்டன் கொடுங்கால னிசுறா யீலும் வலுமைசிறந்திட வெழுந்தாரப்போ. (280)

எழுந்த வேகத்தைப் பூமிகண்டு வெல்லாந் தடுமாறி நிலை வழிந்து, துடங்கியேயுடற் சுருக்கியொரு நூறுதர மாணையிடும் வேளையிலெழுந்தே வலறிய வாணையெல்லா மெவளவாகிலும் கேட்டிடாமல் விழுந்து வொருபிடி பெரும்பிடியாய் விசையா லெடுத்தவரிறைமுன் சென்றார். (281)

சென்றே யிறையவன் பரிமானத்தின் சிரசைத் தாழ்த்தியே யொருகை நீட்டிக், கொண்டு வருமண்ணைப் பிடிவிடாமற் குதாயின் றிரு முன்னே நீட்டி நின்றார், அன்று நிலையான விசுறயீல் தான் றறுபதாயிர வருடமட்டும், வண்டனெனச் சொல்லிப் பார்த்தானில்லை வாய்சற்றொளியாமலேது சொல்வார். (282)

சொன்ன ரிசுறயீ லோய்வில்லாமற சுபுஹானல்லாஹு அல்லாஹுவென், றென்ன நினைவுள்ள ளிரக்கமில்லா னென் மேலானையைத் தவிர்த்தாயென்று, னுன்னைத் தவிர்க்க நான் வலுப்பமில்லை யுன்ற னுத்தாரம் பெரிதினாலே, யென்ன விதத்தாலு மெவர் சொன்னாலு மிறையோனேவலைஞ் செய்தேனென்றார். (283)

நின்றாரோயாம லிறையோன்சொல்லா னீயென்னாணையைத் தவிர்தாயென்று, மென்று மொருபேச்சா லிசுறயீலு மிறையே யுனதேவல் பெரிதேயென்று, ரென்றார் பதினெண்ணாயிரம் வருடமிதுவே யிருவரும் வழக்கமாக, வன்றே யெழுபதெண்ணாயிரமாமாண்டு சென்றபின்னாதி சொல்வான். (284)

ஆதிபெரிறவ னிசுறயீலே யனேகம் பிழையெல்லாம் பொறுத்தேனிப்போ, வேது குறையாத மலக்கோர்களே யென்ற லதத்தை யுருவெடுக்கப், போது மெனவல்லாராரெனவே புகழ்ந்தாரவ்வோரு மேலா தென்றார், நீதான் கொடுவந்த கரத்தினாலே நிகரில்லாவுருவெடுப்பா யென்றான். (285)

எடுக்க விறையவன் பருமான் கொண்டே யிசுறயீலிருணையின் மண்ணைக், கொடுக்கஞ் சுரங்காலும் வாலுடலுங் குதிரைபோலவே யுருவெடுத்தா ; ரெடுக்க விதைப்போலே யுருவஞ்செய்யவேகன் விண்ணோர்க்குப் பரிமானமா, மெடுக்குமயிர்மண்ணை லி;ணைப் பார்த்தே யெண்ணில்லாமலே யுருவஞ்செய்தார். (386)

செய்யு முருவல்லா மிருக்கும்போது ஜிபுரீலுக்கிறை பரிமானமாங் கையா லுமதுட சிறகினாலே ஹயாத்துல் கைபாறு நீரைவாரி

யெய்யும் ஆதத்தி னுருத்தவிர வெல்லாவு நமேனு மிறையமென்முன் லைபய நீர்வாரி யெரிந்தாரப்போ பாரப்பரிக்குழா மெழுந்ததாமே. ()

எழுந்த பரியெல்லா நிற்கும்போதி லிணேயா யாஜாசீலும் வந்தானங்கே, விழுந்து கிடப்பது மேலாங்குல மிதத்தி லடங்காத கூட்டமெல்லா, மழுந்தக் கொடுமைதான் செய்யவென்றும் ஆதந்தனேயாதி வகுத்தாலினி, எழுந்த மண்குலங் கெடுதிமேதிண்ண மேறியுளக்கியே யழியுமென்முன். (288)

அழியு மெனச்சொன்னுன் பரிக்குலத்தை யஜாசீலுரைப்பது மறிவேயென்று, கெளியும் பரிக்குலம் பாதத்தாலே நீறு துளியாக நித முளக்கப், பொழுது விடிந்தி சுறுயீல் வந்து பொடியெல்லாஞ் சேர்த்து மறுத்துஞ்செய்ய, வழிந்த வுருவேமே செய்யவில்லே யடையாளம் வேறதாகு மங்கம். (289)

ஆகுமுருவமும் ரூபம்வேறு யாதிபரிமானம் விண்ணேர்க்கெல்லாம் வாக மிசுறுயீல் செய்யுமர்தவடிபோலல்லோ செய்யநிதமே கனிசுறுயீ லாதந்தன்னே யெண்பத்தி நாலகூதந்தர. மாகவெழுப்பினுர் பல்ரூபமா யந்தவிதம் ஆதம் பலதுஞ் செய்தார். (290)

செய்யும் படைப்பெல்லாம் ஆதந்தனேச்செய்த விதம் பார்த்து விண்ணேரெல்லாஞ், செய்தா னெண்பத்து நாலுலட்சம் சியாத்து மாவும் சிறப்பும் வேறுய்த், துய்ய பெரியவன் ஜிபுரியீலேச் சொன்னுன் ஹறாமத்துக் கடனீர்தன்னே, வையம் படைப்பபெல்லா மெழும்ப வென்றுவாரியுருமேலே வீசுமென்முன். (291)

வீசுமெனச் சொன்னுன் ஜிபுரியீலும் வேதறஹறாமத்துக் கடனீர் தன்னேக், கூசாதவருட சிறகை தோய்த்துக் குல்ஹறா அல்ஹம்துங் கூவியோதி, வீசற் படைப்பெல்லா மெழுப்பக் கண்ட வெகுகோபங்கொண்டே இசுறுபீலு நேசமாக நான் செய்ததுதா னீடுழிகால முடியவில்லே. (292)

முடியாச்சடமான ஆதந்தனே முடிக்க வுதவிதா றெப்பனு வெனறடியின் நின்று துஆவிரந்தே யாதிபரத்திலே யிரங்கிக் கேட்க, வடிவு முஹம்மது ஆஷக்காகவந்தே யிசுறுயீல் முன்பே நிற்கச், சடமு முருவமாயா தந்தனேச் சமைத்தார் பாசுக்குத் தன்னே பார்த்து. (293)

பார்த்துச் சமைத்திடு முருவந்தனேப் பாங்காய் நீட்டியே கிடத்திவைத்து, நேற்றுச் செய்ததுக் கதிகமென்று நீயு மறிவதோ

வெனக் கோபித்து, மெத்தச் சினங்கொண்டே யுமிழ்ந்தகாறல் மேனிநடுவிலே விழுந்ததப்போ, வொற்றைச்சிறுவிரற் கொண்டெடுத்தே யுதறியெரிந்தவர் போயினாரே. (294)

போனார் பரிக்குலம் பண்டுபோலப் பொல்லா வேகங்கொண்டனைத்தும்வர, வானோ ரிசுறுயீ லுமிழ்ந்த காறல் வயிற்றி னடுக்குழி மண்ணானதங், கான கித்மீராய்ச் குட்டிநாயென்றுதர் தனைகாத்து நிற்கும்போது, வேணு பிறகாரம் பரிக்குலத்தை விரட்டி யாதத்தைக்காத்துநிற்கும். (295)

காற்றுச் சடம்அூக மழியாவகை கண்டே யிசுறுயீ லதிஜப மாய் ஏற்ற மாகவே சிரசுசெய்ய வென்னாலாகாதென் றிறைமுன்னாக, நேத்தி மாமண்ணைப் பிடித்துவல்லோ னேரே யவர்வைத்துப் பணிந்து நின்றார். பார்த்தா னிறைபவன் குதறத்தாலே பகர்பத்தெளுத்தினாற் சிரசுண்டாச்சே. (296)

சிரத்தை யுடலோடே பொருத்திருப்பார்த்தார் சேர்ந்து சிரமுட லொன்றாய்க்கூடி, பொருத்தும் ஆதத்தின் வடிவைப்பார்த்துப் பொங்கி யிசுறுயீல் மிகமகிழ்ந்து, கருத்தனபியாத முருவாய்ச் சென்று கற்ற பெரியோனைச் சுஜூதுசெய்தார், வரத்தை பொருந்திய நபியாதத்தை வல்லோன் மகிழ்ந்துபார்த் தேதுசொல்வான். ()

சொன்னா றென்றனின் ரகசியமே சுரூப மெனக்கொரு மாளிகையே, கண்ணாலுனைப்பார்த்து மகிழ்ந்ததுபோற் கண்டிலே னொருகாட்சியுமே, பன்னே வானர்க்கு நான்மலக்கே வந்துபாருமே யாதந்தனை, முன்னோ னுரைப்படி மலக்குநாலு முடியா மகிழ்ச்சி கொண்டதனைப்பார்த்தார். (298)

பார்த்தாராதத்தை மலக்குநாலும் பார்க்கவுடலதினுவீடாய்க் காற்று நெருப்புநீர் மண்ணுடைய கருவு முருவிலேகலந்ததப்போ, பார்த்து ஆதத்தின் றாஹூ தன்னைப் பாதச்சடத்திலேபோகவென்று நேத்தியாகிய றாஹூ தானு நின்லசிற்றிலே நுழைந்ததப்போ. (299)

நுழைந்த யிருளிலே தரிகொள்ளாம னொடியில் வேளியேவந்துரைக்குமறாஹூ, மொழிந்து தனியேநா னிருக்கரிதே யுற்ற துணையெனக்காருமில்லை, நுழைந்து நுழைந்துதா னேழுதா னொடியில் வெளியே வந்திதுவே சொல்லு, மெழுந்த சுடரான வாதிநாய னெந்தன் முஹம்மதே குத்பேயென்றான். (300)

என்றும் குத்பான வென்றுணையே யிறங்கி யாதத்தைப் பாரு மென்று னன்றே குத்பான நபியொளிவு யாதமுருத்தனை யனுகிப் பார்க்க வொன்றுங் கலிமாவாய் நபியொளிவு முரைத்தவிருபத்து நாலெழுத்தாற், சென்ற ஆதத்தின் சிரசு முதற் சேரவெழுத்தெல்லாந் தரித்ததப்போ. (301)

தரித்த நிலையெல்லாந் தவநிலையாந் தயவுமுஹம்மது தாபரமாம் வருத்தி யிருப்பது நாலெழுத்தும் வளையு மூன்றே வெழுத்துக்குள்ளே பொருத்த றியாத நடுக்கோட்டைக்கு யொளிவு நபியல்லோ சுடர்துலங்கி, யிருத்தும் விளக்கொளி யிலங்கும்போதே யேறி யறுவாகும் ஆதத்துள்ளே. (302)

ஆதமறுவா அவ்வழகுகண்ட பந்தச்சடத்திலே யிருந்தப்போ, வேதபெரியவன் றாஹைறப்பார்த்து வெளியேவருகவென்றுரைக்கும் போதிங், கேதுவிதத்தாலும் வெளிவாறேனு னென்றே யுதாத்தினேறி நிற்கும், போதலாகவே. (303)

இறுபத்தாறுமே நிறையும்போதி லெழுந்தபெருந்தும்ம லிருகாசயிற், சுரூபமுயிர்வந்த போதிலாதம் சொன்னார் அல்ஹம்து லில்லாஹியென், றிருவிழிமேலாய் முழித்துப்பார்க்க வேதனாறுஷிலே கலிமாக்கண்டே யொருபத் துத்தரங்கலிமாச்சொல்லி யுரைப் பாரியாறப்பில் ஆலமீனே. (304)

உரைப்பா றறுஷினி லுனக்கினையா யுற்றதுணைவராரெழுதும் வரிக் குருபத் தருமுண்டோ வெனக்கு முன்னூற் கூறு முஹம்மது குலம் வேறுண்டோ, பருவத் தென்தனி னொலிவினாலே படைத்தேன் முஹம்மதுப் பயஹாம்பறைக் குருவா முஹம்மதி னொளியினாலே கோலம் பலதெல்லா யமைத்தேனென்றான். (305)

அமைத்தே ஆமதுட பாலராக ஆகிறநபியாய்ப் பிறப்பார், சமைத்தே யுலகெல்லா முஹம்மதுகாஞ் சகல புகழ்ச்சியு முஹம்மதுக்கா, மெனைத்தான் புகழ்வது மெங்குமாகு மெந்தன் முஹம்மதை யெனை வணங்க, வுமைத்தானுகிறின் மண்டாடுமோ ருண்மை முஹம்மது முமதுபாலர். (306)

பாலர் முஹம்மது தீனிலென்னைப் படைத்தேனெனச்சொல்லி பெழுதல்லாஹு, மேலு மதுபாலர் நபிக்குத்தந்தை மேன்மை தரு

மெழுதல்லாஹூ, பாலன்றனையிரு விழியிற்காணப் பலன்பெற்றே
னென வெழுதல்லாஹூ, ஆலநபிமேலே யாசைகொண்டே ஆதமழு
தழு தேது சொல்வார். (307)

சொல்லு மிறைபவன் பரிமானமாம் சொன்ன வகையெல்லாம்
வரையுமென்று, வல்லோ னுரைப்படி லெவுகுதனில் வரைந்ததே
கலமோய்வில்லாமல், அல்லா தனைப்பார்த்து லெவகுசொல்லு மாதி
பெரியோனே தம்பிரானே, யெல்லாரகசியங்குறையில்லாம லினிமே
லெழுத்தல்லா தின்னமுண்டோ. (308)

உண்டோ வெனச்சொல்லிக் கேட்குபோதங் குரைக்கக் கல
மொரு லாமலிபை, வண்டத் தனஞ்சொன்ன பலகைதன்னை வல்
லோன் ஜிபுரியீ றன்னைக்கூவி, யன்றேதான் ஹயாத்துல் கைபாரி
லந்தக்கடனீரி லிறகைத் தோய்த்து, நன்றுயடியுமென் றுரைக்கும்
போது நாயன் ஜிபுரீயி லடித்தாரப்போ. (309)

அப்போ நிறைந்திடும் வரியினும மனேகவிதமாக வழிந்த
தப்போ, வெப்போது முள்ளான் படைப்புக்கெல்லா மிடையின்
மவித்தென்றே யெழுதச்சொன்ன, னட்பாம் பலவகை யிரணம்
அஹூநாளும்புதிதென்றே யெழுதினதாற், றப்பித்தப்பியே பிழைப்
பாரென்றுந் தலையிலே வரி யெழுத்துமாச்சே. (310)

எழுதி முடிந்தபி னிமையோர்க்கெல்லா மெம்பிரான் சொன்ன
மாராயமு, முழுதும் படைப்பெல்லாம் ஆதந்தனை முன்னே யிருத்
தியே சுஜூதுசெய்யப், பழுதிலாதவன் சொன்னபடி பாரமலக்
கெல்லா மொருதிரளாய்த், தொழுதே யெல்லாம் ஆதந்தனைச்
சொல்வா னஜாசீலுந் தொழுதேனென்றான். (311)

தொழுது பணிவிடை யுனக்கேசெய்தேன் றேன்று முருவாத்
மண்ணல்லவோ, வழுது மண்ணைத்தான் வணங்கேனென்று மஜா
சீலுரைத்திட வவனுரைப்பா, னெழுது மெனச்சொன்னான் கலத்
தைப்பார்த்தேயினங்கா னஜாசீ லிபுலீசென்று, முழுதும் காபிரா
மிபுலீசென்று முறையாய்வரியினி லெழுதலாச்சே. (312)

எழுதி மீக்காயி றனக்குச் சொல்வா னினங்கா னஜாசீலா மிபு
லீசனை, முழுதுங் கசடனை யானையிட்டு மோசநரகத்தி லெரியச்

சொன்னு, னழுதேயிபுலீசு மென்னசொல்வா ஞதிபெரியோனே தம்பிரானேபழுது குலமானே யென்னிடத்திற் பாரவுயிருன்னே யல்லா துண்டோ. (313)

அல்லா வொருவனே படைத்தவனே யரியநரகினு மிருப்ப வனே, யெல்லா வுயிருக்கு முயிரானவர் வெனக்குமுயிராய் நீயிருப் பதாலே, நல்லார்க்கு நல்லா னற்பதவி நண்ணும்பதவிதானாகி லானேனெல்லா நினைவையு நிரப்பவல்லோ வெனக்கு முபகாரஞ் செய்வதென்ன. (314)

என்ன வேணுமென் றிறையுரைக்க வெங்குந்தேடி நானுவந்து கேட்பே, னென்ன கேட்கினுங் கொடுத்தெனக்கு மென்னை யரசனு பெனக்கேவலுமெண்ணு முவந்ததை யெனக்காகவுமெந்தப்படைப் பையுந் தடையில்லாமற் சொன்னுன் கொடுத்தேனென் றுனது வாக்காற் சொல்லி லடங்காதான் சரியேயென்றுன். (315)

என்று மழியாத னெங்குமுள்ளோ னெல்லார்க் குபகார மென்னுயகன், கண்டுகேட்டது தருவேனென்றுன் கனவேகங் கொண்டே யஜாசில்போனுன், கண்டே யொருமாளி யுட்புகுந்து கண்ணுக்கடங்காத வைரப்பேழை, யன்றே திறப்பினுற் றுறந்து பார்த்தா னதிலேசரமாக வைரமாலே. (316)

என்று சரமொன்று பதக்கமேழு மிடதுமார்பிலே தரித்துப் பார்த்தான், றுன்று வடமாலே தருகவென்றுன் சொன்னுனிறையவ னுனக்கே யென்றுன், வண்டனருஷைவிட்டி றங்கிக்கிழே வைரமாலே யைக் குனிந்துபார்த்தா, னன்றே சரமேழு நரகேழுமா யவன்றன் மார்பிலே கிடக்கக்கண்டான். (317)

கண்டு நடுங்கியே நிற்கும்போது கத்தன் பரிமான மீக்காயீலே வண்ட னுபுலீசை யிறக்குமென்றுன் வள்ளல் மீக்காயீ லுனெழுந் தேயன்றே அலியார்கென் றேவகுத்த அறுஷூத் தலமதி லிருக்கும் வாளேக், கொண்டே யிபுலீசன் வலக்கைகாலுங் குறையாவேகங் கொண்டவர் வெட்டினுர். (318)

வெட்ட வொருகாலுங் கையுமறுந்து விழுந்து கிடக்கையி லேது சொல்வா னெட்டு விதத்தினுல் வெட்டினுலு மெனக்கேவல் செய்வோரெங்கே யென்றுன் கெட்ட செயலாகு முனதுமாய்கை கெட்டோருனது டயேவலாளர் மட்டுநரகேழு முனக்கேயென்றுன் மகிச்சியாயவன் சிரித்துக் கொண்டான். (319)

சிரித்த இபுலீசை மீக்காயீலுஞ் சினமா யொருகையா லெழுப் பித்தூக்கி, நிறுத்தி யிடதுகா லாலுதைத்து நேரேநரகத்திற்றள்ளி விட, விருத்த மாய்சுற்றிக் காவியாவில் விழுந்தா னெயிலெனு மோடைதனி, னிறுத்திக் காடிபோல் வளர்ந்தரோமம் நீண்ட கொம்புட னுருக்குச் சட்டை. (320)

உருக்குச் சீராவை யுடல்புனைந்தா னொருகை யொருகாலு மூடன் வளர்ந்தா, னெருக்கம் பாதாள நரகமட்டு நேரேயோடியே வெளியில் வந்தே, யுருக்கத் தலையேழு முடலொன்றுள்ள வுவமை யடங்காத வுருவமாகிச், சிறக்கும் பெண்ணுரு மனுவடிவாய்ச் சோப்பணியெல்லா மணிந்து கொண்டான். (321)

கொண்டா னுமைபோல வடிவுருபங் கோதிக்குழன்முடித் தனிந்துகொண்டு, மண்டலமெங்குந் தனதுமாயை மருட்ட வழி பார்த்தே யிருக்கும்போதி, லொன்றுங்கிடையாமற் பண்டுபோலே வொழிந்து நரகத்தி லிருந்தானப்போ, தன்று நெடுங்காலஞ் சென்றதற்பினுதி பெரியவன் பரிமானமாம். (322)

ஆதியீசனும் மும்மூர்த்தியு மனேகதேவதைக் கடலெழுப்பி, மாதை யுமையாளு மீசனுதன் மங்கையிட விலாவிற்பிறந்தே, யீது சலமதி லமைந்திருந்த தெல்லாங் கடலினின் றெழுந்ததப்போ, சோதி பரிமானந் தேவர்கெல்லாஞ் சொன்னுதைத்தை தொழுங் களென்றே. (323)

தொழுங்க ளெனச்சொன்னன் றெழுகுமுன்னே தோசியிபு லீசு மோடிவந்து, முழுதுங்குழுவதிற் குறைவிடாமன் மோசமெனு மாயைப் பொடியைத்தூவி, யழுதழுதுதா னெல்லோர் முன்னே யையோ விதிப்பய னிஃதோவென்றான், றெழுதங்கிபுலீசைச் சகல தேவுஞ்சொல்லு மெமதையா வெனச்சொன்னதே. (324)

சொல்லு வானப்போ திபுலீசுதான் சூழ்ந்த தேவரே பெரி யோர்களே, எல்லார்க்குமுன்னே யெனேவகுத்தா னெனக்குத் தெரி யுங்கா ணெவ்விதமு, நல்லவிபரமாய்ப் பிரித்துச்சொன்னே னுன் சொன்ன சொல்லைக்கேளாமலே, அல்லா வுரைப்படி செய்வே றென்ற ஹாறாத்து மாறுத் திருபேருந்தான். (325)

இருபேரு மிந்த மண்ணுதத்தை யிணங்கிச் சுஜூதிட்டா ரியானிருக்க, வுருவான மண்ணைத் தொழுதானென்றே யோய வமரியென் றுறைத்தான்பின்னு, முருவம்பணிமாற லுணைப்பணி

வோருயர்ந்த அஜாசீலின் குலமுனாமே, மறுபேச் சுரையில்லா தேலாதென்றால் மகிழ்ந்தே யெல்லோரும் வாழலாமே. (326)

வாழ்வின் பெருமையை யென்னசொல்வேன் வருத்தம் வரும் பாட்டை யென்னசொல்வே, னேழைத் தனம்வேண்டா வென்பார் வேண்டா மிணங்கிச் சுஜூதிட வேண்டாமென்று, காளையிபுலீசு போனபின்பு கத்தன் ஜிபுரியீ லாதந்தனைச் சூழ்ந்த தேவர்கள் குழு முன் வைத்துச் சொன்னார் சுஜூதிட்டுத் தொழுங்களென்றே. (327)

தொழுகப் பரிமானம் ஜிபுரியீலுஞ் சொன்னமாராயத் தனக் கொவ்வாமற், குழுவுக்கரசான வியனுதன் கோலவுலைமயாளு மூம் மூர்த்தியு, மொழுமைக் குலமல்லா விதைவணங்க வெங்கள்குலம் சாகாக் குலமேயாகு, முழுதும் பணிவது மில்லையென்றார் முன் னேன் ஜிபுரியீ லாதந்தனை. (328)

ஆதந்தனையவர் சிரசிலேந்தி யாதிபெரியவ னறுஷில் வைத்து, வேத பெரியோனே யெம்பிரானே வேண விதமெல்லாஞ் சொல் லிப்பாத்தே, னாதந்தனைநோக்கிச் சுஜூதுசெய்ய வாகாதெனச் சொன்னார் தேவரெல்லாம், வாதைக் குலமெல்லா மிபுலீசுக்கு வார்த்தைப்பணிவிடை செய்யவென்றான். (329)

செய்யாக் குலமெல்லாம் ஷைத்தானென்றே சேர்க்க நரகத் திற் பரிமானமாக்; அய்ய பரிமானஞ் சொன்னபடி தொலையா நர கேழு மிபுலீசுக்குச் செய்யும்பணிவிடை ஷைத்தான்குலச் சேனைப் பரியைந்து பேருமொன்றாய், வைய நரகாண்டங் கிருக்கும்போது வல்லபெரியவன் பரிமானமாம். (330)

வல்லபெரியவன் பரிமானந்தான் வகையாம் வைரம்வெண்டர ளத்தாலே, சொல்லத்தொலையாத மரகதத்தாற் றுலங்குமுத்தாலும் பவளத்தாலும், அல்லா றஹ்மத்தி ஹயாத்துல்கைபா றந்தக்கட லிலே தானிருந்து, வெல்லாங் குறையில்லா தென்றுபோலே யெழு பதிலக்கத்தை யெழுப்பினாலே. (331)

எழுப்பு மாளிகை யொருமுத்தாலே யெந்தவுலகெங்குங்கோடி மாளி, முழுப்பச்சை முத்தால் மனுடரெல்லா முடியாதவர்காலம் வயதாயிர, மெழுப்பி யுலகமு மனுவுமாளி யெந்தமாளிக்கு மாண் பெண்ரண்டா, மெழுப்பியுலகத்தை வான்புவிக்கு மிடையினிறுத் தியே யிருக்கும்போது. (332)

இருக்கு முலகெல்லா மழிக்கவென்றே யெழுந்தானிபு லீசுவே சுரூப, நிரக்கு மாணிக்க முலக மெல்லா நேரே யொளி வீச நேர் வாசமுஞ், சிறக்கு மழகோடு நரை தாடியுஞ் சிங்கார மென்ன சொல்லப் போமோ, வெவர்க்கும் வயதா யறிவாளரா யெழுபது நகரெங்குஞ் சென்றான். (333)

சென்று னகருள்ள வாணும் பெண்ணுஞ் சேர வந்து தான் பாதம் பணிந்தே, யென்றுங் காண்கிலோம் பெரியவரே யிவ்வூரி றங்கிய விதமே தென்றார், பண்டு நெடுங்காலம் பெரியவர் நாம் படைத்தோன் அறுஷிலே தவம் புரிவோ, மண்டலமெல்லாம் ஜிபுரீ லென்று மகிழ்ந்திங் குறைப்பது மெனைத் தானென்றான். (334)

தான்றான் றஹுமத்துக்கு வந்ததென்றான்றாழ்வுலாச்சத்தும் பொறுக்க மாட்டே, ஞன்றானிறங்கினே னிறைபல்லாம னடக்கும் விதமுற்ற செய்தி சொல்வேன், வானேன் பரிமான மண்டு த்தை மகிழ்ந்தே யென்னுட சிரசிலேந்தி, நானே நகரெங்கும் வருவேனனை நாயனுரைத்தானென் றதுவுஞ் சொல்வேன். (335)

சொல்வேன் ஜிபுரியீனனே யென்று சுருபம் வேறாக விருப்பே னப்போ, வல்லோனுதத்தைத் தொழுகச் சொன்னான் வாருமென வெல்லோர் தமை யழைப்பேன், அல்லாவுரைத்தாலும் மார் சொன் னாலும் ஆதமண்ணல்லோ தெனச் சொல்லுங்கள், சொல்லாதே நீங்கடொழு திராகிற் சொன்னே னரகல்லாற் சுவர்க்கமில்லை. (336)

இல்லை யொருக்காலும் பதவி சொர்க்க மென்பேரெவர்க் கொன்றுஞ் சொல்ல வேண்டா, மெல்லோரு மொன்று பதிர்ந்து பேசு மிழுந்த பேச்சொன்றும் பேச வேண்டாம், பொல்லா நெறி, யெல்லாம் வருத்தி வைத்துப் போனானிபுலீசு நரக நாட்டில், வல் லோனுரைப்படியா தந்தமை மாரிச் ஜிபுரியீ லெடுத்து வந்தார். ()

வந்து நகரோரை வரவழைத்து வரிசையாகவே யாதந்தமை, மூந்தக் கொலுவிலே நிறுத்தி வைத்து முன்னோன் தனைத்தொழும் பாங்கு போலே, பந்தியாகவே நகரிலுள்ள படைப்பி லாணும் பெண் ணுலகமுமாய்ப், பிந்தாதே தொழு மெனவுரைக்கப் பேசுவாரப் போதெல்லாருமே. (338)

எல்லோருஞ் சொல்வா ரேதுகாணு மெந்த நாளு மில்லாப் புதுமை, நில்லாதே சொல்லு நகரை விட்டு நீதியோ மண்ணை

நிறுத்தி முன்னே, வல்லோனுரைத்தாலு மார் சொன்னாலும் வருந் தோ மினி வரவேண்டாங் கண்டீர், நில்லாதே செல்லு நிமிசநேர நீரு மினிமேலும் வரவும் வேண்டாம். (339)

வேண்டா மெனச் சொன்னார் ஜீபுரியீலு மிக்கோ னுதத்தைச் சிரசிலேந்தி யாண்ட பெரியவ னறுஷில் வைத்தே யாதி பெரியோனே தம்பிரானே, யேன்ற விதமெல்லாஞ் சொல்லிப் பார்த்தே னீசப்பாவி யென்றிமையோர் சொல்ல மாண்டலிசுறுயீ லானவர்க்கு வல்ல பெரியவன் பரிமானமாம். (340)

பெரியோன் பரிமான மிசுறுயீலே பேழை யதனின் முன் வைத்த வேங்கை, யுருவர் தெரியவே காணிம் விழி யுமது விழியாலே நகரமெல்லா, மெரியுந் தணலாகக் கோபங் கொண்டே யெழுபதுலகையும் பாருமென்று, னுருகி யிசுறுயீ லுணர் வழிந்தே யோயாதே சொல்லி யழத்துணிந்தார். (341)

அழுதே சொல்லுவார் யாறஹீமே யாதி பெரியோனே யெம்பிரானே, பழுது வருமென்று பரிமானபடி பாரப்புவி மண்ணை யெடுக்கும் போதே, யழுது புவியிடு மாணை தட்டி யள்ளி யிடும்படி மண்ணை யேந்தி, யேழுபதி னெண்ணாயிரம் வருடமேங்கி யழுத்து மெனக்குப் போதும். (342)

எனக்குப் பரிமான மிதுதவிர வெந்தப் பணிவிடைக் கிணையில் லானே, யுனக்கிங் குவந்தவர் பேரைச் சொல்லி யுன்றன் பேரை யுஞ் சொல்லி யல்லோ வெனக்குப் பெரியன் பேரைச் சொல்லி யெந்த வாணையும் விடுவாரப்போ, துலக்குச் சரிகாணு மென்மேற் குற்ற முயர்ந்த பெரும் பாவஞ் சுமக்க மாட்டேன். (343)

சுமக்கும் பெரும்பாவ நல்ல செயற் சோராம லுன்னை விலக்கி வைப்பே, னெனக்கு வாராமல் விலகும்போது வெல்லாஞ் சுமப்பது நீயோ வென்றார், நமக்குச் சேர்வது நன்மை காணு நாயன் கொடுத் தானென் றெவருஞ் சொல்லச் சமைக்கும் பரிபார முலக வாழ்க்கை சகல வாழ்வுடன் மதலையேது. (344)

ஏது பலனுந் தான் கிடைத்த போதிலிறை யோன் கொடுத்தா னென்றிணையே சொல்ல, வேதனை வந்தா லதுவே சொல்ல வெண் ணேவு தானும் வெகுவாய்ச் செய்வேன், வேதனை யெல்லா மஜாசில் செய்ய விளைந்த பாவமு மதனைச் சேரு, மீது செய்வேனு னென்ற போதி லிசுறுயீல் சொல்வா ரியாறப்பனு. (345)

றப்பனு வெங்கணுபகனே றப்பில் ஆலமீனுனவனே யொப் பான பாவச்செயலுக்கெல்லா மூண்டுபடச்செய்தா மிபுலீசென்றே யப்போ திறையவ னிபுலீசையு மைந்து தலேவரு மனேகந்தேவு நட் பாயனைத்தையு முன்னிறுத்தி நாயன் பரிமான மாயுரைத்தான். ()

அப்போ தஜாசீலே முன்னிறுத்தி யாதி பெரியவனேது சொல்வா, னெப்போதுமுள்ள நாயனல்லோ வெந்தன் முஹம்மதை யுலகுதனி, லொப்பா மனுரூபஞ் செய்யவேணு முலகி லுயிரெல்லாம் புகழுவேணுந், தப்பில்லாமனு வெல்லோருக்குந் தகப்பனுனவா ராதன் தானே. (347)

ஆலமுலகெல்லா மரசாளவு மாணும் பெண்ணுமா யுலக மெல்லாம், வேத முலகெல்லாம் புகழவேணும் விளங்குஞ் செய் நன்மை தீமை செய்தே மேதுமுயிரெல்லா மிறக்கவேணு மென்முன் வருட நன்மை தீமை, நீதஞ் செலுத்தியே நன்மையெல்லா நீண்ட நபி சொர்க்கமாள வேணும். (348)

ஆளுநரகந்தா னுனதுதேச மனியாயமெல்லாஞ் சேரவேணும், வாழு முலகந்தான் கடன்மலேவாய் மகிழ்ந்தே யிருக்கிற பலவிதமுஞ் சூழுங்கழுவேறு மலேவேதுமாய்ச்சொல்லு முலகெல்லாம் புவிவேறு மாய், நீளமகமேரி னீ யிருந்து நிதமுந்தேவர்க ளுணேப்பணிய.(349)

பணிந்தே யுலகெலாந் திரிந்திடவும் பரிபாரமெங்குஞ் செய் திடவுங், கனிந்து நாற்பத்தி லெக்ஷமாண்டு காலந்தேவர்க ளுலகா ளவு மணிந்திங் காசுத்தின் குலங்களெல்லா மனேக நெடுங்காள மாளும் போது துணிந்தே யிசுறுயீ றனக்கிறையோன் சொல்வா னுயிரெல்லாம் வாங்கவென்றே. (350)

செய்யும் விடத்தாலும் விபாதியாலுஞ் செத்தா ரெனச் சொல்லத் தீங்கினுலும், வையம் பிழையாலு மருந்தினுலும் வலிய வுயிர்விட்டார் வாளா லென்றுஞ் செய்யும் ஷஹீதானுர் சலத்தினு லுஞ் செய்த சூனிய மிறந்தா ரென்று மையோ வெனச்சொல்லிப் பல்விதத்தாலழிந்து போனுரென் றுரைக்கவேணும். (351)

உரைக்கு மவுத்தெல்லாம் பலபேர்சொல்லி யுடையோன் திரு நாம முரைத்திடாமற் சிறக்கு மிசுறுயீ லுயிரைவாங்கிச் செத்தா ரெனச் சொல்லிக் கொள்ளாமலே யிறக்கப் பலபல விதங்கடோன்று வெவர்க்கும் பலகோல மெடுப்பாயென்று, னுரைத்த வகை யெல்லாங் கேட்டு நின்று னெருபேச்சமதிற் சொன்னுனில்லே. (352)

சொல்லுக்கு பதிற் சொல்லாமலே சொன்ன வகையெல்லாந் தொகுத்து பார்த்தே, யெல்லாம் பிரயாசஞ் செய்தபின்னு மென்ற னெதிரியோ வுலகாளுவா னெல்லா நினைந்தல்லோ கவலையாகி யேது முறையாவ னிற்கும்போது வல்லோ னவனிபு லீசைப்பார்த்து பதி லென்ன சொல் நீ சொல் நீ யென்றான். (353)

சொல்லென் றுருமூன்று பரிமான்பின்னர் சொல்லிப் பெரு நிலை நின்றானப்போ தெல்லாங் கேட்டல்லோ வீசனுத னிபுலீசு முன்னு னின்றுசொல்வான் வல்லபெரியோனே யிபுலீ சுடன் வகையாயுரைத்திடு முரைகளெல்லா, மெல்லா மெணைப்பார்த் துச் சொன்னயானு லிந்தலேரமே செய்வேனென்றான். (354)

செய்யு மோரிடம் புரிந்திருப்பேன் சிறந்த கடல்வேறு மலை வேறுமாய், வையம் புவிவேறாய் வளப்படுத்தி வருட மெண்ணோந்தா மிலக்க மூந்தான், செய்வேன் பலனேவுந் தீங்குகளுஞ் செத்தா ரெனச் சொல்லப் பலவிதமும், பையப்பொருத்தியே வைப்பே னென்று பகைபனிபுலீசு பகர்ந்திடவே. (355)

அன்று பெரும்பாவா மனைத்துமொன்று யாஜாசிலதனையே செய்வேனென்றான் என்றபோதுதா னிறைமகிழ்ந்தே யெல்லாவர மூந்தா னுக்கேயீந்தே, னன்று நன்று நீ நினைத்ததெல்லா நடக்கும் விதமெல்லா முனக்கே யீந்தேன் மண்டளமாளப் புவிதிருந்த மகாமேர் புரியவும் பரிமானமாம். (356)

பரிமானங் கொண்டே யீசனுதன் பாதை திருத்தியே நிற்கும் போது பெரியோன் ஜிபுரீலு மீக்காயீலும் பெரிய வுலமாக்கள் போல வந்து, வரிசை யெழுபது நரகஞ் சென்று வல்லோனுதத்தை வணங்கு மென்றே, அறுக்கைஷுப் படைத்தவன் சொன்னனென்று மனேக விதஞ் சொன்ன ரிமையோர்களே. (357)

இமையோர் ருரை தட்டியே லாதென்று ரிமையோர் ஜிபுரீலு மீக்காயீலு, மெமையர்னும் றப்பில் ஆலமீனே யெங்களுரை யொன்றுங் கேட்டாரில்லை யிமையோரே யென்ற னிசுறூயீலே யினி மேலாகிலும் பாருமென்று, னிமையோரிசுறூயீல் கோபங்கொண்டே யிரண்டு விழியாலு மெரியப் பார்த்தார். (358)

பார்த்தாரெழுபது நகர மொன்றாய்ப் பத்தி யெரிந்ததேபரிந்து சுத்தி, மூத்து நகரமு மனுவுமாளி முடியக் கருகியே வெந்து நீறாய்,

மெத்தமலைபோலே யுலகுதனில் விழுந்தெழுபது கரிக்குவியல், கத்தனுரைப்படி யீசனுதன் காட்சிப்புவியெல்லாமானுநாளின்.(359)

நானுநாற்பதி லக்ஷமாண்டு நடத்தி யுலகெல்லா நெறிநீதியாய், வாழுமுழுமையானு மீசனுதன் வாத்தாலவர்கால முடிவானபின், ஆளும்பெரியவனுதிநாய ணண்ணல் ஜிபுரீயி றன்னைக்கூவி, யாளும் பெரிதான றஹு¬மத்தென்னு மரியகடனீரைச் சிறகில்வாரி. (360)

சிறகி னீர்தேய்த்துக் கரியின்மீது சிதறவடியுமென் றுரைக்கும் போதி, லிறகிலெடுத்திடுங் கடல்நீர்தன்னை யெல்லாக்கரியிது மிணை யச்சாத்தி, நிறைய மறையெல்லாங்கரியினின்று நெடியபடைப் பெல்லா மெழுந்ததப்போ, வரையு முருவெல்லா நெருப்பினுலே பனீயா தஞ்சோ டெழுபதாச்சே. (361)

எழுபதாதமுஞ் ஜோடுஜோடா யிருந்துபரிபார முலகமெல்லா மெழுபதாயிரம் வருடமெட்டு மிவர்கணெடுங்கால நடக்கும்போது பழுதிலாதவன் ஜிபுரீலுக்குப் பரிமா னுரைத்ததிங் கேதோவெனில் முழுதுங் குபிர்க்குலம் பனியாதங்கண் முன்னுலேவையு மாதந்தமை.

ஆலாபிதம்மை பனீயாதங்களடங்கலும்வந்துதொழுகவென்று வேதபெரியவன் ஜிபுரீயீலு வேதநிலையிலே சேருமென்றான், பாத கஞ் செய்யு மிபுலீசுதான் பதறியழுதுமுன் னெழுந்துபோனு னேது முலமாக்கள் வடிவுபோலே யொப்பிலடங்காத சிங்காரமாய்.()

சிங்காரமாக விபுலீசுதான் சென்றான் பனீயாதங் குழுநடுவே யங்கமழகான வடிவைப்பார்த்தே 'ஆராரெனக்கேட்டார் பனீயா தங்க, ளெங்கேயிருந்தவ ரங்கேவந்தீ ரெங்கட்குபகார மேதுசொல் வீர், பங்கப்படுத்தவே பனீயாதத்தைத் படைத்தோ னுரைத்திடும் பரிசுகேளீர். (364)

பரிவானஞ் சொன்னான் ஜிபுரீலுக்குப் பண்டே யுருச்செய்த மண்ணாதத்தைக் குழுவோர் கண்முன்னே நிறுத்திவைத்துக்கூண்ட பனீயாதங் குலங்களெல்லாங், திருவாய்ப் பணியவும் சுஜூதிடவுஞ் செய்வேன் சுஜூதிட்டாற் றீங்குகளே, யுருவானவாத மண்ணனதா லுங்கட்குலமெல்லாம் பாவிதானே. (365)

பாவிக்குலமென்று குப்பார்செய்யப் மரிமானிறையவன் ஜிபுரீ லுக்குக்காவியாலே சோமலே கருமமறியவே தெரியச்சொன்னே னுவியழிந்தாலும் சுஜூதுசெய்யோம் ஆதமண்ணல்லோ வெனச்

சொல்லுங்க, ளேவுஞ்ஜிபுரியீல் வருவாரினி யென்பேர் மீக்காயீ லென்று சொன்ஞன். (366)

சொல்லிக் கொடுமையை வருத்திவைத்துச் சோரணிபுலீசு போனபின்பு வல்லோன் ஜிபுரியீ லாதந்தமை வாரிக்கொடுவந்தார் பனீயாதமுன், அல்லாவுரைப்படி யாதந்தமை யன்றுதொழு மென்றே ஜிபுரீல் சொல்ல, வல்லோருஞ் சொன்னர் மண்ணலவோ வெங்கள் குலம் வன்னிபெரிதுதானே. (367)

வன்னிவணங்குமே புவியைநோக்கி வருந்தோமெனச்சொன்ஞ ரொருமொழியாய், முன்னேன் ஜிபுரியீ லாந்தமை முன்போல வருட சிறகிலேந்தி, யெண்ணிலடங்கானே பெரியவனே யிணங்காக் குலம் பறீயாத மென்னச் சொன்ஞன் ஜிபுரீலு யாதந்தமைச் சுவர்க்க பதியிலே வையுமென்ருன். (368)

வைத்தார் சுவர்ககத்தி லாதந்தமை வல்லபெரியவன் பரிமான மாங், கத்தாபெரியவன் றஹறுமத்தென் னுங் கடலேப்பார்த்துத்தா னேது சொல்வா, னெத்துந்திரளான மங்குலங்கா ளேகவுருவெல் லாம் வாருமென வெற்றியலங்கார முழக்கமாகவெளியிலெழுந்ததே வெகு கூட்டமாய். (369)

கூட்டமாகவே யெழுந்தமேகங் குறையில்லாமலே யெழுந்த தப்போ, தேட்டிலடங்காத பெருங்கூட்டத்தை யிதமாயென்பது பிரிவுசெய்து, காட்டில் விதமெட்டா மெட்டுமேக கபிக்குக்குடை மேக மிராஜாவுமாங், கூட்டுமிராஜாங்கங்குடைகபிக்குக் கொள்ளு மிருநான்கு விபரந்தானே. (370)

தானேவைரம் பொன் முத்துரத்னந் தரணிபொழியுமங்குலமே யென்று, வானசந்தனம் பொழியுமேக மக்கினியொன்று பொழியு மேக, மானமரங்கல்லாற் பொழியுமேக மண்மாரியாகப் பொழியு மேகந், தேனுஞ் சர்க்கரை பொழியுமேகந் தினமும் பனியாகப் பேயு மொன்றே. (371)

பேயும்விதமேழு மேகமேழும் பெருங்கூட்டமுமாகு மழை மேகங்க, ளாயமங்குல மிருநான்குக்கு மாசனுகுமே குடைமேக முஞ், தாயகவமேக மிறைவகுத்துத் தக்கமீக்காயீ லரசனுகப், பேயு மழைபெல்லாம் ஹயாத்துல்கைபார் பெரியகடலிலே சலமெடுக்க. ()

எடுக்கும் பாற்குடம் ஹயாத்துபைகா சிறங்கு நீரைத்தான்ப மீக்காயீலு, மெடுத்து வளர்ந்தநீர் மேகமெல்லா மிருந்துரூன்மூற்றி மாத மூன்று, விடுக்கந்தலேயினீர் பால்செமித்து வேணவுயிரெல்லா நீரில்வர வடுக்குநீருல குயிராகவு மாதிபெரியவன் பரிமானமாம்.(373)

ஆதிபெரியவன் மீக்காயீல்தா னள்ளியளந்திடுங் கடனீர்தன்னே மோதிமங்குல மழைபொழிய முழுதும் பனீயாதம் குலமழிய வாதியுரைப்படி மீக்காயீலு மந்தக்கடனீரையள்ளிவிட்டே, வேறுங் குறையாமன்மழைபொழிய வெல்லாமழிந்ததே பனீயாதங்கள்.(374)

---

# ஹவ்வா பிறந்தது.

ஆதம் வன்னிதா னெருப்பானதா லந்தச்சலத்திலே யழிந்த தப்போ, ஆதநபியுல்லா சுவர்க்கநாட்டி லனேக கனியெல்லா மருந்து நாளிற் சோதி நபியாத மானிகைமுன் சொல்லத் தொலேபாத வலங் காரமாய், மாதற் குருவான வுலகமாதா மரத்தின் கனியாக விருந் தாரப்போ. (375)

கனியாயிருந்தது ஹவ்வாவுமாங் கனியின் சுடரொளி யழகு வீசு, வினிய கனியுட வழகுகண்டே யிந்தக்கனிதின்ன வேணு மெனத், தனிய னிடத்திலே யாதநபி தருக வெனச்சொல்லி துஆவிரந்தார், கனியை யவர்கையிர் கொடுவெனவே கத்த னுரைப்படி ஜீபுரியீலும். (376)

உரைக்க விறையவன் ஜிபுரியீலு முவந்த கனிதனேக்கொடுக்க வாங்கி மறைக்கு ளடங்காத கனிரசனே மகிழ்ந்தா ராதந்தம் வயின் பொருமி யிருக்கு மவருட இடவிலாவி லெழுந்து சிலந்தி போலுடையும்போது தரைக்கு ணிகரில்லா வடிவுகொண்ட தைய லெனும் ஹவ்வா பிறந்தாரப்போ. (377)

பிறந்த மதலேயைப் பெற்றதாதை யுரிசப்படக்கண்டு பெரிய நாயன், வருந்தி யிருவர்க்கு மணமுடித்தான் வாழ்ந்து சுவர்க்கத்தி லிருந்துநாளிற், பெரிய கசடுள்ள விபுலீசனும் பெண்ணின் சுரூப மாய் வந்தானங்கே, யிருந்து ஹவ்வளவு மிபுலீசனு மிருவர்வளமை யும் பேசினரே. (378)

யி ருக்கையி லிபுலீசுதான் பெரிய கோதுமைக் கனி யெடுத்து, நேசம்பிரியாம லிருக்கஆத நீயு மவருமே யுண்பீராஞல், வாசமுமையல்லா லொருமாதரை வருந்தா வகைக்கிது மருந்தா மென்றுமேசி யெறிந்தாலுங் கொடுத்தீராஞு லெல்லா முங்கையி லடங்கிப்போமே. (379)

அடங்கா திருந்தவ ரெனதுநேச ரடக்கிக் கொடுத்தது மிக் கனிதா னிடங்கே டணையவும் பற்றிவைத்தே யிபுலீ செழுந்துதான் போனபின்பு, கெடுதல் தெரியாமலாதம்நபி கிளியின் மொவுமாதி னிடத்தில்வந்து மடியி லிருத்தியே ஹவ்வாதமை மகிழ்ந்து பேசியே யிருக்கும்போது. (380)

இருக்கும் போதுதான் ஹவ்வா சொல்வா ரெனக்கு வாக் கொன் றுதருகவேணு, மிருக்கு முயிர்கேட்டு துமக்கேதந்தே னெந்தவகைக்குமே யிணங்தேனென்றுந், திருக்கை யடித்துதான் சிரசு தொட்டுத் தீங்காஞ் சத்தியஞ் செய்தபின்பு, பெருக்கும் பிழையான கனிகோதுமைப் போதையெடுத்தல்லோ கொடுத்துச் சொல்வார். (381)

சொன்ன பிராமண மிதைபருந்தச் சொன்ஞ னெனதுட தோழியென்று, ளென்னமதிகாஞு மிபுலீசஞு மிந்தக்கனிதன்னை யிருவருண்டால், முன்ஞளிறைந்த தவங்குலைந்து மோசப் பெரும் பாவியாவோமென்ருர், என்ன விதத்தாலு மிது தின்ஞதா லெனக்கு முமக்கினி யில்லையென்ருர். (382)

இல்லை யெனமாதா பிரிருசொல்ல வேங்கியழுதாதங் கனி யெடுத்துச், சொல்லும் கனிதனை யிருவருமாய்த் தின்றவுடன்ருக மோகமாகி, வல்லபெரியவன் சுவர்க்கந்தனில் வலமுஞ் சலமுமாய் நிறையும்போதி லெல்லைப் பதியான சுவர்க்கம்விட்டே யிருவர் தமைத் தூக்கி யெறியுமென்ருன். (383)

எறியு மெனச்சொன்ஞன் பெரியநாய னேகனுரைப்படி ஜிபுரி யீலும் பெரியோ ஞதத்தை யெழுவானிலும் பேதை ஹவ்வாவைப் படுவானிலு மெரிய விருவருந் தனியேநின்றே யேங்கியாயிரம்வருட மட்டும் அரியபெரியோனே தம்பிரானென் றல்லா தனைநாடி யழு தாராதம். (384)

அழுதா ராயிரம் வருடமட்டு மணுவுமிரங்கில ஞதிநாயன் முழுதும் பிழையெல்லாம் பொறுப்பவனே முஹம்மதை யெந்தன்

பாலனுகப், பழுதுவராம லமைப்பவனே பாலன்றனக்கு நான் பிதாவல்லவோ, வெழுத முடியாத முஹம்மதுக்கா யெந்தன் பிழை யெல்லாம் பொறுப்பவனே. (385)

பொறுப்பாய் பிழையெல்லா முஹம்மதுக்காய்ப் புகழ்ந்தேன் முஹம்மதை யுன தறிவாற், சிறப்பா முஹம்மது நாமஞ் சொல்லச் சீக்கிரம் வாருஞ் ஜிபுரியீலே, நிரப்பமாகவே யாதம் ஹவ்வா நீடுழி வாழ்க வுலகமீதி, லிருக்கும் பதியின் பேர் மக்கநக ரிருவர் தம்மைக் கூட்டி வாரு மென்றான். (386)

கூட்டி யிருவரை மக்க நகர் கோதை யுடனுக மிருக்கு நாளி லேட்டிலடங்காத வர்த நாயனிமையோர் மீக்காயீ றன்னைக் கூவி, நாட்டி லாதத்தை யிரக்கி வைத்தே ஞலா வகையெல்லா நிறைய வென்றே யாட்டம் பெரிதான றஹுமத் தென்று மரிய கடனீரை மேகம் வாரி. (387)

வாரி ஜலத்தைமங் குலங்களுண்டு வைய முழுதுமே மழை பொழியப், பேராற் பெரியவன் சொன்னபடி பெய்யு மழையாக வுலகை மெல்லாஞ், சீராய்ப் புற்பூடு பல விருட்சஞ் சிறந்த வகை யெல்லா நிறைய வென்றான், பாரக்கடனீர்தான் பலவித்தாகப் பாங்காய் விருட்சம் புற்பூண்டாச்சே. (388)

உண்டுபடச் செய்தா னொரு மொழியி லுண்டு படுத்திய வுயிரை யெல்லா, மன்றே வுலகத்தி லிறக்கு மென்று மனைத்து மிறங்கியே யொன்றே டொன்றாய், நன்றாய்ப் பரிபார முலகுயிரு நடத்தி யுலகெலா நிறையு நாளின், மண்டல மெங்கும் ஆத நபி மண்ணில் விளைத்துண்ணப் பரிமானமாம். (389)

மண்ணை யுழுதவும் பலதாணிய மகிழ்ந்து விளைந்ததை யருந்த வென்றே, யெண்ணி லடங்காதான் தான் விதித்தபடி யிருந்து பரி பார நடத்துநாளி, லெண்ணி லடங்காத பெரியவனே யென்று நிதம் புகழ்ந்தாத நபி, முன்னு ளுனதுட வொளிவிலான முஹம் மதைக் காண வசையானேன். (390)

ஆசை பொருந்திய வெனது பாலறஹுூம தொளிவை யென் பாத்திலாக்கென், றேசையாய்ச் சொல் முஹம்மது தானொளிவுக் குத்தூபையு மொரு முத்தாக்கி, நேசமாயாத முதுகுதனினேரே யுயர்த்தினில் நிறுத்தி வைத்தான், வாசநபி யாதம் ஹவ்வாவுமாய் வாழ்ந்தே யிருவரு மிருக்கு நாளில். (391)

இருக்கும் போதினி லிபுலீசனு மிலங்கு மறிவாளார் வடிவு கொண்டே யுருக்கமாய்ச் சொன்னான் ஹவ்வா தமை யுலகி லுமக் கேது மதலையில்லை, யிருக்கு தெனக்கொரு வேழைப்பால னெடுத்து வளவென்வே யவர்க்குச் சொல்லி, உருக்கமாய் வாடா மகனே யென்று னப்போ அஹ்மது வோடி வந்தான். (392)

வந்தா னஹ்மது மிபுலீசுமுன் வடிவு பொருந்திய பாலனாக, யிந்தா பிடியு மென்றவன் கொடுத்தா னிணங்கி யிருகையால் ஹவ்வா வாங்கி, யெந்தன் குழந்தை யென் யெடுத்தணைத்தே யிலங்கு முகத்தையு முத்திக் கொள்ளத், தந்தே னெனப்போனு னிபுலீசப்போ தகப்பன் றனைத்தேடி யழவும் பாலன். (393)

அழுகை யமர்த்தினர் பாலகனை யாத நபிவந்தா ரப்போதேக, குழவிக் குரலேது வரிசை யேது கூறுமெனக் கேட்க ஹவ்வா சொல்வார், கிழவர் பெரியவ ரொருவரீய்ந்தார் கிடையா திது போலே வடிவு பாலன், முழுதுங் கொடுத்தவ னிபுலீசவன் மோசம் வருத்தவே வந்தா னென்றார். (394)

வந்தா னிபுலீசு நமைக்கெடுக்க வடிவுப் பாலன்றான் கன்று சாகுந்தந்தா னஹ்மதென் றொருபேர் வைத்துத் தனது கசடெல் லாந் திரட்டி யென்று, யந்த நேரமே யிளம்பாலனை யனேகம் பிளப் பாக வறுத்தறுத்தே, யிந்தப் புவியிலே குழியைக் கல்வி யெடுத்துப் புதைத்தல்லோ மிதித்து வைத்தார். (395)

வைத்தார் மதலை மேலாசை கொண்டு வாயிற் புலம்பியே யிருந்தார் ஹவ்வா, கத்த னபியாதம் போன பின்பு கபடனிபுலீசு வந்தானங்கே, பத்தினி மாதே பாலனெங்கே பாரிற் புதைக்கவும் பயித்தியமோ, வொத்தை னொடியிட்டு மகனே யென்றே னோடி வந்ததே யொளிவு பாலன். (396)

பாலன் றனைமுற்போற் கொடுத்துப் போனான் பார்த்தாராதமு மனம் பதறிப், பாலன் றனைவெட்டித் தீயிலிட்டுப் பத்தி யெரிந்து நீறாகிப் போச்சுக், கோலந் தெரியாம னீறைவாரிக் கொண்டு சலத் திலே கரைய விட்டார், மேலும் ஆதந்தான் போன பின்பு வீம்பனிபு லீசு வந்தானங்கே. (367)

வந்தா னிபுலீசு ஹவ்வாவுடன் வடிவின் பாலன்று னெங்கே யென்றான், முந்தவ்கைபோலே வெட்டிச்சுட்டு மோசநீரிலே கரைத்

தாரென, விந்தா பாரென கொடித்தான் கையை யிறந்தபாலன்றான் வந்ததப்போ, திந்தாவென ஹவ்வா கைக்கொடுத்தே யிபுலீ செனும் பாவி போயினனே. (398)

போன பின்புதானுதம் வந்து பொன்னே யேதுகாண் பால னென்றார், தானே சலத்திலே வந்த தென்றார் தக்பீர் சொல்லித் தலையறுத்தே யேனமதில் வைத்து நீரை யூற்றி யேற்றி யனலிலே தானவித்துத், தானும் ஹவ்வாவு மாகவுண்டார் தனக்குச் செய மென்றானிபுலீசனே. (399)

செயமா மூடனுக்குண் மூன்று பாங்காய்ச் செனித்துப் பிதா வாதஞ்செய்தகுறை பயமில்லாமலே யஹூமதென்ற பாலன் றனைய வராறுத்தருந்த, வுவமையாகவே மூன்று பங்காயுடலிற்றறித்திடும் வகையைக்கேளும், வகையா மீரலும் பற்குத்தியும் வழியும் பித்தி னும் கலந்ததாலே. (400)

கலந்த பித்தினிற் கசப்புண்டாச்சுக் கறுப்பு நிறமீரல் பல்லுக் குத்தி, மலர்ந்த வறிவெல்லா மறந்துபோச்சு மன்னுமதிலுண்டாம் வகையைக்கேளு, நலந்தவிழியாசை பார்வையெல்லா நாட்டுஞ் செயித்தானின் பங்கதாகு, மலர்ந்த பார்வைதான் சரியேயென்று மதுதான் சடலமண் ணினைவுமாமே. (401)

நினைவுஞ் சடலமும் பார்வைரண்டு நேரே பொருந்திடிற் கொடுமையாகும், கனதியாகநீ சோம்புதலுங் கத்தா பெரியவ னுரைத்தபடி, யீனப்பெரும்பாவஞ் செய்யுமென்று மிபுலீசெனும் பித்தின் பங்குசொல்லுங், துனிவாய்ச் செய்திடும் பாவமெல்லாந் தொலைக்க வழிசேரத் துணையாய்க்கூடும். (402)

கூடுங் குபிரான நெஞ்சுமானுற் கொலையுங் கொடுமையும் வினை யுமதா, னுடுஞ் செயனல்ல நினைவுமானு னமக்கு ஹறாமென்றே காட்டிவைக்கும் பாடிப்பாடியே யிபுலீசுதான் பதினெண்ணாயிர மாலமட்டு, ஓடியோடியே கொக்கரித்தே யோயாதேசொல்வா னிபு லீசனே. (403)

இபுலீச னெங்கும் பறையடித்தா னெனக்குப் பங்கேழு நபிக் கோர்பங்கு கவியின்பிழைக்கண்டே யிறையுரைத்தான் காபிர் குலத்துட னுனதுபாலர், புவியிற் றுயர்தீர வழுதேயாதம் புகழு முஹம்மதை விழியிற்காணக், ஹபீபை யிருகையின் பெருவிரலிற் கண்டே யிருமென விறையுரைத்தான். (404)

உரைத்த முஹம்மதி னொளியானது மொன்று யாதத்தின் முது குதனி, னிறத்தைபிருபங்காய்த் தரித்துவல்லோ னேரேகை விரலி ரண்டில்வைத்தான், குறித்து விழிதேய்த்து முத்திக்கொண்டு குற்றத்து யாஜனியென்று வரத்தைப்பொருந்திய ஆதநபி வாழ்ந்து பரி வாரநடத்துமப்போ, சிறந்த *வெண்பத்திரண்டுஜோடு சேர்ந் தேயாண் பெண்ணாய்ப் பிறந்தனவே. (405)

பிறந்த தாயிர வருடமட்டும் புவியி லிருந்ததே வயதாயிரஞ், சிறந்த முஹம்மது நபியொளிவு சீது நபியவர் புறத்தில்வர, விருந்த வாதத்தை யுலகுதனி விட்டதலமல்லோ கருபாவுமே, நிறந்த முஹம்மது நூஹுநபி நின்றே யிபுருஹீம் அலைஹிஸ்ஸலாம். (406)

ஆனவிசுமாயி சருவிழியில் அப்துல்லா நெற்றி மூத்தொளி வாய் மான நிறைந்திடு முலகமாதா மங்கை யாமினா யீன்றபாலர், தானு மனுருப மெடுத்தார்நபி தாத்துஞ் சிபாத்ததுஞ் சாற்றக் கேளு மானவுருவாதம் ரூபங்காண வாதமுடலிலே தரித்த தெல்லாம். (407)

தரித்த விருபத்து நாலெழுத்துத் தரிக்கு மெழுதுக்கோர் சிபாத்துமாகு, நிலத்திற் கண்ணாடி நிழலில்லாம னீண்டமுடிகாணு மறுஷின்மேலே, யொருத்தா ரறியாரே மஞ்சலத்தை யுடலிற் புழுப் பூச்சி யொட்டாதங்கள், தலத்தி லடிதோயார் பொய்யுரையார் தகுத் தருவிலே தரிக்கும்பாதம். (408)

தரிக்கு மேகங்கள் குடைநிழற்றுந்தாபங்களையோட்டும்வருத்த மில்லைச் சிறசிற் றரித்திடு நுபூவத்தாகுஞ் சிறந்த வுடலெல்லா மிலாஞ்சனையாங், கருத்திற் பெருமையுங் கறும்பகிலுங் கபடங் கோபமுங் காணார்நபி, யொருத்த ரறியாமல் கத்தனுச்செய்தோ ரொரு நாளசதியு மறதியில்லை, கருத்தா லிருகண்ணு முன்பின் காணுங் கஸ்தூரிவாசங் காதம்வீசும். (409)

வீசும் பரிமள மழகுநபி வெடித்த சிரிப்பொன்றுஞ் சிரித்தா இல்லைத், தேசமனுப்போல வுருத்தெறியுந் தெரிந்த வுருவெல்லா முடலோவில்லை, நேசமுடன்முடி நபியின்ரோம நிலத்திற் களைந்தவ ரொருவரில்லை, பேசமறுநான்கு சிபத்ததாகப் பெரியோன் முஹம் மது நபியாகுமே. (410)

பொருட்பால் முற்றிற்று-ஆக பாடல் 410.

---

* எண்பத்தி ரண்டுஜோடு என்றமொழியைப் பிரித்து எண் கணக் கென்றும் பத்தாண்டு ஜோடென்றது இருபது ஜோடியென்றும் பொருட்படுத்துக.

மூன்றாவது

# காமப் பால்.

## நவகாமமறியும் வகை.

நபியை யுலகத்தி லமைத்திலேயேல் நமது பதியேது நாமமேது புவியுஞ் சகலது நபியாலே தான் பொங்கு முயிர் கடலிருந்த தெல்லாம், புவியிற் பலபல வுயிர் முளைக்கப் புருடர் தெரிவையா யிருப்பதெல்லாம், தவியா நவகாமந் தனையறிந்தாற் றன்னை யறிந்தவர் தானருமே. (411)

றன்னை நிகரில்லா வாதி நாயன் றாணியமைக்கு முன்னிருளறையி, லுன்னி யெழுந்துதா னுக்தலிபா யொளிவு திரண்டதே முதற் காமப்பால், வன்ன மிலங்கிய விந்து நாதம் வைரத் திரளை வெண்டாளமாகப், பின்னு மொளிவதிற் சுடராய் விந்து பிறந்த கடலொன்று மிருகாமப் பால். (412)

பாலி லொருகாமம் பகுந்ததைந்தும் பரிவா யொரு காம மிருபங்காக, வேலைச் சுடர்காம மூன்று மொன்றாய் விளம்பு லிங்கமாம் காம மூன்றும், பாலன் றனையடி தனிலிருத்திப் பார்க்க வொளிவேர்வை விந்து முத்தாய்க், காமக் கடலதி லுறைந்திருந்த கதைதான் காமப்பானுதமாமே. (413)

நாலா விதத்தினு லொரு கனியை நாடிமயிலுண்ண மரத்தின் மேலே, பாலாங் கிணற்றிலே யைந்து முத்துப் பார்த்து மயிலுண்ணப் பதுங்க வொன்று, நாலு மயிலுண்ட தன்றேயீன நாலுதிசைகாகங் கூகை யாந்தை, மேலு மிராஜாளி மயில் நடுவி லிதுதான் காமப் பாலைந்தாகுமே. (414)

ஆகந் துணுக்கிடா மயிலன்னமா யந்த ஜெபறூத்தி லாடும் போதி, லேகன் கிருபையா லிணங்கினோக்கி யெங்குஞ் சுடர்காம மிறங்கி விந்தாய், வாகு பெறவன்னந் தனிய காம மதுதான் காமப் பாலாறு மின்ன, மேக னொளிவினுல் நடுங்கி யென்ன மெங்குஞ் சலமாக வெழுந்த வேர்வை. (415)

வேர்த்துப் பாற்கடற் சேர்ந்தது தான் விளங்குங் காமப்பாலேழதாகும் பாத்திரமான கடனீர் தன்னைப் பருகு மங்குலம் பார்

தனிலே நேத்தி யாய்ப் பெற்ற வத்தனையு நிலையாங் காமப்பா லிரு நான்கிது வேத்த மாகவே யெழுந்தவாரி யெல்லாம் படைப்புக்கு மிரண மாச்சே. (416)

இரண வகையென்ற கணிதசையி மிலையுங் காயைந்து மிது நிறையத், தருணம் வகையறுத் தத்துவமிர் தந்தசை ரத்தம்விளைந்த நாதம், வர்ண மெவ்வுயிருப நாதம் வருந்தி யிணக்கத்தி லெழுந்த நாதந், தருணம் பலவுயி ரெழுந்த நாதந் தசபீஹூ நிலைநவகாமமே.

இதமா நவகாம மெல்லாருக்கு மிருநான் கிருநா மெழுதின தால் விதமாம் வைரம் பொன் புழுவுமுத்து விருட்சம் புற்பூடுபல தானிய நிதமாய் நிறைந்ததே யொன்றேடொன்று நீதியுதிரமாய்த் தீனுலாச்சுப், பதமாங் குருதி நீர் வித்தாம் வாறும் பாங்கா யுலகெல் லாமறியச் சொன்னேன். (418)

சொன்னேன் மூவைந்து இனையத்தையுஞ் சூழ்ந்த வுலகு பல்லுபிரனைத்து, முண்ணு மமுதுடன் பானு செய்யு முன்பா ருலகத்தினு கையமாக, னாணும் பெண்ணுமாய்ப் பிரியும் வகை யரியா ருலகத்தின் முழுமூடாரம், பூணு மிரசனை தான் றெண்டை மட்டும் போனுற் குறைவதைப் புகலக் கேளே. (419)

புகலக் கேளுமே ரசனை யெல்லாம் பொசிக்கும் வாயினிலிருக் கும்போது, சகல ரசனையு மேனுக்குத் தான் றுவி யமிர்த்தத்தை யுயர வேற்றிப், பகலு மிரவிலாத் தலந்தனிலே பளிங்கிங் சுடரைப் பார்த்தியும்போதி, லகலா ரசனைய தனைத்துஞ்சுடர் முதமாகவே யருந்துந்தானே. (420)

அருந்த இருவமு நடுமுகத்தி லணிந்த வொளிவதின் சுட ரெழுப்பிச், சிறந்த நுக்கத்தலி பாகும் பார்வை செப்பிடா ரிதைச் செப்பினேனே, திருந்த வூண்சுக மெல்லா மென்பார். தீனுஞ் சகமவ னல்லாதில்லை, நிறைந்த வுடலுக்குட் சென்றதெல்லா நெருக்கியே குடர்பிலக்கும் ரண்டாய். (421)

பிரிக்கு மசனத்தை யிரு பங்காகப் பூணுஞ் சார் வேறு சக்கை வேறாய்ச், சிறக்கு மினிப்புள்ள ரசனை யெல்லாஞ் செந்தாமரை யுள்ளே பதிவுமாகு, முரைப்புங் கடுமையு நுரையீரற்கா மூப்பும் புளிப்பது மீரற்காகும், விரைப்பாங் கசப்பெல்லாம் பித்துக்காகும் வெகுவா யிலைப்பெல்லா மண்ணுக்காகும். (422)

ஆகும் விதமைந்து பங்கொன்றுக்கு மந்தத் தலந்தனி லுதிரம் பூரித், தாகு முடலெல்லா நரம்பினாலே தானே யுதிரத்தாற் றசையு மாகி, யேகுந் தசையதிற் கொழும்புமீறே யேறிச் சிறத்திலே மூளையாகி, வாறுபெறுமூளை யுருகிவிந்தாய் வடியும் பிடரியி னரம்பினாலே. (423)

நரம்பால் வடிவது விந்துமாகும் நயந்து அசனத்தி லின்னம் பாதி விரும்பி யெழுந்தது மூலந்தன்னில் வெந்து நீரெல்லா மூல முண்டு கரும்பு ரசனையுஞ் சங்கைபோல களருமாமங்கு களிச்ச ளெல்லாம் விரும்பியுண்டது மூலஞ்சேர்ந்து வெந்தவயனீரைச் சிறு நீர் சொன்னேன். (424)

சொன்னே னலந்தாஞ் சோதிநாதன் சொன்ன முன்சோதி யதனில் வெந்து, வெண்ணெ யுருகிநெய் சிவந்து நிற்கு மேனிச் சுடர்தின் மூச்சுமாக வுன்னிச் சுடருந்தான் கிருபைபொங்கி யொளி வுடலெல்லா மோசையாகிக் கண்ணின் மணிநடு முகந்தனிலே காணு மொளிவந்தப் பெரியவனே. (425)

அந்தப் பெரியவன் றலந்தனிலே யாதிபெரியவ னுசையானுற் சந்தைப் பெருமொலி போன்முழங்குஞ் சத்தமியாறஹீ மென்று சொல்லி யுந்திக் கமலங்கீழ் மூலந்தனி லூற்ற முஹம்மது நபி யொளிவு, எந்த வகைநாய னென்னிறையே யாபக்கல்லாவென் றியம்புந் தானே. (426)

இயம்பு மொளிரண்டு மாசையானு லினையும் பார்வையுமிரண்டு மொன்றே, மியங்கித் தழுகிடு மிருபார்வையு மெரிபுங் கிருபையா லுருகிமூளைத் தயங்கிடாமலே பின்றளர்ந்த தாரை நரம்பினுலிரங்கு நாத, மயங்கிடாச்சுடர் மூலந்தனின் மண்ணுதம் ஹவ்வா வொளிவுமாமே. (427)

ஒளிவி னுதந்தா னிரவிபாகமோதும் யாதாபி மென்று சொல்லிச், சுழியின் மதிபாகம் ஹவ்வாசுடர் சொல்லும் யாக்காயி மென்று சொல்லி யொளிரு மிருசுடர் கிருபைபொங்கி யொன்று யிணங்கிடு மாசையாலே குழியி லீசுரன் றலந்தனிலே குதித்துவிந்து கிழிரங்கி நிற்கும். (428)

இறங்கித் தறித்திடுஞ் சிவந்தநாத மெரியுஞ் சூட்டினு லியங்கி வெள்ளை, யுறங்கும் வீடுதான் தாரையாகு முரைக்குஞ் சளைமுனை தீயதுதான் றிறங்கொள் வலக்கலை யதற்குமானந் தீங்கு விடக்கலை யதற்குவிடங், குறையு மீனெனுஞ் சிறக்குமென் றுங் கூறுங் கலையுட குணமாகுமே. (429)

ஆனகாமப்பா லுதிரவீட்டி லனுப்போ லடங்கிய அட்ட கோணம், பூணுஞ் சிறத்திலே தரிக்கு மூயிர் பொருந்துங் குண மேழு கோணமதின், மூனேவலம்புரி நிலையதற்குத் தையலிடம்புரி தரித்தகோண; மூனுங் குதறத்தைச் சேர்ந்தவகை யுயிரும் போயினுரிரணவகை. (430)

இரணத் தரிப்பது மூன்றுதிசை யிளமையழகெல்லா மணியு நாலிற் றருணம் பலாபலன் யோகஞானந் தரிக்கும் விதமெல்லா மைந்தாங்கொம்பு, வர்ணந்து துன்பமுந் துயாவீரம் வகையாய்த் தரித்திடு மாறுங் கொம்பின் வர்ணம் பெருபினி படும்பாடெல்லா மதிப்பாய்த் தரித்திடு மேழாங்கொம்பில். (431)

கொம்பி லிருநான்கி நகத்தில் நிற்கும் கோலந் திசையெட்டும் பொருந்துமப்போ, தின்பங் குதறத்து மெட்டுமீதே யின்னங் குதறத்துப் பதினெட்டுத்தா னன்பா யுலகத்திற் பிறக்கும்போதி லன்றே தரித்திடு மறுமூன்றுந்தான் கும்பி யுருவத்திற் றரித்த நாதங்கோல வுருவத்தைக் கூறக்கேளு. (432)

கூறுமிருநான்காந் தரித்தநாதங் கோதை யுதிரமூங் கொழுகி யொன்றாய்ப் பாறு நிக்கத்தின் மூளைத்தமாம் பச்சைப் பவளம் வெண்டரளமான, வாறுங் குதாயோடு நபியும்ஆத மந்த விரு ளல்லோ ஆஜாசிலாகு ஞறென்ற றானும் றாகும்வெள்ளை நுக்கத் துச் சுழிமுனை அலிபானதே. (433)

அலிபில் வைரந்தா ஞதிபங்கா மந்தநடுநிலை யிருபாகமுங் கலிமா, முஹம்மது சிறந்தசுடரி காணு மகாமன் மஹ்றுமா மொலியா முஹம்மது கலிமாவினு ளுருப மிருபத்து நாளெழுத்துப் பலிதமாம் பச்சை யாதமென்றும் பாரு கருபத்தை ரூபமென்றே. ()

உருபஞ் சுடர்மூன்றி ளெழுந்தவாறு முயிறும் பரம்பொருள் விந்துநாத முருகிச் சுழிமுனை துக்கத்தலிபா மொழிவு பதினலங் குலமு நீண்டு அருபம் அன்போடு லாமு மீமூமிம் அதுமேல் குன் னென்ற வெந்தெழுத்துஞ் சுருபமுஹம்மது பயக்குனென்று சொன்னேன் பதினறு எழுத்துமாகும். (435)

பதினுலெழுத்தொன்று யிணங்கி நின்று பாற்கு மாகாய நிலைபி னின்ற இதன் கீழறுகோண வாய்வுமாக வெழுந்து சீனென்ற அக.ரநிலை அதிலே சிகாரமென் றெழுந்த ஹேயாமக்கினி மூன்று

திசையுமாகு, மதிலே யிருகோண மகாரமீமா மண்ணும் ஈகாரத் துருவுராலே. (436)

நாலு மதலேயு மீன்றபிதா நாம முளங்கிய பெருவெளியாம் காபக் கபுசைனி யென்னுமது கண்ணு மணியெல்லா தின்ன முண்டோ பாலன் ரூபமாய்ப் பிறக்கும்வகை பலதுங்கலிமாவி னிணேயுங்கேளும் ஆலஙபிபங்கும் அல்லாபங்கு மறுநான்கிருபத்து நாலெழுத்தே. (437)

இருபத்துநா லுயிரெழுத்தா யியம்பும் பனிரண் டெழுத் தைக் கேளும், அரூபரூபமாய்ப் பொருந்திநின்ற வாதி முஹம்மது நாளெழுத்துச், சுரூபமானது அரூபந்தானே சூலென் றெழுந்தது மூன்றினுலே, பெரிய வுடலுக்குண் மூலாதாரம் பிசகா திருத்தியே பாரா கோட்டை. (438)

கோட்டைக்கு வாச லுமுண்டுங் கொழுந்து புகைத்தீயா யெரியுமதிற், சூட்டிக் கலிமாவின் முஹம்மதுற் றஸுலே நீக்கியே லுல்லாவென்றுற், பாட்டினுரைத்திடு மெழுத்து மூன்றும் பத்தி யுடலினிற்சிரமதாச்சு, தேட்டிலெழுதினேன் பத்தெழுத்தை பின்ன முரைக்கிறே னெழுத்திரண்டை. (439)

எழுத்தி ரண்டது விபரங்கேளு மெல்லா வெழுத்துக்குங் கடைபெழுத்து முழுத்தமாகிய முஹம்மதுற் றஸுலுல்லாஹி யென்றுரைக்கும் ஹேயாஞ், சுழித்தஹேமூலக்குகையினிற்குஞ் சொல்லு வேனினித் துலக்கமாகச், சுழற்றிக் கலிமாவில் முஹம் மதுற் றஸுலென்றுரைப்பதிற்கும் றேயாய. (440)

றேயைப் பிரித்துத்தா னிருபங்காகத் திரேகத் தனிலிரு மாங்காயென்று, வாயே யொருமாங்காய் வலதுபக்க மணிரிமாங்கா யோரிடப்புறமாம், ஆயும் றேமாங்கா யெனுமதனி லசதிமறதி கொட்டா விவிக்கல், நோயும் பலவகை யதற்குள்ளாகு நுவலு வேனிடப் பிறத்தின்காயே. (441)

சாயிற் குடிகொண்ட நித்திரைபாங் கறுப்பு நிறமுள்ளே கலந் திருக்கும், ஆயு மெழுத்தது அல்ஹம்தென்றுல் அறியுமெத்தது வைந்துமாகும், வாய்யு நெருப்புநீர் புவியதாகும் வகையு மெழுத் தைந்த தானவாறுங், காயி லாக்கனியாங் கலிமாக்கலந்த வகையையு முறைக்குகிறேன். (442)

உரைக்கு முடலின் மண்ணுலுதிசை யுருபமெழுந்தது பல்லுக்குத்தி, ஷறுத்தி னிதின்பேரும் அம்மரந்தாந்தரித்த வெழுத்ததில் நாலுமாகு, நிறத்தஜிபுரியீ லிருப்பிடமா நிறமும் வெள்ளையாம் பொற்பிரகாசஞ், சிறந்தபேச்சுட வீடுமாகுஞ் செப்பும் வாயினுலுரைப்பதுவே. (443)

உரைத்த வகையான பத்துமிஃதொன் றுமக்காமிதென் றறிய வேண்டும், நிரைத்த ஈரலிற் சிவந்தநீராய் நிற்கு மேகோண மெழுத்துமீமாஞ், சிறந்த மீக்காயி லிருப்பிடமாஞ் சேர்த்த ரசனைபு முப்புங்கைப்பாங், குறைந்திடாவிழிப் பார்வையாகுங் கூறும் லெவ்வாமத்தின் பேறுமாமே. (444)

பேறும் வகைபத்தி ரண்டாமக்காம் பேசு வேன்மூன்றும் வகையைக்கேளீர், கூறுமுலகிம்மத் தென்றவாய்வு கோணு மாடத்தின் பச்சையாகத், தேறுமெழுத்ததில் வளைந்த ஹேபாங் திறத்திலிசுறுயீ லிருப்பிடமாஞ், சீறு மூக்குமூச் செழுந்தவீடு சேர்ந்த நுரை யீரற்புளிப்புமாமே. (445)

ஆன வகைபத்து மூன்றுமக்கா மக்கினி மூன்று திசையதாகத், தோணுங் கருநிறம் பித்துக்குட் டுலங்கும் லாம்எழுத் துருவமாங்காண், காண இசுறுயீல் கசப்புமதிற் காதின்வகைகேள் வியாகுமிதுபூணு மிதின்பேரு முற்றுமின்னு புகலு மிதுதானே நாலாமக்காம். (446)

நாலு மக்காமையு மறியச்சொன்னே னவிலு மாகாயம் தாமரைக்கா, யேலும் பச்சையி லொளிகலந்தே யிருக்கும் வட்டமாயினிப்புமாகக், கோலவுயிரொளி மூளைமுட்டுங் குறித்த எழுத்ததில் அலிபாகவும், ஆலமமைத்தா னலிபு நிலைபதின் பேர்சனுபறுமுகபத்தாமே. (447)

பத்து வகையொரு வீடுதனிற் பாற வீடைந்து பருந்துசொன்னேன், புத்தியறிந்தவ ரறிந்துகொள்ளப் பொருளை யுரைக்கிறேனொளிப்பில்லாமற், சுத்த பெரியவன் அலிபுமிரு கமலத் திருக்கும் வாறதனைக்கேளு, மற்றக் கதையிலே நினைக்கவேண்டா மதிப்புவிலையில்லாப் பொருளுமாமே. (448)

பொருளின் பெரியது கமலமாகும் புகலுங் கமலத்தின் பூவின் வாசம், அருளு மிருக்குது வாசந்தன்னில் அந்த வாசத்திற் கலப்புமாகுந், திரளு மணியொளி விளக்குமாகுந் திரியு மூச்செண்ணெய்யாசைபாகு, மிருளை விளக்கிய வொளிவுமாக விருக்கு மிறைசுடர் அலிபாகுமே. (449)

அலிபு நிலைதன்னை யறியச் சொன்னே னடியிற் சிறந்த மூன் றங் குலமாம், பலித மாம்பச்சை நிறமதாகப் பகரு மொருபதங் குலத்தின்மேலே, வலிய பொருள் வெள்ளை வடிவிலங்சி வண்டில் லாமலர் வானொளிபோல், ஒலியும் பொருள் றப்பில் ஆலமீனு மொளிவு மிலங்குமோ ரங்குலமே. (450)

இலங்கும் பொருடன்னைத் துலங்கநன்று யிதமரயுரைக்கிறேன் மறைப் பொருளைத் துலங்கு மொளிமுனைக் கீழதாகத் தூக்கி யுண் ணாக்கின் மேலதாகும், கலங்கா திருவிரு புருவத்திடை கண்டம் நிதானத்தி னேரேபாகும், மலங்காரமான கலிமாத்தன்னி லறிவு மிருபத்து நாலெழுத்தே. (451)

நாலா றெழுத்தினின் முஹம்மதென்ற நான்மூன் றெழுத் தையு மறியச் சொன்னேன், மேலாங் கலிமாவின் லாஇலாஹ இல் லல்லா ஹென்று மியம்புவது, கோல மாநடு அலிபென்பது கொண்ட கமலத்தின் வகையுஞ் சொன்னேன், மேலும் பதினொரு வெழுத்து மூண்டு மெத்தப் பெரியது கடையெழுத்துப், பாலாம் பலனிதைப் பின்னாற் சொல்வேன் பத்து எழுத்தையும் பகரக்கேளே. (452)

பகரு முதலாமும் இரண்டாம் லாமும் பாரச செவியிரு பிறத் திலாகு, நிகரி லாவிரு லாம்வயிற்றி னிற்கு மிருஅலி பிருவிழியி, ஹுகரு மிதினிடை அலிபொன்றுதானுற்ற வாய்மொழியுறு தியா குஞ், சிகர மேறிய மூச்சினோடே சேர்ந்தே யிருப்பது நடுவிற்கேளே.

நடுவில் அலிபை முன்னாலே சொன்னே னல்ல நடுலாமு மிதின் கூடத்தான், வடுவி லாவிரு லாமைக்கேளு வலமும் சலமுந்தான் வருமிடத்திற், கடுகி மூலத்தி னிருபிறத்திற் கனதி யாதம் ஹவ்வா வுமாகுந், தொடுத் அலிபோடு சொன்னேன் ஹேயும் தொகுத்த ஆகூவென் றெழுந்தமூச்சே. (454)

மூச்சும் பேச்செல்லாம் பிறந்தால்வரு முன்னே றறைந்தங்கே யிருக்கும்போது, சூக்ஷமுருவமா யெழும்பும்வாறுஞ் சுறுதி யெழுத்தையு மறியச் சொல்வேன், ஆச்சி யுதிரத்தோல் தசை மூளையு மமிர்தக் கடலைந்து மன்னை பங்காம், பாச்சு விந்தோடு நரம் பெலும்பு சவ்வும் நகம்ரோம மாறும்பிதா. (455)

ஆறும் பிதாவோடு மன்னையைந்து மாகப் பதினொன்று மமை யும்போது, கூறு மாகாயம் வாழ்வுவன்னிக் கூறுன தண்ணீர் மண்

கொழுகியொன்றாய் நூறு நாழிகை யாடிநிற்கு நுரையாய்க் குமிழி யாலையந்துநாளாங், கூறு மீராறு நாள்வரைக்குங்குமரி நெல்லிக்காய் போற்றிரண்டு நிற்கும். (456)

திரளும் அறுமூன்றிற் புன்னைக்காய்போற் றெளிவா யறுநான் கிற் றிரண்டவன்ன, முருநா ளுமையாறி லுதிரஞ்சேர்த்தே யொன் றாய் ஆமைபோ லுறைந்திருக்கும், அருநா ளாறுலு நாள்வரைக்கு மைந்துகோணமா யமர்ந்திருக்கும், பொருளா மாகாய மொருகோ ணத்திற் பொதியுஞ் சிரம்ல்லோ ஆறேழினில். (457)

ஆறெட்டுநாளில் நடுக்கோணத்தி லறுகோண வாய் லமைந்து நிற்கு, நேரெட்ட வொன்பத் தாறுநானி னெருப்புத் திரிகோண நெஞ்சில் நிற்கும். ஓரெட்டாம் பிறைபோலேசல முறையும் வயிற் றிலே யறுபதாநாள், பாரெட்டுத்திசை நாலுமூலை பரிவாயடி வயிற் பத்தாறிலே. (458)

அறுநான் கெழுத்தொரு வெழுத்துமாகும் அல்லா கூவுடன் யாஹூவல்லா, வரிவை புருடர்க்குந் தனியேபொரு ளார்க்குந்தெரி யவே விளங்காப் பொருளொருவர்க் கொருவர்தா னீயாப்பொருளு வந்தாலொருவித்தே யுருவாம்பொருள், கருவ யுருவமாய்க் காணும்பொருள் கலிமா வெழுத்தொன்றாய்க் காணலாமே. (459)

காணு மிருலாமும் அலிபினிற்குக் கானே கால்மேலுந் தலை கீழ்நின்று. பூணுமிருலாமும் மீம்கடுவிற் போடு முஹம்மது கூவல் லாவுமூணிப் பார்க்கவே பைந்ததுவா மூணர்ந்த அலிபைந்து லாமூனைமந்து, நாலும் ஹேயது மொன்றுமாகும் நுவலும் பனி ரண்டு எழுத்துமாகும். (460)

எழுத்து முஹம்மது நாலுமாகு மின்ன மிருநான்கு மிதுவே யாகும், அழுத்தி வலம்புரி யாஹூவல்லா வவன்பால் அலிபோடு நுக்கத்தும் ஹேயுஞ், சுழித்தேயிடம்புரி ஹூவல்லரெவனச் சுருப நிலையினா லறிவேயாகு, முழுது மறிந்தாலே முழுக்கிறங்கு முசியா முழுக்கல்லோவறியார்க் கெல்லாம். (461)

பழுது ஸனுவொடு பாவந்தீரப் பாங்கு மிதினாலே பறந்து போகு, மெழுது முத்திரை யதனினும மெழுத்தை யறியார்க்கு மெதுதானுண்டு, மழுது தொழுதாலு மழிந்துபோகு மகலாக தொருநாளும் ஸினுமுழுக்கு, முழுதுமெழு பத்திரெண்டு நாளின் முடியாவாண் பொண்ணு யுருவமாமே. (462)

ஆரு மாதந்தான் மூன்றுசென்று லங்க முருவெல்லாம் பொருந்திநிற்கும், வாருபெருநாலா மாதந்தனில் வழியா யுறுப்புக ளிருகோணத்தி, லாகம் பொருந்திய நகமும்ரோம மைந்தாந் திங் களிலணியுமலே, தேக வியாதியு மெழுத்துநிலே யிணையு மிருமூன்று மாதந்தானே. (463)

இருமூன்றெருமாத நத்துவார மெல்லாந் திறந்திடு மிருநான் கினி, லுருவஞ் சுருவந்தான் முறையொன் றில்லே யொன்பதும் பத்து முடலதுக்கு, மிருபத்து நாலு கலிமாநிலே யெல்லாமிணையும் பின் ரண்டெழுத்துச், சுருபத் தைவிட்டு மாவுக்குள்ளே சுழிகொண்டெ ழுந்திடு மெழுத்தைக்கேளே. (464)

எழுத்துக் கலிமாவி லாஇலாஹ இல்லல்லா வென்றகடைசி ஹேறயு, முழுது மாகவே முஹம்மதுற் றஸூலுல்லா சென்ற கடைசி ஹேறயு மெழுத்து மாவுக்கு ளிரண்டுமொன்று யிருந்து நடனந்தான் புரியும்போதி, லெழுத்துப் பாலனே மரக்கொடியா லெரியப் பாலன் பாற் சொல்லுந்தானே. (465)

சென்ற வுடன்பாலன் க்ஷணம்பிறந்து சிறந்த வகைபேச்சு மூச்சு மாகும் பண்டு நிறைந்திடும் வலதடைத்துப் பாலன் வன்ன மாய்ப் பாழுமாகும் சென்று மறியாதா னுலகுயிருமிந்த விதமல் லோவ மைத்தவாறு நன்றாய்ப் பதினெட்டுக் குதறத்தினி னளினம் பேச்சோடு மூச்சுமாமே. (466)

மூச்சுப்பேச்சுடன் பார்வைகேள்வி யுயிரு முசுப்புடன் வலுப்ப மில்லேக் காட்சிச் கலிமாவி லாஇலாஹ இல்லல்லாவென்ற கடைசி ஹேறயுஞ் சூட்சியாகவே முஹம்மதுற் றஸூலுல்லாவென வுரைத்த ஹேறயு, மூச்சியாகவே யிரண்டுமொன்றாய் மூலக் குகையினிலுறைந் திருக்கும். (467)

உறைந்து மூலத்தி லிரண்டுமொன்று யொடுங்கி நெருங்கியே யிணையும்போதி லிருந்து நெருங்கியே சுழியாற்சுற்று மெரியுந்தணற் சற்று மிணேதிடாது, சிறந்த குகைதனி லெழுந்தபுகை சிறந்த கம லத்திற் றுவும்போது, பொருந்து முயிரொளியுசும்பிடாது பொங்கு மூச்சது தொலேந்திடாது. (468)

தொலைந்தி டாமலே வெழுந்தபுகை சொல்லு வேனிதின்
பேரைக்கேளு, மிலங்கு மவனென்று சொல்லுவது மிகுதப்
பகையைத் தானெல்லாவரும், கலங்கா வுதிப்பென்றால் மூலமதிற்
கத்த பெரியவன் ஹேயுமாகுந் துலங்கு மறிவென்றால் 'முஹம்மதுற்
றஸூலுல்லாவுட ஹேயுமாமே. (469)

ஆதி யிவைரண்டு மெழுந்தபுகை யதுதா னினைவென்றே யறிய
லாகும் பார்க்குநினைவது மப்பின்வீட்டிற் பட்டவுடனேதான் பார்
வையாகுந் தாவும் புகைபித்தற் கேள்வியாகும் தாப மண்வீட்டி
லெழுந்தபேச்சு வாகும் புகைத்தாரை யடைத்ததென்று ளந்த வீட்
டிலினிலனுகிடாதே. (470)

அனுகி டாவப்பு நினைவின்றாரை யற்றால் விழிகுறு டாயிருக்
கும் வணித மனுகாத பேச்சில்லாமல் வாயு மூமையாம் வழியில்
லாதா, னுணிதங் கேள்வியு மற்றுப்போகு முற்ற பித்துட னிறமும்
போகுங் கனிதம் பெருந்தாரை யடைந்ததென்றால் ஹபாத்துமூச்
சுமே சுழன்றுபோகும். (471)

கழரும் வகைதனை விளங்கச் சொல்வேன் கலிமா வொழிந்தி
டாப் புகையின்வேகங் வழியாக் கலிமாவை கூவென்றோதி வருகு
மூச்சது முடலைவிட்டுப் மொழியுங் கலிமாவில் அகராம்ரண்டு
மூச்சை யிருத்திப்பா ருள்ளேசெல்லுய், ஒளியுந் தாரைதா
னடக்கும் போதிலொன்று மூரையாமல் வெளியேசெல்லும் (472)

சென்று லதுமீள வேகிடாது செத்தா ரெனச்சொல்வா ருல
கத்தோர்க, ணின்றசுடரெல்லா மொன்றாய்க்கூடி நினைவிற் சேர்ந்து
தான் வழிமறந்து பண்டுபோன்மூலத் தடைந்தீயும் பத்திக்கருகியே
நூந்துபோகு நன்றாய்ப் வகையெல்லா மறியவென்று னவிலு
வேனின்ன நயமதாக. (473)

# றூஹு வகை.

ஆகும் குதறத்து மலருடையவாவி யறுகோண மானகலை, சூடும் றூகைந்தின் குதுசியுட சுடரி னுவிதா னெழுந்தகாலை பாடுங் கவிக்குள்ளே சொன்னேனில்லை பாரப் பெரிதான கருப் பொருளைத் தேடக் கிடையாத வுலகத்துள்ளே தெளிவாம் பொருளினைச் சொல்லக் கேளே. (474)

சொல்லக் கேளுங்கா ளுலகத்தோரே சூழ்ந்த வுடலுக் குளைந்து றூஹு, வல்ல றூகொன்று நாமியாவாம் வகையாம் றூகொன்று நாத்திக் காவாம், பொல்லா றூகொன்று நாமியாவாம் போகும் வரும் றூகு நசீமாவது, வெல்லா றூஹுக்குந் தலைவனாக விருக்கும் றூகல்லே குதுசியாகும். (475)

றூஹு குதுசிதா னொளிவுமாக நிற்கு நயனத்தி னிடை கொலு வில், றூஹு குதுசிதான் ராஜாவாகும் றூஹுநாலுமே யேவலா ளாம், றூஹு குதுசிதான் றூகில் நின்றால் றூஹுநாலுமே யாடி நிற்கும் றூஹுதுசிதானவனைச் சேர்ந்தால் றூஹுலவுமே யழிந்து போகும். (476)

அழியா றூகல்லோ குதுசியாகு மதுதான் சகலமு மாட்டி வைக்கும், வழியா மனுஷறில் குதுசிறூஹு வல்லோன்றனென்ற கேள்வி கேட்கும், அருந்த றூஹுதானுலு மொன்று யாவியுருவாகி யமளிபடுந், தெளிவா முடலுக்கு ளைந்து றூஹுந் திறத்தைப் பொருந்தியே யிருக்கும்போது. (477)

இருக்கும் போதுதா னிராஜாவாக விலங்குங் குதுசியு நாலு றூஹும், வருந்தி வணக்கத்தி லறிந்திருந்தால் மடிவுமனுஷறிற் றெறியு நன்றாய்ச், சறுத்துப் பலபாவ நன்மை கேட்கிற் சாகாய் வாப் பழகிய பழக்கத்தாலே, நிறுத்தி யெனக்குக் கீழ் கொலு விருந்தாய் நீதான் செய்தவ னெனக் கேட்பதே. (478)

எனக்கு வலுமையோ வுனையல்லாம லெல்லாஞ் செய்தவ னீயே யென்றுங், தனக்குள்ளாகிய குலமென்னவே தம்பிரான் கேள்வி யொன்றுமில்லை, வணக்க மறியாத பாவிகளே வாழ்ந்து நாடோறு மிருக்கும்போது, கனக்கடலிலே லருந்த றூஹு கண்ணி னிதானத்தில் வருகும் போது. (479)

வந்தா லிருவிழி வானை நோக்கும் வகையா மிசுறூயீல் பார்வை யென்பா, ரந்தப் பார்வைதான் றூஹுநாலுமப்போ குதுசியை யறியும் பார்வை, யுந்த னுடலோடே யறிந்திருந்தா னுவந்து

தொழுது போமென வுரைக்கு, மந்த ராஜாவை யறியர் குல மாரோ வெனச் சொல்லிச் சிரசிலேறும். (480)

ஏறுஞ் சிரசினி னுறாஹூ மெழுப்பி யுடல் விட்டுக்குதுசியாகும், பேறும் பலன் பெற்ற குதுசிதானும் பெரியோன் பரத்திலே சேர்ந்து போகும், மேறிச் சுரசான நாலுறாஹூ மிறங்கு மூலத்தினிறைந்திருக்கும், கூறு மிதுநாலு றாஹானிரிங் குதாயின் றிரு முன்னே யுருவாமினி. (481)

உருவமாய் நின்று சாட்சி சொல்லு முடையோன் பரத்தை முன்னறியா ரெல்லாஞ், சுரூப முருவெல்லாஞ் சாட்சி சொல்லுஞ் சொல்லும் பிழை யெல்லாஞ், செய்தா னென்றும், பெரிய முனிவோடு பாவ நன்மை பெலத்த துன்பமு நிவை நாலுக்கு, முருவிற் பொருந்திய வைந்துறாஹூ மூலகோ ரறியவு முறைக்கிறேனே. (482)

அறியும் றாஹூதான் குதுசியுட ஆளாம் பணிவிடை நாலுறாஹூ மறியு முடலுக்கு னிடது மாங்கா யந்தக்கரு நீரைச் சிரசிலேற, நிறையுங் குதுசிதான் றாஹுதானு நீண்ட கரமாண்டு முள்ளே வாங்க, நிறையு முருவிரு நித்திரை தானில்லையி அடி வாங்கக் கேள்வி போரும். (483)

கேள்வி பார்வையு முறக்கமானுற் கிடத்திக் கிழேதான் சடத்தை வைக்குஞ் சூழு மூலகெலா மலைந்து பார்த்துச் சொல்லும் நால்றாஹூ நகீமாவது, நாளுங் கொடிதான பதவிதமு நமக்கு நமக்கென்றே நாட்டங் கொள்ளுஞ், சூழுங் கொடும் பிழை விளக்கும் றாஹூ சொன்னே னுபியா றாஹூமாகும். (484)

றாஹூ நாத்திக்காக பசியுந் தாகஞ் சுகியும் பலவெல்லாம் பொருந்துவதும், வாகி னமறிவோடு பல புகழு மறிய நாமியா றாஹூமாகு, மேகன் றாகைந்து மிருக்குமிட மிறையோன் குதுசிதான் சிரசினிற்குர், ஏகம் பொருந்திய நாமியாவு மிடது மார்பினிற்றரிக் குந்தானே. (485)

தரிக்கும் பலவெல்லா நரகிற்கான திரிகோணத்தீயினடுநெஞ் சிலே கருகி யுரு நிற்கும் நகீமாவது கனத்த ஈரலினுபியாவா மறியும் வகை யெல்லாந் தனக்கே யென்று வாகை விழியிலே யாடி நிற்கும், உரிசை பொருந்திய நாத்திக்காவு முறைந்தே யிருப்பது பல்லுக் குத்தி. (486)

பல்லுக் குத்திதான் பரப்பு வியாம் பாங்கா யடிவயிறதிலிருந்து நல்ல ரசனையு நால்வகையு நாடி யுண்பது நாத்திக்காவாம், வல்ல புகழான வைந்துறாகில் வடிவு குதுசியை யறியார் குபிர் அல்லா வருளான குதுசியாகு மந்தக் குதுசியை யறியவென்றால். ()

அந்தக் குதுசியைத் தானறிந்தே அதைதான் றிருனேமுன் னிறுத்தவென்று, லந்தப்பதினாலுமுஷாஹதா விலைந்தாம் வணக்கத்தி லாகுமுக, மூர்தஜெம் கூத்து லாஹூத்தினு முழக்கமாகிய ஆகுத்தி னுஞ், சிந்தைத் தெளிவைவீ தெளிவதாக்கித் தெளிவு மிலங்கியே யிலங்கும்போது. (488)

இலங்கும் கிருங்கடலக்கனத்கி லிருந்த வளைவெள்ளை விசை கொண்டாடு, மூலகு நிலையீமான் வட்டத்துள்ளே யொளிவு முச் சுடர் வளைநடுவி, லிலங்கும் நிலையுட்டாள் வட்டத்துக்குளிலங்கும் பளிங்கியில் அரூபரூபம், அலையா நிலையுருத் தோன்றுமாகி லதுதான் குதுசியென் லறிந்துகொள்ளே. (489)

அறியுங் குதுசியின் விபரந்தனி லனுப்போனுரைகிறே னறி வாளர்க்குக், குறியுமிருமுக நயனத்திட கூறும் பொறுளொன்று யிருந்தகனும், அறுகோணவாசி கண்ணேவிதா யதுதா னுருச் செய்த பரம்பொருளா முருவி னுருவில்லா தொளிவுநாத னுண்மை குதுசு யென் லறிந்துகொள்ளே. (490)

கண்டகருவுத்கு னினைவுமொன்றுய்க் கலந்த தணலாகுந் தெளிவின் சுடர், நின்ற வளைவட்டம் வால்நடுவுள் நுக்கத்து றான் வளை யிருவாலுமாய்ச், சென்று மயல்றாஹூ ஜூபிலி தன்னைச் சேர்ந்தே யனுதினஞ் சிறந்திருக்கு, மென்றும் பழுதில்லா திறை யோன் சுடரிதுதான் குதுசியென் றறிந்துகொள்ளே. (491)

எல்லாங்குதுசிதா னெழுந்தகோல மிலங்கும் பளிங்கியிற்றெரி யும் ரூப, மெல்லோர்க்குந் தோன்றும் வணக்கந்தனி லிறையோன் குதுசியு மெவ்வகையு, மெல்லாங் கருவிலே யமைத்தவாறு யெந்த வெழுத்துட வனுப்பமொன்றூற், செரல்லுமெழுத்தொரு மூன்று மாக்ச் சூலென் றுரைப்பது சுழிமூலமே. (492)

சூலென் றெழுத்தனு மூன்றினுலே சூனுண்டாகிய மதலையாச்சு சூலைச்சுமந்தது முஹம்மதிய்யா சூலாலவர்நாம மிறசூலாச்சே, பாலனுருவாச்சு சூலினுலே பார வகையெல்லா நிறைந்துபோச்சு, மேலுங் குதறத்திருபத்தாறு மேன்மை பொருந்திய வயணங்கேளே.

வயணங்குதறத்தி லிருபத்தாறும் வகிர்ந்து பொருந்திய விதத் தைக் கேளுஞ், செயமா முயிர்நிலை யட்டகோரணஞ் சேர்ந்தேயுயிர் நிலை பொருந்தி நிற்குஞ் சுகமா யனுசீறு மைந்தேயாகுஞ் சொல்லு முதிப்போடு நினைவுபுத்தி மயமா மறிவோடும் அக்கினுமருள் மற்றும் கிம்மத்துப் பகுமூமாமே. (494)

ஆகுமுணர்வோடு மிரக்கங்கல்வி யறியும் வேறுப்போடு றாஹா னியும், வாகி னிருபத்தாற் குதறத்தாகும் வளவை குளுமையுஞ் சூடு நீரு, மேக வளவோடு கொடிவளவு மிச்சைசோபமுஞ் சபூறு குணமாகும் வகைபத்தும் அஹதிய்யத்து மறியக் கினுபத்து மருளக்கேளே. (495)

அடுவுங்கினுபத்து மைந்துசொன்னே னதிலே பிரிவெல்லா மறியச்சொன்னேன், பொருளுங் கிதாபத்துச் சுயமகிழ்ச்சி புளிப்பு மினிப்போடு கசப்புமாகும், புரளுங் துவர்க்கைப் மிலைப்புப் பேச்சும் பொங்கும் கிதாபாது மொருபத்தொன்றூங், திரளு மூலகெல்ல மனதி லொன்றிப் திருந்தனவனென்று வணங்கவென்றூர். (496)

என்றுங் காமப்பால் விதங்களெல்லா மெடுத்தே யுரைத்திட்ட னுலகத்தோர்க்கு, மன்றே பெரியமனுதினுப னறிவிலறிவாக அரூப ரூப மைன்று மழியாதா னுலகுயிரை யிந்தவிதமாக வமைத்து வைத்து நன்று நெறிநன்மை தீமைரண்டும் நடப்பாலறியவும் நாட்டினனே. (497)

நாட்டி னுலமாக்க ளெல்லாருக்குந்தா யைமா யுரைத்த முப் பாலிதாகு, மேட்டி லெழுதினேன் முப்பாலையு மிதமா யறிந்தவர் குருவுமாகும், பாட்டினுரைத்தின் பயனறியார் பாரிற் குருவென்று பகரொணுது, நாட்டி லறியாத மூடர்க்கெல்லா நல்ல முஷாஹதா வினி மேற்சொல்வேன். (498)

இனிமே லுரைப்பது குருவின் முறையெல்லா நபிமாரு நடத்து முறை, துனியாவிலுள்ள குருவின்மாருஞ் சூழ்ந்த வொலிச்குத்தூ பெல்லோருதா, னிதமே யிதுதானே நடந்தமுறை நேராமுறை யெல்லாம் வீணுமென்று, மதினு முஹம்மது நபியுஞ் சொன்னூர் மருகரப்புலி தாமுஞ்சொன்னூர். (499)

அலியார் குரைத்தன ராலநபியால நபிக்கல்லா சொன்ன தெல்லாம், அலியாரொலியான குத்தூபுமாகு மபூபக்கரும் றுது மானுக்கும், அலியா ருலகுள்ள குருமார்கெல்லாம் அல்லாவருள் பெற்ற குத்தூபுமாகும், அலியின் ரகசியம் அறிந்தாரில்லையல்லா வொருவனே யறிந்த நாயன். (500)

நாயகமான அலியார்சொன்னூர் நபியா முஹம்மது சொன்னு ரென்று, பாவியாகாம லுலகோர்க் கெல்லாம் பதினு லுபதேசஞ்

சரிபாய்ச் சொன்ஞு, ராகு முபதேசந் தனேவிலகி யனேகவிதஞ் சொல்லி யழிப்பதெல்லா, மாவுயொடுங்கையில் இபுலீசுதா ஹறி யாச்சுருக்கிட்டு மாட்டுவான. (501)

மாட்டைப்பிடுங்கிய கடுங்காகம்போன் மலக்கங் காப்போரு மிரப்போர்களுங், கூட்டி முடிப்பார்கள் விசளமெல்லாங் குப்பா ரென்றறியாகற் கொள்வோ ரீமான், வாட்டப் படுமந்த நரகந்தனில் வாகைப் படுவார்கள் மீளாரென்றுங், தீட்டி மிருமுனே வாளொடுக் குஞ் சிங்கப் புலிமாவா வருளிச்செய்தார். (502)

செய்யு முபதேச முலகத் தோர்க்குச் செய்யு திறஸூலுமலிக் குச் சொல்ல வைய மனுவோர்க்கு மலியார் சொன்னுர் வையமனு வோரே குருமார் தம்மைப் பையப்பழகியே மணமறிந்து பஞ்ச வாணுலேத் திரு மென்று மெய்யுஞ் செயல்கண்டாற் பாதந்தொடு மெல்லாஞ் சரியென்ருக் குருவாகுமே. (503)

குருவை யறியாதார் குருடாரங் குருவேகதியென்ருற் கோடி பாவங், குருவே பிறைபென்ருற் குயிருமாகுங் குருவே நானேன்ரு னரகாளுவா, னுருவை யுடலுமே யூணுறக்க முடையு மலஞ்சல மெதுக்கமாசை, யரிவை சுகமின்ப துன்பம்விடா ரசதி மறதியு மழுகுகோலம். (504)

கோலம் புனேந்துதான் சீராவுள்ள குட்டிச் சுவரைத்தான் குருமாரென்ரு, லாலம் படைத்தவன் றனக்கொவ்வாதே யண்ணல் முஹம்மது நபிக்கொவ்வாதே, நாலு மறையுடன் ஷறகுநாலு நாலு இமாமுட னுலு பீருஞ், சீலஞ்சறகுள்ளோ தமக்கொவ்வாதே செய் யுஞ் செய்யுஞ் செயனல்ல குருவுமானுல். (505)

நல்ல செயலுள்ள குருமார் தம்மை நாட்டி லுரைத்திடும் வகையே தென்ருற், சொல்லும் ஷறஹதிற் குருவிமாமஞ் சூழ்ந்த ஜமாத்பது தேசம் பெற்ருேர், சொல்லுந் தரீக்கத்திற் பீரல்தென்று சொன்னுற் குபிரல்லாற் சகமேயில்லே, நில்லும் ஹகீக்கத்திற் பீறு நாமு நிலத்திலுபிரெல்லஞ் சரியாகுமே. (506)

சரியா மஹுரிபத்து தேறிப்பாருஞ் சாற்றுங் குருவேறு நாமும் வேருே, வரியபெரியோனு மலக்குகளு மண்ணல் முஹம்மது நபிமார் களு, மூரிய படைப்புக்கள் குலமுநாமு மொன்றே குலமல்லா லுயர்த்தியுண்டோ தாத்திற் பெரியவர் சிறியவருந் தன்னே யறிந்த வர் தலேவராமே. (507)

தலத்தில் வேந்தனு யிருந்ததாலுஞ் சாதியுயர்த்தியா யிருந்த தாலும், பெலத்தில் வேங்கைபோ லிருந்ததாலும் பெரிய வயதாக விருந்ததாலும், குலத்தி லனந்தம் பேரபேட்சையாலுங் குறையாத் திரவியங் குவியலாலு, நிலத்திற் சிங்கார வழிகினலு நிறுத்து முத் தியோகப் பெலத்தினலும். (508)

ஓர்மைக் குறையாம லச்சந்தீர்ந்தே யுலகி லுயிரெல்லா மொன்றே யென்றும், ஆர்குங் கிருபையாய் நடப்பதுவு மனேகங் கொடுமையும் பொறுப்பதும் பாரில்வழிகெட்ட மனுடர்க் கெல்லாம் பரிவாமறிவதை பயிற்றிவைத்தே ஆர்க்கு மூடனுய் வெளியிற் றேன்ற வறிவுக்கடலெல்லா மடக்குவானே. (509)

நாலுவேதமுஞ் சுமந்தநாலு நளினங் குறையாத மொழியினு லும் கால மொறுநூறு தலைமுறையாக் காமில்த் தனமாக வந்த தாலுமால நிறைந்திடுங் குருமாரெல்லா மனேக விதமெல்லாம் கொடுத்ததாலுங், கோலம் புனைந்திடக் குருவுமாகுங் குறுவென்று ரைத்திடக் குபிராகுமே. (510)

குருவை யறியவே குறியேதென்றுற் கோலமெவர்போலு மவ ரிருப்பார், உருகுங்கிருபையு மீபிரக்க மொன்றுங் தெரியாதே யெனக்கே யென்பா, ரரிவை புருஷர்க்குஞ் சரிநிதான மல்லும் பக லுமே சரிநிதானே மொருமூச்சாகிலு மொழுகிடாம லுருவா முட லுயி ரோர்மையுள்ளார். (511)

அடக்கமுடையவ ரறிவுடையோ ரவரே குருவென்று மரிய லாகு, மெடுக்கும் ஷறகுள்ள பாதைநாலு மெட்டுமக்காமுட னித வகையுந், தொடுக்குந் தவநிலை பலஞானமுந் தொகையிலடங்காத தொலையாப் பொரு, ளடக்கு முறையெல்லாங் குருவின் மார்க்கு நாயன் முஹம்மது நபிசொன்னுரே. (512)

நபியாமுஹம்மது மூலகோர்க்கெல்லா நவின்ற வுபதேசந் தன் னைக்கேளும், புவியின் மனுவெல்லால் தனைவணங்கப் புறக்கான் றனைவல்லோனிறக்கி வைத்தான், பவமதாகாமற் படைப்பனைத் தும் பாதையறிந்துதான் பணியச் சொல்லிக், கவியின் மறைநாலிற் சொன்னபடி ஹபீபு முஹம்மது நபியுஞ் சொன்னர். (513)

சொல்லுங் கலிமாத்தான் லாயிலாஹ இல்லல்லாப் பொருள் மஹறிபத்திற், சொல்லும் கூவென்ற மூச்சுறாஹூ சோதி யாரென்

ருல் அல்லா அது, இல்லென் றுரைப்பது மொன்றே பொரு ளெங்கு நிறைந்தது மதுதானென்றும், இலாஹி யினியில்லை இஃதொழிய வெங்கும் வேறில்லை லாவென்ற சொல். (514)

சொல்லுங் கலிமாத்தான் லாஇலாஹ இல்லல்லா வென்றுல் ஷரீ அத்தாகும், இல்லல்லாஹுவுதகன் தரீகத்தாகும் இன்னல் லாஹுஹக் கீத்தாகும், சொல்லும் கூ வென்றுல் மஃறிபத்தாஞ் சுழியா முஹப்பத்து யாகூவாகும், எல்லா நிறுத்திய கூவுமீமும் இருத்தி நினைவிலே மிகுதிதாத்து. (515)

ஏத்திவாய் மொழி செவியிற் கேட்ட வெதுவுஞ் ஷரீஅத்தைச் சேருமிது, பார்த்துப் பலகலைப் பொருளை யெல்லாம் மகுர்தாற் றரீக்கத்தின் பாங்குமாகு, ரேத்தி வணக்கத்தின் றெரிசனை தானி றுத்தும் ஹகீக்கத்தி னிலையுமாகும், பார்த்துப் பலமொழி யுடனு யிரும் பகுர்தால் மஹறிபத் தாகுர்தானே. (516)

தானே யுருவமு முடனு மொன்றுய்த் தருக்கீ கிணங்கிடில் முஹப்பத்தாகும், ஈன மனுகாதான் றுனெனவே யெல்லாநிரப்பமு நிறையுமாகிற், றுனுயிருப்பது சமதெனவே தரிக்கு நினைவிலே மிகுதிதாத்து, மீனமனுகாத நினைவே அல்லா வெந்த விதமென்று விபம்பக் கேளே. (517)

இயம்பக் கேளுங்காண் குறுஆனிலே யேகனிறக்கிய ஆயத் தொன்றில், நயமாம் அக்காஅு றப்பி யென்று நாயனியிலோர் நினைவே யென்று, மியம்புக் தவமெல்லா நினைவே யாகும் இபா தத்து றப்பி அஹதா யென்றுர், செயமா யறைந்திடு மறுசுதனிற் சிறந்த கிந்தீலாய் வகுத்த வல்லோன். (518)

வல்லோன் குதறத்தார் லறுசுதனில் வள்ளல் முஹம்மதை கிந் தீலாக்கிச், சொல்லத் தொலையாத தருக்கீக்குடன் சுரூபம் பதினுறு முகவிளக்காய், நல்ல பதினுறு முகமிலங்க நாட்டும் பதினுறு மிபா தத்தாக, வெல்லும் பதினுறு இலகுமாகும் விளக்கம் பதினுறு வழியாகுமே. (519)

பதினுறு விதக் கான்வாதானும் பதினுறுவித முஷாஹதாவும், பதினுறுடன் கூடப் பதினுறுண்டும் பாங்கு பெறு மியாதிங் கிருபத்தெட்டு, மதிலே பதினுறு முஷாஹதாவில் ஆறு முஷா ஹதா அந்திரமாம், விதமா முஷாஹதா யாதுக்கெல்லாம் வெற்றிக் கான்வாதா செய்யுதுசைன். (520)

# பதினாறு முஷாஹதாவின் விபரம்.

செய்யிது ஸாதாத்து பாக்கியாகும் செய்யிது சுல்த்தானுல் ஆரிபாகும், செய்யிது அல்பியா றாபியாகும் ஸெறா ரியாசுல்தானுல் பாக்கியாகும், செய்யிது சுல்பியா ரூபியாகும் செய்யிது நாத்தி புல்க்குபுரியாகும், செய்யிது முறுக்கிபுல் றபாயியாகும் செய்யிது அல்பியா காதிரியாகும், செய்யிது சஸ்தா சிற்றியாகும் தபக்காத்தியா சிற்றியாகுமாமே. (521)

சிற்றியாவுடன் காதிரியாய்ச் சிறப்பாங்காண் வாதாபதின் மூன்றுக்கு முயர்த்திருசூனி யாசமாகு மொருபத்து மூன்றுக்கு புயர்த்தியாகும், உயர்த்திக்கான் வாதா பதினறுக்குள் விளங்குமுஷாஹதாப் பதினலேயும் சத்தியமாகச் சொல்லுகிறேன் சகவித்தையுமறிந்து பாரே. (522)

பாரி விசுமியா வாசிலென்று பறக்கும் சிஸ்தியாக் கற்பமுண்டால், ரூத்தி புலக்கனி சன்னதமா மஸ்துக் குபுரியா வெட்டுக்குத்துத் தரித்த மாந்தாரி மூச்சடக்கர் தாப தண்டமு முளவணக்க, முரைத்த முஷாஹதா ஆறுமிதே யோர்மை நிலை கெட்ட அந்திரமே. (523)

மேலாம் நாசூத்து மலக்கூத்துடன் விளங்குஞ் ஜெபறாத்துவர கூத்துமாங், கோலஞ் ஜெம்கூத்துப் பாகூத்துடன் குதறத்துலாஹூத்து தம் கூத்துமா, மேலாம் வணக்கமா யொன்றுக்கொன்று விதமாய்ப் பதினறு மறியாதவர், கோலம் புனைந்து தான் குருமாரென்று குபிரில் வருத்துவார் பரமறியார். (524)

பரத்தை யறியவே பலவிதமாய்ப் பாரிற் குருமார்கள் பகர்வதெல்லாம், நிறத்த கதிர்மதி நினைத்தபடி நிழலும் பரவெளி நக்ஷத்திரங், திரத்த கண்ணுடி திருவுளத்தைக் திசைவீ ரொரு பேரையிருவிழியே, நிறைதத வன்னத்தை நிலைநிறுத்த நிசமா யிருவருங்காபிராவார். (525)

ஆன குருமுறை யுலகுதனி னருளும் பதினறு விதங்களெல்லாம், பூணிப்பாகவே புகழ்வதற்குப் பொருளாங் கலிமாவைப் பிரித்துச் சொல்வேன், இன்னன் அல்லாஹூ முஹம்மது தம் எந்த வழிக்குமே யிதுநிலையாஞ், சொன்ன கலிமாத்தான் லா இலாஹ இல்லல்லாஹூதான் சொல்வதாமே. (526)

சொல்லும் பதினறு பீர்மார்களுஞ் சொல்லு முபதேச மிருபத் தெட்டு, மெல்லாருஞ் சொல்லா ரெவர்க்கு முண்டு மிதுவே ஷரீ அத்தினுபதேசந்தங், னெல்லாக் கலிமாவு மிறைநாமமு மெங்கள் முஹம்மது வரமாமென்றும், இல்லல்லா ஹூவென்றே யிருந்த இதுதான் ஷரீஹத்துபதேசமஞ்சே. (527)

அஞ்சு உபதேசஞ் ஷரீ அத்தாகு மறியும் இல்லல்லாஹூ வென்னவுங்கொஞ்சும் அல்லாஹூ ஹஸ்கல்லாஹூ கூறுந்தாக்கத் தின் குருமந்திர, மிஞ்சு மகுறாபும் யாக்கரீமுங் அற்ற கீழுடன் யாறஹீமும் துஞ்சாவகை ஹஸ்கு மவுஜூதென்றுந் தோத்திர மஞ்சும் ஹக்கிகத்தாகும். (528)

அஞ்ச தோத்திரம் குன்ஹூவென்று மதிலேகுன் னென்று ஹூவல்லாவென்று, மிஞ்சிடாமலே ஹூவென்பதும் இணைத்த கூவுடன் ஹஸ்கேன்பதும், அஞ்சு மிதுதானே மஹரிபத்து ஆதி யெனச் சொல்லும் ஹூஅதுவும், அஞ்சியாகூவும் யாஹூவல்லா அரிய முஹப்பத்து யாஹூவும் மீமும். (529)

யாஹூவு மீமுமாகுமென்று மிதுதான் முஹப்பத்து நிலையு மாகும், வாழ்விடாமலே ஹேயும் மீமும் வருந்தி கும்மென்றே யிருத்துவதும், ஆயும் காபோடு மீமுங்கூட்டி யதுவே கும்மென்றே யிருத்துவதுந், தாயுமாகவே யோரெழுத்தைத் தரிக்கு மீமல்லோ முஷ்ஜிஸாத்து. (530)

யாதுவகையாகு மிருபத்தெட்டும் யாது ஹக்குமே லேது மில்லை, யாது வாய்மூடு மீமல்லவோ இதுதான் வாய்பேசா தெழுத் தென்பதே, யோதி யோதியே பெரியோர் சொல்லு மூமை யெழுத்தென்ற மீமதுதான், சோதி மீமது கூவத்துதான் தொல்லு முஹம்மது அல்லாவிதே. (531)

இதுதான் பதினறு வுபதேசமா யெடுத்துப் பதினறு குருவுஞ் சொல்லுவார், அதிலே தவமுறை யைந்துவிதம் அறையுந் தஜல் லியும் விரித்திச் சொல்வே, னிதமு முடலுமாய்த் தலைசுழற்றி நீளக்குரலோசை தஜல்லியாமே. (532)

ஆன வணக்கந்தா னவரவர்க்கு மல்லும் பகலுந்தான் கல்வி யாகுந்தானே வணங்கிடு மூச்சையெல்லாந் தவமு நிலைபட மூனி யாகும், ஞானி நினைவெல்லா மொருபொருளே யொருமித் திருப்பது

சிற்றியாகும், தானே தானல்லாமல் வேறென்றில்லைத் தன்னி யறிவது கவியுமாமே. (533)

கவியுர் தலத்திலே யெட்டுவகை காலுநாசூத்து மலக்கூத் துடன், குவியுஞ் ஜெபறாத்து லாஹூத்துடன் கோல ஜெம்கூத்துபா கூத்துடன், தவியா காகூத்து தம்கூத்துமார் தலகு மிருநான்கு மக்கா மிதுவாம், புவியி னிறைந்திடும் குருமார்களே புகலு மிரு நான்கு தலமுங்கேளும். (534)

தவமாநாசூத்துப் பரவெளியாக் தனது இடப்புற மார்புமாகு, நிலேபாம் ஷரீஹத்து மண்ணின்கோல நீதி ஆதந்தான் புருவின் ரூபந்தலையை வலறாகச் சுழற்றித்திக்கிர் தரிக்கு நெஞ்சிலே பார்வை யாக, நிலையா யிருவிழி யிடதுமார்பி னிறுத்தும் பிசுமிலோர் நினைவின்மேலே. (535)

மேலா மலக்கூத்துக் குபின்மாடமும் விளம்பு மிருகோணந் தரித் திருக்குங், கோலமிருநாசி நடுநிலேயிற் கொளுத்திப்பார்வையிற் குருவை நாட்டிங், சொல்லு மலக்குட பார்வையாகுஞ் சேருந் தவத்தோடே சாத்தையேற்றி யெல்லாத் தவநிலை மலக்கூத் தென்றே யிருக்குஞ் ஜெபறாத்தை விளம்பக்கேளே. (536)

கேள்வி ஜெபறாத்துக் கண்ணுடியாங் கிறு மூக்கோண நெருப் பின்விடு, மீளும் ஹகிக்கத்து மிருபார்வையும் விளக்கும் புருவத்தி னிடையை நோக்கிச், சூழு மாகாயம் அன்னரூபஞ் சரூபம் அலி பென்ற நிலையுமாக, நாளும் ஜெபரூத்து நிலையுமாகு நவிலும்லக் கூத்தை நன்றாய்ப்பாரே. (537)

பார்வை யிருவிழி சுழற்றிக்கீழே பள்ளி மக்காமிலே பகருங் காற்றுக், கூறு மலக்கூத்து மஹறிபத்தாங் கோல நுபுவ்வத்தின் குறிதெரியுக், தேறு மலக்கூத்துக் காட்சியெல்லாஞ் சிறந்த வழி யெல்லாம் பொருவுமதில், றாறு விதங்காணு மலக்கூத்திலே நுவ லுஞ் ஜெம்கூத்தை நோக்கிப்பாரே. (538)

பாரும் ஜெம்கூத்து முஹப்பத்துமாம் பதித்த வுயிர்க்கு துபுதையுங்காணு, மேலும் விழித்தாரை நிலையிற்சேர்க்க விளங்கும் பொருள் தப்பில் ஆலமீனும், ஆருந் தவமெல்லா நபியிறஸூலது தான் றாகுட பாங்குமாகும், பாரும்விழிமூடி நினைவினலே பாரப் பாகூத்தைப் பகரக்கேளே. (539)

பக்ரும் பாகூத்து முஹப்பத்தென்று பதினாலு விதநுபுவ்வத் தாகும், கூறும் றாஹானி யுதிர்வதுபோற் கொழுந்து விளக்கிலே நிறுத்திப்பார்க்க, ஆரும் விளம்பாரே முஹம்மதுட வழகுவிறை யவன் வணக்கமாகு நேராய்விழிமூடி நினைவிற்பாரு நீதியாகூத்தை நிசமாய்ச் சொல்வேன். (540)

நிசமாயாகூத்தை முஃஜிஸாத்துநிற்குங் குதிசியாமுருவரும் ரண்டும், வசமாங்குத்றத்தின் வாசிலாத்து வரையும் நுபுவ்வத்து சிபத்துமாகும் பிசகா வுயிர்நிலை ஆவும்கூவும் பேசுமொழியிலே பறுல்சுன்னத்து கசகா நினைவான பார்வைகாணுங்கருத்தி லறிவது காட்சியாமே. (541)

காட்சிதம்கூத்து முஃஜிஸாத்து ஹக்குத் தானல்லா லொருவ ருண்டோ பேச்சுமூச்சவன் பேருமவன் பெலமுங்கோபமு மவனே யாகுஞ், சூட்ச யவணிவனே சொல்லுஞ் சொல்லுஞ் செயலாக வழங்கி நிற்குங், தாழ்ச்சி ரட்சியும் பாவந்தனை தாத்தி லுயிரெல் லாம் பரத்தினாலே. (542)

பரமா யிருநான்கு மக்காமுடையபாங்கை யுரைக்கிறேன் பாங் கருக்கே, உரமா நரசூத்துப் பரவெளியா முடலி லுனதிட மார்பிற் சொன்னேன், தரமா மலக்கூத்துக் குபின்பாடமுந் தகைக்கு ளிரு நாசி சுழிமுனையாங் காமாஞ் ஜெபறூத்துக் கண்ணாடியாங்காணும் புருவத்தி னிடையாகுமே. (543)

ஆகூலாகூவில் உலமாஈபி யதுதானுடலுக்கு ளிருபுரிசை, யேக னறுஷிலே ஸிந்திலா வீரேழுலகமு மிலங்கிநின்ற, தாகுஞ் ஜெப றூத்தி னுடலுக்குள்ளே ஐனுங்கலிமாவுள் ளிருக்திப் பார்க்க வாகு சுவர்க்கசிங் காதனத்தில் வள்ளல் முஹம்மது கொலுவிருந்தார். (544)

இருந்தார் பதினாலு நாற்பத்தொன்று மிதுதான் யாகூத்தா முடலுக்குள்ளே, பொருந்திமையெனுங் கலிமாத்தனைப்போதம் பிசகாம லிருத்திப்பார்க்கிற் சிறந்த நுக்கத்தது அலிபினாலே சிறப் பாய்ப் பதினொரு விலாயத்தோடே, யுறைந்த ஆகூத்து முடலுக் குள்ளே யொன்பதுவாச லடைத்துப்பாரே. (545)

பாரமக்காமான தேழுமது பாரிலுரைத்தது தம்கூத்தினினூறு முஹம்மது மிறையுமுன்னாள் நுக்கத்திலொளிவான நூறிலங்கும்,

வேறே பிரிந்தவதாரமாகி வேணவிதமெல்லாம் முருவெடுத்துப், பாரின் முஹம்மதாய்ப் பிறந்தவள்ளல் பாங்கா யறுநான்கு சிபாத்த தாமே. (546)

அறுநான்குவிதஞ் சிபாத்தெல்லாம் மறுநாள் கக்ஷாமமைந்த தாலே யுருவா, யிருந்தல்லோ வுலகையாண்டு முருவி னொருபாலி னுண்டை சென்று, திருவிற் பிறந்தருத் திருவிற்சேர்ந்து திருவு முருப்பண்டு போலொன்றாகி, யுருவாய்த் தீர்வைதான் றிறக்கும் போதி லொருவன் றிருமுன்னே முஹம்மதென்றும். (547)

என்றழைப்பான முஹம்மதென்று மேகன்றிருமுன்னே பெவர் பிழையுங், கொண்டுபொறுத்துமன் றூடுமெங்கள குதாயுமுஹம்மது மொன்றேயாகும், விண்டுவுருண்டு மொன்றேபொருள் விளங்கும் தம் கூத்துவுடலுக்குள்ளே, யன்றுகருநாத னொளிநினைவு மதுதானி றப்பமா யாகுந்தானே. (548)

ஆகமெழுப்பிய கருநினைவும் ஆதமுஹம்மதி னட்சரமா, மாக வெழுப்பிய கருநினைவு மகத்திற்குடிகொண்டே யிருக்குமது, ஆகந் தனைக் கருவலைதெழுப்ப வந்தக்ருவகத் துள்ளிருந்தே, ஆகாக்கரு நினைவா யிருக்கும் ஆதமுஹம்மதென் றறியுமகை. (549)

அறியப்பெரிதான முஃஜிஸாத்தை யணுவுங்குறையாம லறிய வேணு, மறியுமுச்சுடர் வணக்கமொன்று யதுதானுருக்காபு நிலையு மாகு, முறையாக்கடற்பத்தி வணங்கும்வாறு முரீது நிலையென்றே மொழியிலாஹூ, மறியந்தாலியு மெக்கினின்மயிலரிய தவஞ்செய்யு மதலாலே. (550)

நாலாம்வேதத்தி லிறைவகுத்தா னபியாமுஹம்மதும் அலிக்கு ரைத்தார், பாலரிருபேர்க்கு மலியார்சொன்னார் பாரிற் குருமார்கள் அனைவோருக்கு, நாலுமதுஹறபுக்காரருக்கு நாலிமாம் நபியும்மத் தோர்க்கும், ஆலநபிவழியொலிகுத் தாபானவர்க்கும்ஹசனுசை னுரைத்ததாமே. (551)

உரைத்த பதினாலு குருவின்மார்க்கு முண்மை அசனுசைன் குருவுமாகும், வரத்தைப்பொருந்திய விருபாலர்க்கும் வள்ளலலிப் புலி குருவுமாகுங், கருத்திற் பெரியவனலிப்புலிக்குக் காட்சி முஹம்மதே குருவுமாகு, மொருத்தரறியாமல் முஹம்மதுக்கு முடையோன்ரகசிய முரைத்ததாமே. (552)

உரைத்தகரசியங் குருமூறைதா னொருபத்துநாலு மொழுங்காய்ச்சொல்லிக், கருத்தில் வழியான பாதையாருங் கனதிமுக்காமைந்தும் வணக்கமெட்டுங், குறித்தமேலானகுரு முறைதான் கூறினேனிதிலொன்றதிகம், பொருத்து முஷாஹதாப் பதினாலுக்குட் பொலிவு முஷாஹதா ஆறுகுமே. (553)

ஆறுமுஷாஹதா அந்திரமாவதின் மேலிருநான்கு தவநிலையாங் கூறுமிருநாங்கு முஷாஹதாவி குறித்த முஷாஹதா வொன்றதிகந் தேறு முருபஃ தெட்டியாதிற் றெளிவுநிலையாது மொன்றே சொன்னேன், ஆறுமறிந் தொலிமார்களாக வரியதவமினி யருள்வதாகும். (554)

ஆகும் பறுலொடு சுன்னத்தையு மரியதவ நிலையாரில்நிலை, ஆகங் கடந்தோர்கள் பாவந்தீரவாதி பெரியவன் தோஸ்மாக, வோ பெரியவன் வணக்கங் கோடி யெதுக்கு மிதுதானே முதல்மை யென்றும், வாகு பெறுமொலித்தன முண்டாகும் வணக்க முஷாஹதாவழியைக்கேளே. (555)

வழியாந் தொழுகையைத் தொழுதுகொண்டு வாய்கையுசும் பாமலிருந்துகொண்டு, தெளிவாய் மனதுக் குணிலை வினாலே தீர்க்கமாகவே உலுவுஞ்செய்து, நெழியாத் தொழுகையை நினைவினாலே நினைத்துத் தொழுதுதான் முடிந்தபின்பு, சுழியா முனைமேல் மூளையின் கீழ்சாதிநெற்றி கீழ்ப்புருவத்தோடே. (556)

புருவத்திடை நடுமுகந்தனிலே பொங்கியிலங்கி வொளிவை நோக்கி, வருடிக்கலிமாவின் அல்லா வென்று வருமுதல் அலிபெழுத்ததனைப். புருவக்குழி தொட்டு நெற்றிமட்டும் போதநினை வினில் நிலைநிறுத்தி, யுருவா முஹம்மது முதல்மீம் தன்னை யுற்றகுழி தொட்டுக்கீழே நீட்டே. (557)

நீட்டித்தலைமேலுங் கால்கீழுமாய் நேராய் மூக்குட கொழுந்துமட்டுந், தேட்டமாகிய அல்லாவென்று செப்பும்லாமதில் முதலாம் தன்னைக், கூட்டிமீமுட வாலைத்தொட்டுக் கோர்வையாகக் கீழ்த் தாழ்வாய் மட்டும், பூட்டியிறகுலி லுரைத்த றேயைப்பொருத்தி யெழுத்தோடோ கீழேவாங்கே. (558)

கீழாங்குரவளை நெஞ்சாங்குழியதின்கீழ் இல்லென்ற லாமை நாட்டியாளுங் கமலத்தி னடுநிலையினலவி பினிலையொளி வாக வெண்ணி மீளுஞ் சுழலாக வெழுந்த மூச்சை வீணுய்ப்போகாமலெழுத்தைக் கூட்டிச், சூழமூலத்திலிரு தெழுப்பிச் சொருகிவிழி யோட சுடரை நோக்கி. (559)

சுடராமிருவிழி நடுவிலாடுஞ் சோதிபெரிய வனிலைவுமாகிற் திடமாய்வருமூச்சை மூலந்தனிற் றிறத்திலிருத்தியே யெழுப்பினெஞ்சில், அடவாச்சரத்தோ டேயெழுவித்தைப் பூட்டி யந்த வெளியிலேடழியை நாட்டி, யெடுத்தசாரத்தை யாகூல்லாவென் றிலங்கு மொளிவிலே சொருகிப்பாரே. (560)

பார்வைசோராமற் சாமோயாமற் பாங்காய்ச் சரத்தை மூன்னிறுத்தும்போது, தேருந்திருச்சொல் ஆ வென்றிருத்தித் தெளிவாய்கூவென்று வீசவேணும், ஏறுஞ்சரத்திலே நினைவைப் பூட்டியிலங்கு மொளிவிலே விழினைய நாட்டிற், கூறுமூஷாஹதாவிது போலில்லைக் குணமா யறிந்திதை யிருந்துபாரே. (561)

இருப்பி லுறக்கம்போற் காணும்போதி லிருந்தவிடத்திலோரொளிவு தோன்றுந், தருப்பில்லாதவ னிபுலீசென்றுந் தன்னைமறந்திடும் வலது பக்கஞ். சிறப்பாய்வருமொளி மூஹம்மதென்று சிரசுபணிந்திடும் புவியைநேக்கி, சிரப்பிவருமொளி சந்திரனு நீண்டமுடிமேலே கண்டதானல். (562)

கண்டவொளி றப்பில் ஆலமீனுக் கருணைப் பதங்கண்டு தொழுது கொள்ளும், விண்டுஆயிரந் தேன்மலராய் விரிந்தேயிலங்கி நின்றூடும் போதில், வண்டு மலராட வடங்கும்போதி லதிலே அலிபென்ற வெழுத்தைக்காணு, நன்றாய் நோக்கிப், பாரையுத்துருகி நல்லவானமும் புவியுங்காணும். (563)

காணிமாகாய மூலகந்தனிற் கண்ணுமணிக் குத்துபுதயங்காணு, மூணிப்பார்க்கவே விண்டதுக்கு ளுருவந்தெரியவே கண்ணுடியிற், றேணுமவரவர் சுரூபம்வனந் துய்யபீங்கானிற் பாலுமேந்திப், பேணிக்கொடுக்கவே குடிக்கக்கண்டாற் பெரியோன் மூஹப்பத்திலான தாமே. (564)

தாகமோகங்க ளின்பதுன்பந் தாத்தைவெறுத்தொரு பாத்தை நாடி, மேவிச்சிலையுட மூச்சினுலே விளம்பும் விழியன் பாலெழுத்தை யேற்றிப், பாவந்துலைந்தபின் கிலுறுகபி பார்த்துக் கருத்தோடே பலன் பெற்றோர்க்கு, வேகஊவுலியாக் குத்பேயென்று மின்னமொலியென்ற நிலையிலாகும். (565)

ஆதம் பொருந்திய பீர்நில்லைமை யறிவாலறிவோர்க் கிங்கறிவு சொல்வேன், ஏக இருதாரை யொருதாரைக்கு ளிலங்கு மிதினொளி

யிருபாகமும், வாகாமை னெனும் கலிமா லே வானஞ் சுழற்றியே யிருத்தி யேற்றி, யேக நிலயிலே யேற்றி மூட்டி யிருத்திப் பார்க்கவே யிலங்குந் தானே. (566)

இலங்குஞ் ஜெம்கூத்தி னிலேயைப்பாரு இதழு மலராக விரிந்த சோதி, துலங்கு மாயிரந்தேன் மலராய்த் தோன்று நடுநிலே நுக்கத்துமாக, விலங்கு நுக்கத்தைப் பார் அலிபுமாக விருக்குமீமென்ற வெழுத்து மாகும், கலங்கிமீமுட தலேவிரிந்து காணுந் தோஸ்தம் பொற்கணே யாளியாம். (567)

கணேயாளிக் குள்ளே அகார வட்டம் கண்ட பனிரண்டு மொன்றுகவே, யிணேயுங்காபுகூ கியுமாகு மிருக்கு மீமைந்து மெழுத்துமாகு, மணேயுமீ ராறெழுத்து மொன்று யடங்குந்திருட்சூட்ச மதுவுமாகு, மிணேயில்லாச் சுடருதயங்காணு மென்னுவினிச் சொல்ல விளங்கவில்லே. (568)

இல்ல மிலங்கிய அலிபிரண்டு யிணேயும் ஐனெனுங் கலிமாத் தன்னே, மெல்ல விளக்கியே மௌனமூட்டி மூடி யிருத்திப் பார் மூச்சடக்கி வெள்ளி மாமதி கதிர்சூட்டி விருத்தம் விளக்கிய வேதத்தாலே இலாஹி யென்பது ரேகை பூட்டி யெழுதி நாற்பத்து மூன்று கோணம். (569)

கோண நாற்பத்து மூன்றுமாகக் குறி கொண்டாடிய மண்டபத்திற், றேனு நபுவ்வத்து நிலேநின்றுடூர், துலங்குநவ ரொத்னத் தோடு சாமாம், நூறு பொருந்திய தேகூஷமாக நுக்கத்துப் பொருந்திய நடுநிலேயு மாணிக்க மூத்துப் பவளம் பச்சை மக்காமன் மருமூதர் நிலே தெரியும். (570)

தெரியு மொளிவாக இலங்கும் வட்டந் தெளிவாய் நடுநிலே சுறுமா, வட்ட முறையுங் கண்ணுடி யொளிவுக்குள்ள மூகவரையில்லா விளம்பாலனும், வரையுஞ்சிபத்தைப் பொருந்திப் பார்த்தால் வள்ளல் முஹம்மது வடிவு தோன்றும், அறியும் பீர் நிலேயிதுவே நிசமனேக விதஞ் சொல்வார் குபிராகுமே (571)

குவியு மூலத்திற் சுழன்ற வாய்வு கோண மாறுக்கும் கருநிலேயில், எவ்வி எவ்வியே வருகு மூச்சு யாஹூவெனச் சொல்லி யெழுந்த மூச்சு, ஓவ்வி யிருக்குயா மைந்தெழுத்து மோதும் யாஹூவும் வாவும் சீழும், செவ்விழி நாசி வாயடைத்து சேரவெழுத்தைந்து மிருத்திப்பாரே. (572)

இறுதிச் சடத்தை யுள்ளடக்கும் போதி வெல்லா மறந்திடு மிலங்கு மொளி, தரித்த கமலத்தி நடுநிலேயிற் றகுத்தன்றெழுதிய

பத்தெழுத்தி, னிறத்த குதறத்தின் மலரின் மேலே நீதியெழுத்தெல்லாம் பொருந்தி யொன்ருய், வகுத்துந் தவசின் மேல் வாலிபனுய் வகையில்லா முகத்தொளிவு தோன்றும். (573)

தோன்று மொளிவாக அலிபு நிலை துலங்கும் ரூபத்தின் மடியின் மீதிற், கூண்டுபருதிபோ லொளி சிறந்து குதறத்திலங்கிய நுபுவ்வத்தின் மேற், பூண்டு பணியாடை யணிந் திலங்கப் பொன்னின் குடம் போலே தனமிலங்கக், கூண்ட குழைக்காதிலணிந்ததோடு குமரி ரூபமாங் குழந்தை போலே. (574)

குழந்தை கரத்தினிற் குருனிருக்குங் கூவென்றேதியே குயின் மொழியு, மெழுந்த குதறத்தின் மடியின் மீதி லிருக்கு மகுருக்கு முஹம்மதியா, வெழுந்த குதறத்தி னேசை யெல்லாம் ஆமீனுமிறெழும்புமது, வெளிந்த ஆசக்கு மகுருக் கொன்ருர் சேர்ந்தங் கருப்பதை நினைவு கொண்டால் (575)

கண்டாருலகத்தின் காவீ காணுர் கமாலும் எக்கினென்ற காட்சியாலே, கொண்டாராசையு நபுசு நாலுங் குறித்த நினைவல்லா வென நிறுத்தி, நின்றநினைவெல்லாம் கூவோடல்லா நினைவுறாகுல்லாமூச்செனவே, கண்ட குதறத்தினிலைக்குங் கீழே காணும் பராத்தினிலையுமாமே. (576)

நிலையா நுபுவ்வத்து நின்றிலங்கு நினைவிலறிந் திடத்தெளிந்த விழி கலக நிறைந்திடு நரகுந் தன்னைக் காணுதொரு நாளுங் கனவிலுமே, யிலங்கு நுபுவ்வத்துப் பாஹூத் தென்னு மிதுதான் மக்காமன் மகுமூதென்று, மூலகு நிலையெல்லா நிறைந்திருக்கு மூலமா முஹம்மது நபியுஞ் சொன்னுர். (577)

சொன்னுர் மூஹம்பது நபியிறசூல் சூபில ஜெம்கூத்து நிலைதெரியுமண்ணின் மலிக்கென்னு மாலீக்கென்னு மக்காமன் மகுமூது நிலைக்கு மேலே, சொன்னேன் ஜெம்கூத்தி நிலையாவது சுல்த்தான சீருவென்றெவர்க்குந் தோன்ற, வின்னங் குதறத்தில் ஆரிபீனுமெங்கள் முஹம்மது நபியுஞ் சொன்னுர். (578)

நபியா முஹம்மது வுலகோர்க் கெல்லா நல்ல மகிழ்ச்சியா லேது சொன்னுர், புவியிற் பொருளெல்லா மொளித்த பொருள் பொருளை வெளியாக விழித்துச் சொல்வேன், கவியாலிருக்கு தென்றிருக்கு கொணுது கண்ணின் மணி போலே கருத்தில் வைத்துப், புவியிலறிந்தோர்க்குத் தாள் விலையேபோது மிதற்கு மேற் பொருளிலையே

இல்லென்றுரைப்பது மிரையினும மில்லாவிலங்கிய ஜெம் கூத்திலே, சொல்லுமலராட்டங் குதரத்தாகும் சல்தானசிறுவும் நுக்கத்து மாகும் இல்லென் றெழுத்தது மலிபுவாகுமிருத்த மீமுலே மிருதிதாத்து, வல்லமீம்தலை கமலமாகும் வானந்தெரியாத ஆகாயமே. (580)

ஆகாயந்தனிற் குதூபுதயமதுதான் றாகென்று மறியலாகு, மேக கதிரொளி குதூசியாகு மிருகோணம் பிறைமுச்சுடராம், வாகாய்த் தலைசூடி யிருப்பது தான் வல்லோன் காவோடு கியுமாகு, மாகும் கலிமாத்தான் கண்ணாடிபோ லறியும் அல்லாஹு வென்ற கூட்டில். (581)

கூட்டும் பொருளெல்லாஞ் ஜெம் கூத்திலே கோலம் பாகூதைக் கொழுகிப்பார்க்கி, லாட்டமலரெல்லா நுபுவ்வத்தோடு மந்தக் கடலிலே கல்புமாகுஞ் சூட்டும் ஓங்காரவட்டமீமாஞ் சூழ்ந்த நிறம் வெள்ளை நடுநிலையி, லாட்டம்வைரம் பொன்பவளம் பச்சையதுதான் மக்காமன் மகுமூதமே. (582)

இதுதான் மக்காமன் மகுமூதுமா மிதுக்கு நடுநிலை சுறுமாநிற மதுதான் முஹம்மது வடிவுமாகு மதுக்கு நடுவே நின்றிலங்குஞ் சுடர், ரதுதான் குதறத்துல் ஆலமீனுமந்த வொளிவல்லாஹு வெனவே, யதின மாய்வந்து மூடியிரு னருளில்லாக்கள்ள னிபுலீசுமே. (583)

கள்ளனிபுலீசைத் தவுபாவெட்டுங் கண்டாலிறையேயுன் கலிமாநிலை, கொள்ளுநீமானு மதுதான் சொன்னேன் கோல மிசுலாமு மிதுதான் சொன்னே, னள்ளத்தொலையாத அல்லா பொருளால் மனிதர்க்குக் கொள்ளையாக, வுள்ளபடியேதா னொளிப் பில்லாம லுலமா முஹம்மது நபியுஞ்சொன்னர். (584)

சொன்னபதினாலு முஷாஹதாவுஞ் சுழியி னிருபத்தெட்டி யாது மென்னயாதாக விருப்பத்தாலு மெழுத்தை மாற்றியே, தலை கிழாக முன்பின்னாய் மாற்றிப் பிடிக்கறியார் மூடர் படும்பாடு காடா மென்று மின்னம் பெரிதாகு முகுதிதாத்து மெழுத்தை யிருத்தினு லிது போதுமே. (585)

போதமாகிய வணக்கந்தன்னிற்பொங்கி யுடலெல்லாம் பொது மிமீறி, யாதியருளினு லைந்துபோரா யாவியொளியாகி வணங்கி நிற்கு நீதி பெரியவன் றனையுங்காண்பா னினைவு பெருமையு மறியலாகுஞ் சோதி வணக்கந்தா னிதுபோலில்லைச் சுவர்க்கம் பலதெல்லாம் விழியிற்றோன்றும். (586)

தோன்றப்பணிவிடை செய்யும்வகை சொன்னே னிதுக்கொரு சூக்ஷங்கேளீர், உண்ட அசனத்தை நாளுக்குநா ளொவ்வோர்பிடி யாகக் குறைப்பதுவும்விண்டு வொளியாக்கு மூச்சையெல்லாம் வீணுப்போகாம லெழுத்திற்சேர்க்க வண்டருலகுபா தாளஞ் சென்று மவனிவன் மீளும் வேறதாமே. (587)

ஆகும் வணக்கந்தா னுறங்கும்போதி லசதிவருகாம லிருக்க வென்றால், வாகாய்வரு மூச்சைத் தவறிடாமல் வருந்தி யாகூவை வாசி லாக்கிச் சாவிமரணமு மணுகிடாம சற்றுகிலுநீளே வொளிர் திடாது, வாகாம் வணக்கந்தா னுலகத்தோர்க்கு மனதுவாக்குட னுரைத்திட்டானே. (588)

உரைத்தகுருமுறை யுலகுதனி லொருநூறு கோடிவிதங்க ளுண்டும், பொருளெல்லா மறிந்துபார்த்தேன் வழிநாளடந்தவாறிஃ தாகுமே, யெழுத்திலடங்காதே யினிச்சொல்லநா னிதுபோது மறிவுள்ளோர்க்கெல்லாம், வருந்தி நிலையான மூப்பாலேயும் வணக்க முஷாஹதாத் திட்டமெல்லாம். (589)

திட்டமாகவே நிலைக்கச்சொன்னேன் தீன் தீன் முஹம்மது மஹரிபத்தை, மட்டில்லாமலே கடலாய்ச் சொன்னேன் மக்கா முஹம்மது மஹரிபத்தை, வொட்டில்லாமலே யுதறிச்சொன்னேன் னுண்மை முஹம்மது மஹரிபத்தை, வெட்டி வெட்டியே பிளந்து சொன்னேன் வேதமுஹம்மது மஹரிபத்தை. (590)

புட்டுப் புட்டல்லோ வகுத்து சொன்னேன் புறக்கான் முஹம்மது மஹரிபத்தை, சட்டமாகவே விரித்துச்சொன்னேன் சாகா முஹம்மது மஹரிபத்தைக், கட்டுமட்டாகப் பிரித்துச் சொன்னேன் ஹபீபு முஹம்மது மஹரிபத்தை, யெட்டுவிதத்திலே யறியச்சொன்னே னெங்கள் முஹம்மது மஹரிபத்தை. (591)

சொன்னார் முஹம்மத ரொசியத்தாகச் சூழ்ந்தபுவித் தீனோ ரெல்லோர்க்குந்தான், முன்னுனுரைத்திடுர் தவநிலையை முகியா வணக்கத்தின் வணங்கினுலு, மென்னவிதத்தாலுஞ் ஷறகைவிட்டா லென்ஜை யிகழ்ந்தவா னிபுலீசாவா னின்னந்தவம்பாழா நரகாளுவா னெந்தன் ஷபாஅத்து மவர்க்கில்லையே. (592)

எந்தன்ஷறகான வணக்கமெல்லா மிறையோன் குறுவானி லிறக்கிவைத்தா, னிந்தனைசெய்து ஷறகைத்தள்ளி நிலைக்குந் தவ மெந்தன் மறையிற் சொன்னு, னெந்தன் ஷறகைத்தா னெகிழ்த் திட்டாலு மெவர்க்குஞ் ஷறகேதிங்கெனச் சொன்னுலு மூந்தப் பெரியவன் முனிவு பெற்று மூதேவியென்று மூடுகிவெட்டே. (593)

வெட்டுங்காரத்தின் வாளிளைத்திடாமல் வீச்சொன்றுடனுண்டாய் விழத்துணித்தா, லெட்டுச் சுவர்க்க முமிவனுக் கீழ்ந்தேயிறைக்கு மெனக்குமே தோழனாவான், வெட்டாதிருந்தாலென்றும் மத்தோர்க்கு வேத முஹம்மது பிணையுமில்லை, மட்டில்லாக் குருனாயத் தோன்றின் மன்னானிறை சொன்னான் மயக்கந்தீர். (594)

மயமாங்குறு ஆனிலிறையோன் சொன்னான் மனுட லிசுலாத்திற் றொழுகை விட்டாற், பயமத்துப்போன காபிராகும் பயஹாம்பர் பல ஹதீதுஞ் சொன்னார், நயமாங்காமீதும் காமிலோடு நயமாரொலிக் குத்தூபுலத் தோறுஞ், ஜயமாஞ் ஷறகைத்தான் றறுக்குச் செய்தாற் சம்தாய மில்லைக் காபிறானார். (595)

காபிரிசுலாமுஞ் சரிதானென்பார் கத்த பெரியவ னமைத்தானென்பார், பாவநன்மையுஞ் சரிதானென்பார் பலதுமவனது செயலே யென்பார், கோவியாமலே மார்புதனிற் குளிர்ந்த சந்தனந் தன்னைப் பூசி யாவியெழும்பவே மழுவைக்காய்ச்சி யழுத்திச் சொருகிடு மெழுதாரையில். (596)

இட்டமழுவோடு சந்தனமு மிரண்டுஞ் சரியாக விருக்குமானாற் கெட்டபயல் சொன்னான் பலஞானத்தைக் கெடுமை புகழ்ச்சியுங் கரி யென்னலாம், எட்டுவிதத்திலே தெரியச்சொன்னே னின்ன மெமது சொல்கேட்டவர்க்குப், பட்டாலினிவந்து பலன்பெறுமோ பாரில் வணங்காரே பாவியாகும். (597)

பாரில் வணங்காதோர் பாவியென்றும் படித்துப் பொருள் கண்டு வணங்கவென்றுங், கூறினேனிதை மஹரிபத்துக் குணமாமெனச் சொல்லி வுலகத்தோர்க்கு ஆரும் பொருள்கண்டு தவமே செய்ய வறியார் தமக்கெல்லா மெலிதா மின்னம், வாறாக ஞான ரெத்ன மாலைவகை யையுரைத்திட்டே னறிந்துபாரே. (598)

அறிந்து பாருங்காண் ஞானரெத்ன மதினுமதிகாமம் பிசுமில்குறம், இறந்துபோகுமுன் தீனோர்களே யான்சொன்ன பிசுமில்குற மதனைப், பொருந்தியதிலுள்ள பொருளைப்பாரும் பூவிலாருண்டும் பொருளுரைக்க, வருந்தியதின்படி வணக்கஞ் செய்தால் வல்லபெரியவனருளிலாவார். (599)

வல்லோ னருட் கடற்கடுகிலான வாக்கு முனதுடனேர்மையாகச் சொல்லுங்காவிய மிதுமூன்றையுஞ் சுருக்கியானந்தக் கலிப்பா வொன்றி, லெல்லாப்பொருளையுங் கடுவொன்றுக்கு ளேழுகடலுள்ளே படைத்தவாறாய், அல்லாவடியாரி னபியுமத்தி லறிந்தோரொலியாகக் கூறினனே. (600)

கூறும்பொறுளான ஷறகறியேன் குதாயே யொருநாளுந் தொழுதறியேன், வேறும் பெரியோர்களிடஞ் சென்றயான் றேர்ந்துபடித்திடும் பொருளறியேன், பாரிற்கொடிதான பாவமெல்லாம் பாவிமுழுதுமே சுமந்தபயல், பீருமுஹம்மதென் றெளியபயல் பெரிய பிழையெல்லாஞ் செய்தபாவி. (601)

பாவியான்செய்த பெரும்பாவங்கள் பதினாலுலகுபோற் பதினாயிரம். பாவியான்செய்த பிழையனைத்தும் படைத்த பெரியோனே பொருத்தருள்வாய் பாவிப்பயலையும் மற்றோரையும் படைத்தோனிரு பதி தனில்வாழ்விக்கப், பாவியானுந்தன் தான்பதம் பணிந்தேனு பணிந்தேன் பாவிதானே. (602)

பாவியாகாம னுலகத்தோர்க்குப் பாரக்கடலதனை யுடைத்துவிட்டே, ஞவிலழியு முன்றனை யறிந்து மறியாப்பாத்தையு மறிந்திடுங்காள் காவியாவிலே யழியாமலே ஹபீபுமுஹம்மது ஷறகின்படி, யாகுமுமின்க டவமுஞ் செய்தா லவனேயிவனுகுந் தானவனே. ()

தானே தானவன் ருனுனவன் தம்பிரானவ னெம்பிரானும், ஆனவகையோடே பொருந்திப்பார்த்தே யறிவினாலறி வறிவிற் கூட்டும், மீனமாகவே யவனுனென்று லிபுலீசிற் கெட்ட இபுலீசாகு, மானங் குலையவே கணவாயைந்து மரித்து நரகத்திற் றுஞ்சுவாரே. ()

துஞ்சுஞ் சக்கராத்துக் கணவாயொன்று தோன்றுங் கபுரினிற் கணவாயொன்று, கஞ்ச மகுஷறிற் கணவாயொன்றே யரியதிராசினிற் கணவாயொன்று, மிஞ்சும்பாலத்திற் கணவாயொன்று மெத்தத் தளம்பியே நரகானுவான், பஞ்சமனுடரே பகரக்கேளும் பரத்தையறி யார்க்குத் தனிமையாகும். (605)

ஆகுமூலகத்திற் றனிமையாகு மரியச்சக்கறாத்திற் றனிமையாகு, மேகுங்கபுறினில் நிலைமையாகு மிருவர்கேள்விக்குந் தனிமையாகும், வாகு மகுஷரிற் றனிமையாகும் வரையுமேட்டினிற் றனிமையாகும். பாகுந்திராசினிற் றனிமையாகும் பாலங்கடக்கவுந் தனிமை யாகும். (606)

ஆருந்தனிமைதா னறிந்திலார்க்கு மறிவினருளெல்லா மறிந்த பேர்க்கும் ஏகநிறைய னருளினலே யெல்லாத்தனிமையு மெளிதா மின்னம், வாகுபெருமூழிப் பதிதனிலே வாழ்வா ருலகத்தாற்றோன றியத், தாகுமுப்பாலின் வகைகளெல்லாந் தாணியறியவு முரைத்த முத்தே. (607)

முத்துப் பவளமு மாணிக்கமு முரைபுட்ச ராகம்கோமேதக, மற்றக் கதையல்ல மஹரிபத்தை மகிழ்ந்து சரமாகத் தொடுத்த மாலே பெற்று தெவர்க்குமே யுலகந்தனி லிறையோ னருள்பெற்று லெற்று மெற்றும், வித்தை மதமல்லப் பொய்யுமல்ல வேதாம்பர் சொன்னரிதின் பெருமை. (608)

பெருமையுரைக்கவும் வலுப்பமில்லேப் பெரியோர் படிக்கவுங் கேட்டிருந்தா, லொருவர் மனதுக்குட் டரித்தபல னெருகோடி. ஹச்சுப்பலனுமாகும், பிரியமாகவே முழுதுங்கேட்டார் பெரியோ னபிமார்கள் கோடிபலன், வரிசைப் பொருளிலே கொஞ்சங் கொஞ்சம் வலுமை யவர்மட்டும் படித்தபேர்க்கு. (609)

படித்த பேர்க்கெல்லா காருஹஜும் படைத்தோன் ரகசியங் கடனுனதால், முடித்து முழுதுமே படித்தார்பலன் மூகியாதெழுது வாரிமையோ ரெல்லாம், படித்த பொருட்கண்டு பலபேர்க்கெல் லாம் படைத்தோ னினத்திலே தோஸ்துமாகும், அடித்தான் மீனே யிலே வெள்ளி திங்க ளதபாயுலுவுடன் திட்சைசெய்தால். (610)

செய்தவுபதேசம் பாத்திஹாலைச் சிறப்பாயோதியே பேர்கட் கெல்லா, மெய்யா யவர்செய்த பாவமெல்லா மேனிதனே விட்டுக் கழன்று போகும், வைய மனுவோடு வாழ்ந்திருப்பார் வாழ்வா ருலகூழி காலமட்டு, மையமறவேதா னுலகத்தோர்க்கு மறியவுரைத் திட்டேன் ஆமீனுமீன். (611)

காமப்பால் முற்றிற்று.

ஆ பாடல் 3-க்கு கூடிய திருவிருத்தம் 610, காப்பு-1 ஆ 611.

மஹரிபத்து மாலே முற்றுப்பெற்றது.

---

O2,M4NPM3,M
N48

இதனுள் அடங்கியிருக்கும்.

# பொருளின் அட்டவணை.


| நெ. | விஷயங்கள். | பக்கம். |
|---|---|---|
| 1. | பிரசித்தப் பாயிரம் ... ... ... | 3 |
| 2. | முதலாவது பொருட்பால் ... ... | 6 |
| 3. | மஹரிபத்து மாலை ... ... ... | 7 |
| 4. | கலிமா விளக்கம் ... ... ... | 9 |
| 5. | பன்னிரண்டறின் விபரம் ... ... | 10 |
| 6. | இரண்டாவது அருட்பால் ... ... | 14 |
| 7. | இமாமுடைய நிலை ... ... ... | 15 |
| 8. | பாசக்கானவர் செயல் ... ... ... | 16 |
| 9. | பீர்நிலை யறியும்வகை ... ... ... | 17 |
| 10. | மசலாக்கேட்கு விபரம் ... ... ... | 18 |
| 11. | தாத்து வகை ... ... ... | 28 |
| 12. | சிபாத்து வகை ... ... ... | 30 |
| 13. | ஹவ்வா பிறந்தது ... ... ... | 67 |
| 14. | மூன்றாவது காமப்பால் ... ... ... | 73 |
| 15. | நவக்காம மறியும்வகை ... ... ... | ,, |
| 16. | மாஹ வகை ... ... ... | 82 |
| 17. | பதினாலு முஷாஹதா விபரம் ... ... | 90 |


பொருளின் அட்டவணை முற்றிற்று.

---

Printed at Shahul Hameedia Press, Madras 5